MRD 436

# விதியும், தன்னம்பிக்கையும்

(எமர்ஸன் கட்டுரைகள்)

52-2

M. A. A. Annamalai,
PALLATHUR,
RAMNAD DT.

Acc. No: 2068
R65

பிரசுரம்: 45.



எமர்ஸன்

# விதியும், தன்னம்பிக்கையும்

(எமர்ஸன் கட்டுரைகள்)

தமிழாக்கியோர் :

வி. ஆர். எம். செட்டியார்

திரு. சு. நடராஜன்

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை :: திருச்சி

1947. 1.50.

*Serial No. 45*

# EMERSON'S ESSAYS ON "FATE & SELF-RELIANCE"

*(TAMIL TRANSLATION)*

Copyright

First Published : April, 1947

Price Rs. 1—8—0

STAR PUBLICATIONS, PUBLISHERS,
Palakkarai :: :: Trichinopoly.

Printed at the Madras Ripon Press, Ramachandrapuram, Pudukkottai State, for Star Publications, Trichinopoly P. 1. C.
Ty. 9(A)-Copies 1000.

# பதிப்புரை

**விதியும், தன்னம்பிக்கையும்** என்னும் இந் நூல், அமெரிக்க வேதாந்தியும் ஞானியுமான **எமர்ஸன்** (R. W. Emerson) எழுதிய FATE, Self-Reliance என்னும் இரு கட்டுரைகளின் மொழிபெயர்ப்பாகும். **விதி** (FATE) என்னும் கட்டுரையில், விதியின் வலிமையையும், அதைக் கண்டு அஞ்சாது, துணிவுடன் ஒவ்வொருவரும் தத்தமக் கேற்பட்ட சுதர்மத்தையும் பொதுநலத்தையும் கைவிடாமல் தன்னலமற்ற பணி புரியின், விதியே துணை செய்யுமென்று, எமர்ஸன் விளக்கியிருக்கிறார். **தன்னம்பிக்கை** (Self-Reliance) என்னும் வியாசத்தில், விதி வலிதெனினும் அதை வெல்லத் தன்னுறுதியும், தளரா முயற்சியும், கடவுள் அன்பும், நீதியும் நேர்மையும், உண்மை நேசமும், உள்ளத் துணிவும் மனிதனிடம் நிறைந்து விளங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். தன்னம்பிக்கை யுள்ளவன் விதியைக் கண்டு ஒருபோதும் அஞ்சான்; விதி, அத்தகையோனுக்குத் துன்பமின்றித் துணையே புரியும் என்பதை, இந் நூல் நன்கு விளக்குகிறது. நம் பாரத நாட்டு ஞான மணிகளான கீதை, உபநிஷத்து, புராண இதிகாசங்கள் முதலிய பல நூல்களின் கருத்துக்கள், இவ் வியாசங்களில் ஆங்காங்கே மிளிர்வதைக் காணலாம்.

**விதி** என்னும் வியாசத்தை மொழி பெயர்த்தவர், திரு. **வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.** அவர்கள்; **தன்னம்பிக்கை** என்னும் கட்டுரையைத் தமிழாக்கியவர், **திரு. சு. நடராஜன்.** இவ்விரு நண்பர்களுக்கும் எமது நன்றியாகுக.

திருச்சி,
14-4-1947
ஸ்டார் எண்: சரு-சு-கூ

ஸ்டார் பிரசுரத்தார்.

# எமர்ஸன் வரலாறு

ரால்ஃப் வால்டோ எமர்ஸன் (R. W. Emerson) அமெரிக்காவில் போஸ்டன் (Boston) நகரத்தில் 25—5—1803-ல் பிறந்தான்; ஹார்வேட் சர்வகலாசாலையில் படித்து, 1821ல் பி. ஏ. பட்டம் பெற்றான்; 1833 வரை 12 ஆண்டுகள் ஐரோப்பா முழுதும் சுற்றி உலகியல்பறிந்தான். பின்னர், அமெரிக்காவிற்கு வந்து, தனது ஆழ்ந்த அனுபவங்களையும், ஆராய்ச்சிப் புலமையையும் ஆங்காங்கே பல பிரசுரங்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதி வழங்கினான்.

எமர்ஸன் அரிய தத்துவ ஞானி, வேதாந்தி, ஞானபண்டிதன், கவிஞன்; பெரிய சொற்பொழிவாளன். அவன், நமது பாரதநாட்டின் சிறந்த கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகளையெல்லாம் நன்கு ஓதி உணர்ந்தவன்; பகவத் கீதை, உபநிஷத்துகள், புராணங்கள், இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்கள், சாகுந்தலம், சித்தாந்த ஆகம நூல்கள், குரான், ஜந்தவஸ்தா முதலிய நான்மணிகளிலிருந்தும், ஜர்மானிய, பிரஞ்சு, கிரேக்க, ரோம, இத்தாலிய, பாரசீக அராபிய நூல்களிலிருந்தும் பல கருத்துக்களையும், மேற்கோள்களையும் எடுத்துத் தன் வியாசங்களில் தெளித்து வைத்திருக்கிறான். இவன், 'மனிதன் ஆன்ம மயம்; ஆன்மாவே இறைவன்' என்னும் அத்வைதக் கொள்கையை உடையவன்.

எமர்ஸன், தனது இறுதி நாட்களை கன்கார்ட் (Concord) என்னும் கிராமத்தில் அமைதியாகக் கழித்து வந்தான்; 27—4—1882-ல் ஆத்ம சமாதியடைந்தான்.

எமர்ஸன் எழுதிய நூல்கள் பல :

1. Nature (இயற்கை); 2. The American Scholar (அமெரிக்கப் புலவன்); 3. Two Vols. of Essays (இரு கட்டுரைத் தொகுதிகள்); 4. Poems (கவிதைகள்); 5. Representative Men (ஆதர்ச புருஷர்கள்); 6. English Traits (ஆங்கிலேயரின் தன்மைகள்); 7. The Conduct of Life (வாழும் வகை); 8. May Day and Other Poems (மே தினம் முதலிய பாடல்கள்); 9. Society and Solitude (சமுதாயமும், தனிமையும்); 10. Letters and Social Aims (கடிதங்களும், சமரச நோக்கும்) முதலியன.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | 5 |
| | எமர்ஸன் வரலாறு | ... | 6 |
| 1. | விதி அல்லது ஊழ்வினை | ... | 9 |
| 2. | தன்னம்பிக்கை | ... | 51 |

M. A. A

# விதியும், தன்னம்பிக்கையும்

## 1. விதி அல்லது ஊழ்வினை

### விதியின் தத்துவம்

சில வருஷங்களுக்குமுன், மாரி காலத்தில், நம்முடைய ஊர்களில் (அமெரிக்காவில்) காலத்தின் போக்கைப்பற்றி விவாதம் நடந்தது. எதிர்பாராத முறையில் போஸ்டன் நியூயார்க் நகரவாசிகளுக்கு முன்பு, காலங்களின் தத்துவத்தை விளக்கக்கூடிய அரிய சொற்பொழிவுகளை நாலைந்து அறிவாளிகள் நிகழ்த்தினார்கள். சில பத்திரிகைகளிலும் துண்டுப் பிரசுரங்களிலும் இதே விஷயத்தைப்பற்றி லண்டனில் ஒரு பெரும் சர்சை நிகழ்ந்தது. இந்த நிலையை உணர்ந்த எனக்கு, "காலப்போக்கு" என்ற விஷயம் என் மனதில் தெளிவடைந்து, 'நாம் இனி வாழும் வகை' என்று தொனித்தது. இந்தப் பிரச்னையின் குழப்பத்தை, ஒரு திட்டம் வகுத்துக் கண்டுபிடிக்கமுடியாது. சிந்தனை உலகம், கோட்டில் அடைபடாது. ஆக்ஷேபனைகளைப் பொருத்திப் பேசுவதும் மிக மிகக் கஷ்டம். நம் முன் எழுகின்ற வாதபிரதிவாத நிலைகளையே நாம் உணர்ந்து பின்பற்ற முடியும். விதி அல்லது ஊழின்முன், வழி தேட வேண்டும்.

முதற்படியில், நம்பால் அசைக்க முடியாத தடைகள் சில உண்டு. மனிதர்களைத் திருத்தியமைக்கும் நம்பிக்கை நம்முன் கனல்கிறது. பல சோதனைகளுக்குப்பின், பள்ளிக்கூடத்திலேயே இந்தச் சீர்திருத்தத்தை ஆரம்பித்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் பையன்களும் பெண்களும் அவ்வளவு அடங்கி நடப்பதாகத் தெரியவில்லை; நம்மால் அவர்களை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் குழந்தைகள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. சீர்திருந்த முயற்சிக்கும் நாம் இன்னும் முன்னதாகவே ஆரம்பித்திருக்க வேண்டும். பிறவியிலேயே திருத்த வேண்டும்: இதன்பொருளென்ன என்று ஆராயும்போது அங்கே விதி வருகிறது, அல்லது உலக சட்டங்கள் வந்து மோதுகின்றன.

தடுக்கமுடியாத நிலையிலுள்ள விதியும், தன்னையே அறிந்துதான் வருகிறது. விதியை ஒப்புக்கொள்வதால், மனிதனுக்கு உள்ள சுதந்திரத்தையும் கடமையின் சிறப்பையும், குணத்தின் ஆற்றலையும் நாம் இழிவுபடுத்த முடியாது. வாழ்க்கையில் இவைகளுக்கும் ஆழ்ந்த பொருள் உண்டு. விதியும் செயலும் உண்மையே. ஒவ்வொரு சிந்தனையின் வேகத்தையும் ஒவ்வொரு சக்தியின் தன்மையையும் நாம் ஆழ்ந்து கவனித்தால், அதனுள் பதுங்கிக் கிடக்கும் தத்துவம் என்ன என்பது நன்கு புலனாகும். இவ்வாறு பல்வேறுபட்ட முரணான கருத்துக்களையும் அலசிப் பார்க்கும்பொழுது, இவைகளையெல்லாம் பொருத்தி உண்மையறிய வழியுண்டு என்று நம்புகிறோம். எப்படி என்பது தெரியாவிட்டாலும், விதியும் சுதந்திரமும், தனிப்பட்ட மனிதனும் உலகமும், மனித மனப்பிளவும் காலப்போக்கும், நெருங்கி நெருங்கி ஒவ்வியே பழகியோடுகின்றன. காலப்புதிர், ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பொருள் கொண்ட விடுதலை தரு

கிறது. ஒவ்வொருவனும் காலப்போக்கில் பதுங்கிக் கிடக்கும் பெரும் பிரச்னைகளைப் பிரித்துப் பிரித்து அலசிப் பார்த்தால், நமது வாழ்வின் முன்னேற்றத்தை எதிர்க்கும் உண்மையான தடைகள் யாவை என்பது தெற்றெனப் புலப்படும். மிஞ்சிய பகுதியைத் திருத்தி, உண்மையை உறுதி செய்யலாம்.

## கடவுளின் கட்டளை

ஆனால் இனி விஷயங்களை நேரே கவனிப்போம். நமது அமெரிக்காவிற்கு ஒரு கெட்டபேர் உண்டு; அதாவது எதையும் ஆழமாகக் கவனியாமல், மேற்பார்வையாகக் கவனிப்பது என்பது. பெருந்தேசங்களில் தோன்றிய பெரியார்கள் வீண் தற்புகழ்ச்சியை நோக்குபவர்க ளல்லர், வெறுங் கோமாளிகளல்லர்; அவர்களே வாழ்வின் பயங்கர எல்லையை உள்ளுணர்ந்து எதிர்த்துப் போராடியவர்கள். ஒவ்வொரு ஸ்பார்டனும், தன்தேசமே தனது முழுமதம் என்றுணர்ந்து, ஒரு சிறு கேள்வியும் கேட்காமல் உயிரை விடுகிறான்; ஒவ்வொரு துருக்கி தேசத்தானும், தான் பிறந்து இவ்வுலகத்தில் நுழையும்போதே, தனது விதி இரும்பு இலையில் பொறிக்கப்பட்டு வருகிறது என்று உணர்ந்து பிளவுபடாத மனத்துடன் சத்துருவின் கத்தி முனையிலே சாய்கிறான். துருக்கியர், அராபியர் பெர்சியர் மூவரும், மனிதன் தலைவிதி பிறக்கும்போதே பின்தொடர்கிறது என்ற உண்மையை ஒப்புக்கொள்கிறார்கள். விதி சுழன்று வருவதை, ஹிந்துவும் உறுதியாகவே நம்புகிறான். நமது கால்வினிஸ்தர்கள் சென்ற தலைமுறையிலே, இதே கருத்தை ஓரளவு உணர்ந்தார்கள். உலகச்சுமை அவர்களை அழுத்திக்கொண்டு வருவதாகவே உணர்ந்தார்கள். அறிவில் மேம்பட்ட பெரியார்கள் இதையே ஆழமாக உணர்ந்திருக்கிறார்கள்—, உலகத்தை ஒரு அறியமுடியாத

சக்தி ஆட்டிவைக்கிறது! "யுத்தத்திலும் சமாதானத்திலும், விருப்பிலும் வெறுப்பிலும், மனித வாழ்க்கையில் கடவுளின் ஆக்ஞையே அசைக்கமுடியாத நிலையில் ஆளுகிறது — இது எப்போதும் உண்மை; முக்காலும் முற்றப் பொருந்தும் உண்மை" என்று சாஸர் என்ற மகாகவி வற்புறுத்தி யிருக்கிறார். கிரேக்கர்களின் சோகநாடகத்தில் இந்த உண்மையே கனல்கிறது; "விதித்தது நடந்தே தீரும். 'ஜோவ்', தெய்வத்தின் அகண்ட ஆக்ஞையை மீறவே முடியாது."

## விதியின் பயங்கர லீலை

காட்டு மிராண்டிகள், ஒரு வகுப்புக்கோ ஊருக்கோ ஒரு சிறு தெய்வத்தை வைத்துப் பின்பற்றி வருகிறார்கள். ஏசுநாதரின் அகண்ட நீதி இவர்கள் மனநிலையில் குறுகி வகுப்பு வாதமாக மாறிவிடுகிறது. ஜங் ஸ்டில்லிங், ராபர்ட் ஹண்டிங்டன் போன்றவர்கள், குணக்கடவுளை பணக்கடவுளாகக் கருதி, நல்லவன் ஒருவனுக்கு உணவு வேண்டுமானால், அரை டாலரைப்போட்டுவிட்டுக் கடவுளின் கதவைத்தட்டினால் உணவு கண்டிப்பாய்க் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். ஆனால் இயற்கை, நம்மைச் செல்லமாய்த் தட்டிக்கொடுக்கவில்லை; நமக்கு அதிகமாய்க் கொடுத்துச் சலிப்படையச் செய்யவுமில்லை! 'உலகம் கொடிது, வெறுப்புடையது; ஒரு ஆணையோ பெண்ணையோ மூழ்கடிக்கப் பின்வாங்காது; ஒரு கப்பலையே ஒரு தூசிபோல் விழுங்கும் தன்மையுடையது' என்பதை நாம் நன்றாய் உணரவேண்டும். மனிதர்களுடைய கொடிய மனநிலை, உனது ரத்தத்தைக் கொதிக்க வைத்து, உனது கால்களையும் கல்லாகச் செய்யும் கொடிய தன்மையுடையது. நோய்கள், பஞ்ச பூதங்கள், அதிர்ஷ்ட நிலை, இழப்பு, மின்னல்,—இவைகளில் சிக்

குண்ட மனிதன் தத்தளித்தே தீருவான். கடவுளின் வழியே, கொஞ்சம் கரடு முரடானது. பாம்பின், சிலந்தியின் பழக்கமும், புலி மற்ற ரத்தவெறிபிடித்த ஜந்துக்களின் திடீர்ப் பாய்ச்சலும், மலைப்பாம்பின் சுழற்சியில் பிடிபட்டு நொருங்குகின்ற பரிதாபநிலையும், இயற்கையின் கொடிய வழிகளே; நம்முடைய குணங்களும் அத்தன்மையதே. பல மைல்களுக்கப்பால் மாமிசக்கடை பதுங்கி மறைந்திருந்தாலும், உனது உணவில் ரத்தம் கலந்துவிட்டதாகக்கருது; அந்த உணவில் குற்றம் உண்டு—என்று நம்பு. இவ்வழியே மனித சமூகமும் ஒருவரை யொருவர் உண்டே வாழ்கின்றனர். அந்தோ! என்ன சித்திரவதை! வால்நட்சத்திரங்களாலும், கிரக அதிர்ச்சியினாலும், பூகம்பம் எரிமலையின் அதிர்ச்சிப் பிளவுகளாலும், சீதோஷ்ண மாறுதல்களாலும், பூகோளமே அதிர்ந்து சிதறுகிறது. காடுதிறந்தால், ஆறுகள் காய்ந்துவிடுகின்றன. கடலின் கொந்தளிப்பும், கரைமாறுகிறது. பட்டணங்கள், கிராமங்கள் மூழ்கி விடுகின்றன. விஸ்பனில், மூன்று வருஷங்களுக்குமுன், ஒரு பூகம்பத்தில் மனிதர்கள் ஏராளமாக ஈக்கள் போல் மடிந்தனர். நேபிள் நகரத்தில் மூன்று வருஷங்களுக்கு முன், பதினாயிரம் ஜனங்கள் சில நிமிஷங்களில் மாண்டனர். கடல் நோயும், மேற்கு ஆபிரிக்காவிலும், கெயின், பனாமா, நியூ ஆர்லீன்ஸ் முதலிய இடங்களிலும், அடிக்கடி மாறுகின்ற சீதோஷ்ண நிலையும், கத்திபோல மனிதர்களைக் குவியல் குவியலாகப் படுகொலை செய்துவிட்டன. நமது நாட்டில் மேற்கே உள்ள பொட்டலில், சுரமும் வலிப்பும் உலாவுகின்றன. கோடைகாலத்தில் கத்தி விளையாடும் 'கிரிக்கட்' பூச்சி ஒரே இரவில் கடிபனியில் மடிவதுபோல, காலராவும் வைசூரியும் பலருடைய உயிர்களை உடனே வாங்கிவிடுகின்றன. கடலில்

ஒன்றையொன்று விழுங்கி ஜீவிக்கும் கொடிய ஜந்துக்கள், கொடிய கூரிய பற்களுடன் தாண்டவமாடும் நிலையைக் கவனித்தால், இயற்கையின் உள்ளே எவ்வளவு கொடிய நுட்பமான லீலைகள் பதுங்கிக்கிடக்கின்றன என்பது நன்கு தெரியும். மேலும் கீழும், எப்பகுதியிலும் வாழ்வில், நாம் இதை மறுக்க முடியாது கடவுளின் பாதை கொடிய கரடுமுரடான, கணக்கிடமுடியாத பாதை; விதியின் கொடிய நிலையை அலங்கார ஆடையால் மூடி மறைக்கமுடியாது. வேதம் படித்து ஊக்கமாய் உபதேசித்தாலும், விதியின் கொடிய கருணையற்ற உள்ளத்தை மறைக்கமுடியாது. இது உண்மை; இதுவே உண்மை.

மனிதனைத் தினம் தாக்கும் கொடிய நிகழ்ச்சிகள் வேறு என்று சொல்ல முடியுமா? நாம் இந்தச் செயல்களை எதிர்க்கச் சக்தியற்றுப் பின்வாங்கினால், நாம் பயந்தே தீரவேண்டும். ஆனால் இவைகளைத்தவிர, வேறு சில சக்திகள் மறைமுகமாகவே சூழ்ச்சியாக நம்மைத் தாக்குகின்றன. முடிவை முடிக்க வழிதேடுவதே விதி—, விதியின் கொடிய தன்மை நமது குணத்தையே சிதைத்துவிடுகிறது. நமது முதுகெலும்பிலும், பட்சியின் மூக்கிலும், பாம்பின் தலையிலும், விதியின் விஷம் பரவிக்கிடக்கிறது. இதே போல்தான் சமூக அளவும், மனநிலையளவும், காதல் நிலையும், சீதோஷ்ண நிலையும் ஆகும்; சிருஷ்டி சக்திகள் ஒன்றோடொன்று மோதிச் சிறைப்பட்டுச் சிதறி வருவதும், விதியின் வழிதான்.

## மாந்தர் குணநிலை

மந்த புத்தியுள்ளவர்களுக்கு பெரிய தோற்றங்களே புரியும். குதிரை வண்டிக்காரனும் நமது முகவரிகளைப் படிக்கும் ஆற்றலுடையவனாக மாறிவிடுகிறான்; உன் முகத்தில், ஒரு ஷில்லிங் அவனுக்குக் கிடைக்கும் உறுதி

யுண்டா என்று சுலபமாக அறிந்து கொள்ளுகிறான். புருவத்தின் வளைவிலும், பாணைவயிற்றிலும், சந்தேகப் பார்வையிலும், குட்டையான கெட்டி மூக்கிலும், மயிர்ச் ச்டையிலும், வெளித்தோலின் வருணத்திலும் மனித குணம் வெளியாகிறது. மனநிலை திரையிட்டு உறையிட்டிருப்பதாக ஜனங்கள் தவறுதலாக எண்ணுகிறார்கள். ஸ்பர்சிம், குவட்லட், டாக்டர்களைக் கேட்டால் உண்மை தெரியும்: மனநிலைகள் வெளியேவரும் என்று அவர்கள் உறுதி கூறுவார்கள். வைத்திய நூல்களில், நான்கு மன நிலைகள் வருணிக்கப் பட்டிருக்கின்றன. மனநிலைகளில் உன் எண்ணங்களை நீயே படிக்கலாம். கருப்புக் கண்களும் நீலக்கண்களும், ஒரு சிறு கூட்டத்தில் எவ்வளவு பெரிய லீலைகள் செய்கின்றன, பாருங்கள்! முன்னோர்களின் தன்மைகள் நம்முடைய உடலில் பாய்ந்திருக்கின்றன: தாய் தந்தையரின் ரத்தச் சொட்டு நமது நரம்புகளில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. நமது முன்னோர்களின் ரத்தம் நமது குடும்ப வாழ்க்கை என்ற ஜாடியில் அடைபட்டிருப்பது உண்மையே. முன்னோர்களின் ஒவ்வொரு அம்ஸமும், ஒவ்வொரு தன்மையும் தற்காலம் நமது குடும்பத்தில் ஓர் ஆண் மகனிடமோ ஒரு பெண் மகளிடமோ பிரதி பலிப்பதை நன்கு உணரலாம். சில குழந்தைகளிடம் தனித்த அம்ஸங்களும், சில குழந்தைகளிடம் குணக்கதம்பமும், முன்னோர்களின் தன்மையின் விளக்கமாகக் காணலாம். நற்குணங்களைப்போல, கெட்ட குணங்களும் பீறிட்டு வளர்வதைக் காணலாம். ஆகையால் மூதாதைகளின் குணம் ஒவ்வொரு குடும்பத்தையும் இன்றும் ஓய்வற்றுத் தொடர்ந்து வருகிறது. ஒரே மனிதனிடம், மூதாதைகளின் குணம் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறி மாறி வந்துவிழுவதைக் காணலாம்: ஒரே உடலில், எட்டுப்பேர் அடைபட்டு

வெளிவருவதாக, குணக்கதம்பம் மிளிர்கிறது. புது மனிதனின் வாழ்வின் நாதத்தில், முன்னோர்களின் குண சுவரங்கள் குமுறுகின்றன. இது புது வாழ்வு, புது இசை. ஒரு வீதியின் மூலையில், மனிதன் வரும்போதே, அவன் முகக்குறிப்பினின்றும், கண்ணின் ஆழத்தினின்றும், அந்த மனிதனின் முழுத்தன்மையையும் ஊகிக்க முடிகிறது. அவன் பிறந்த குடும்பமே, அவன் குணத்தைக் காட்டுகிறது தாயைப் பொறுத்ததே சேய்: அன்னையின் சிருஷ்டியே குழந்தையின் குண நிலை. கரடு முரடான மேஜைத்துணி நெய்யும் தறியில், காஷ்மீர் சால்வை செய்ய முடியுமா? கட்டிடச் சிற்பியிடம், கவிதை எதிர்பார்க்க முடியுமா? தரகனிடம் ரசாயனம் வளருமா? சாக்கடை தோண்டுபவனிடம், நியூடன் கண்டுபிடித்த ஆகர்ஷண சக்தியைப்பற்றிக் கேட்டால், அதை விளக்கும் ஆற்றல் அவனுக்கு உண்டா? கொடிய வறுமையாலும், இடையறு உழைப்பாலும் நூறு ஆண்டுகளாகப் பீடிக்கப்பட்டு வதங்கிக்கிடக்கும் அவன் மூளையில், எப்படிப் புது எண்ணங்கள் உதிக்கும்? தன் தாயின் கருவினின்று வெளிவரும்போதே, ஒவ்வொருவனுடைய அருட்கொடையின் கதவு மூடப்பட்டே வெளிவருகிறான்; ஒரு ஜோடி கைகளுடனும், ஒரு ஜோடி கால்களுடனும்தான் பிறக்கிறான். அவனுக்கு வருங்காலம் ஒன்றுதான். இது, அவனுடைய கூரிய காதிலும் ஊதிய முகத்திலும், பன்றிக்கண்ணிலும், குள்ளத் தோற்றத்திலும் உறுதியாகத் தெரிகிறது. இப்படிப் பிறந்த விகாரக் குள்ளனை, எந்தச் சட்டமும் எந்தச் சுதந்திரமும், ஒரு கவிஞனாகவோ அல்லது குபேரனாகவோ செய்யமுடியாது.

"அவன் அவளைப் பார்த்தபோதே, அவன் கற்பழித்த குற்றம் செய்துவிட்டான்" என்றார் ஏசுநாதர். ஆனால்

இதைவிட விநோதம் என்னவென்றால், சிந்தனைக்குறை வாலும், மிருகத்தன்மையின் மிகுதியாலும், அவன் அவளை பார்க்குமுன்பே, உடல்திமிரால் கற்பழித்த குற்றவாளி யாகிறான்; பிறவியிலே, கற்பழிக்கப் பிறந்த உடல் திமிரோடு உலாவுகிறான். உடல் திமிருள்ள ஆணும், உடல் திமிருள்ள பெண்ணும் ஒருவரை யொருவர் கற்பழிக்கவே கனிந்து மின்னுகிறார்கள்.

சில மனிதர்களிடம், காமமும், ஜீரணக்கருவியும் உயிர்ச்சத்தையே விழுங்கிவிடுகின்றன; தீனியாலும், காமத்தாலும் மனிதன் இளைத்துவிடுகிறான். இத்தகைய கொழுத்த சோம்பேறிகள் மடிந்தால், குடும்பத்துக்கு நலம். இந்த மிருகவம்சத்திலிருந்து, பின்னால் நல்ல ஒரு சக்தியுள்ள குழந்தை உயர்ந்த ஆற்றலுடன் பிறக்க நேர்ந்தால், மிருக மூதாதைகளை மறந்துவிடுவதும் இயல்பே. அநேக மனிதர்களும் பெண்களும், காமஜோடிகளாகவே விளங்குகின்றனர். சில சமயங்களில், ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைக்கு, அபூர்வமாக, கட்டடச் சிற்பத்திலோ, இசையிலோ, மொழி வளர்ச்சியிலோ, பூவை நுகரும் சக்தியிலோ, விஞ்ஞானத்திலோ, சித்திரத்திலோ, நடனத்திலோ, நீண்ட நடையிலோ ஒரு தனிச்சிறப்பு உதயமாகலாம்: ஆத்ம சக்தி வளர வளர, மனச்சிறப்பு மின்ன மின்ன, உடல்வளம் குன்றி வருகிறது; மிருகத்தன்மை மறைகிறது. மறு தலைமுறையில், இந்த அபூர்வ ஆற்றல் உடற்கூண்டில் வரும்போது, உடல்வளம் வற்றி மனநிலையும் உடைகிறது; சிருஷ்டிக்கும் ஆற்றலும் தாக்கப்படுகிறது.

மனிதர்கள் பிறக்கும்போதே, மனநிலையும் ஒரு விதமாகவே ஜனிக்கிறது: விதி நிறைந்தது, அல்லது நீதி நிறைந்தது என்றே அம்மனநிலையை நாம்சொல்லவேண்டும்: ஒரு தாயின் வயிற்றில், பல தந்தையர்களுக்குப்

பிறந்த சகோதர சமூகம் என்று அழைக்கலாம். பிரான் ஹோபர், டாக்டர் கார்பெண்டர் போன்றவர்கள், உயர்ந்த பூதக்கண்ணுடிகளால் நுட்பமாய் கவனித்து, ஒரு குழந்தை கருவில்தோன்றிய நான்காம் நாளே, இந்தக்குழந்தை விடுதலை வாதி, சுதந்திரமேதை என்று முடிவு கட்டிவிடுவார்கள்.

விதி மலையைத் தூக்குவது, ஒரு கவிதை கட்டும் முயற்சியாகக் கருதப்பட்டது: சமூகக் கொடுமை சுதந்திரத்தைத் தழுவவில்லை; இதனுலேயே, ஹிந்துக்கள் "முன் ஜன்மத்தில் நிகழ்ந்த செயல்களே, கருமம், விதி என்ருயிற்று" என்றனர். மேல்நாட்டுக் கருத்தும், கீழ் நாட்டுச் சிந்தனையும், ஷீலிங் என்பவருடைய முடிபிலே ஐக்கியமடைகின்றன: "அழிவற்ற நிலையில், பல யுகங்களாக, முன்னும் பின்னும், இடையருத் தொடர்புடன், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பூர்வ குணத்துடன் திகழ்கிருன். அவனுடைய சரித்திர வளர்ச்சியில், தற்கால நிலையிலும்' பூர்வ அம்சம் மின்னிக்கொண்டேயிருக்கிறது. இதை அவனும் எவனும் மறக்கவே முடியாது"

நமது அரசியலில் பெரும்பகுதி உடலையும் பொறுத் திருக்கிறது. சிலசமயங்களில் மனிதவாழ்வில், இளமையில் அகண்ட சுதந்திரத்தை விரும்புகிருன், செல்வ இளைஞன் ஒருவன்; இங்கிலாந்தில் செல்வந்தர்கள் உடல் நலச் சிறப்புடன் வாழும்போது, முன்னேற்றத்தையும் வளர்ச் சியையும் குறிக்கோளாய்க் கொண்டவர்கள், வயது ஆக ஆக மனநிலை மாறி மாறி வளர்ச்சியைத் தடுக்கும் பெரும் முட்டுக்கட்டைகளாகவே வந்துவிடுகிருர்கள். முன்னேற் றத்தைத் தடுப்பவர்கள், உடற் குறையுள்ளவர்களே இயற்கையாலும், அந்தஸ்தாலும் தாக்கப்பட்டு மெலிந்து, பெற்ரோர்களின் மீறிய வாழ்வால் நொண்டியாகவோ குருடாகவோ பிறந்து, என்றும் தன்னுறுதியற்று

எதிரியைத் தாக்கும் சக்தியற்றும் சாஸ்வத நோயாளிகளாய்த் திரிகிறார்கள். இயற்கை பலத்துடன் பிறந்த விறகு வெட்டிகள், ஹாம்ஷயர் பலிஷ்டர்கள், நெபோலியர்கள், பர்க்குகள், புரூஹாம்கள், வெப்ஸ்டர்கள், கோசுத்துகள் எல்லோரும் உறுதியான தேசாபிமானிகள்: உயிர் போகும்வரை, உடற் குறைகள் தாக்கும்வரை, வாதமும் பணமும் தாக்கும்வரை இடையறாது உழைத்து உயிரைவிடச் சித்தமாயிருக்கும் உத்தமர்கள்.

பலமான எண்ணங்கள், தேசங்களில், பெரும்பகுதியாக, உடல் நலம்பெற்ற பலவானிடமே உருவெடுக்கின்றன: உடல் நலச்சிறப்புள்ள ஆள்களைப் பொருக்கி எடுத்து எடைத்தராசில் போட்டு, தேர்தலுக்கு ஆள் தெரிந்தெடுப்பதும் நலமென்று எண்ணுகிறேன். உயர்ந்த உடல் நலமுள்ளவர்களே, நாட்டை நன்றாய் ஆளும் ஆற்றல் படைத்தவர்கள் என்று நாம் உறுதியாகக் கூறலாம். வாக்கை (Vote) வேகமாய்த் தீர்மானிக்க, இதுவும் ஒரு நல்ல வழிதான். உடற்சிறப் புடையவனே உயர்ந்த மேயராகலாம்; கடமையை ஆற்றுவதில் அவனே சிறந்தவனாகிறான்.

## விஞ்ஞான நுட்பம்

விஞ்ஞானத்தில் இரண்டே நுட்பங்கள்: சக்தியும் துணையான நிகழ்ச்சியும் முட்டைக் கருவில் பலவித பின் வளர்ச்சிகள் உண்டு: ஐநூறு வருஷங்களுக்குப்பின், புதுப் பார்வையுடன், புதுக்கண்ணாடியுடன் கவனித்தால். முட்டைக்கருவில் புது நுட்பங்களை நாம் அறியலாம். செடியிலும் சரி, பிராணியிலும் சரி, பல விநோதங்கள் தோன்றி வளர்கின்றன. கருவில் இருட்டில் வளர்வது பிராணி, ஜந்து; வெளிச்சத்தில் வளர்வது செடி. தாயின் வயிற்றில் புழுத்தோன்றி, வளர்ந்து வளர்ந்து, மீன் பட்சி,

நாற்கால்பிராணி, தலை, கால், கண், நகத்துடன் வெளி வரும் விந்தையைப் பாருங்கள்! இந்தப்பிறவி விநோதம், இயற்கையே. நீ செய்வதே இயற்கையாக வருகிறது. உன்னால் செய்ய முடியாத பகுதியும் உண்டு. செயலால் வளர்வதும், அதன் எதிர்ச் சக்தியால் வளர்வதும் இரண் டும் கலந்தே, பாம்பின் கெட்டித் தலையாகவும், பாம்பின் சட்டையாகவும், அகண்ட பாறைவாயுள்ள பாம்பாகவும் அமைவது. ஆரம்பித்தசெயல், ஓட்டத்திலும் அமைதியி லும் வளர்கிறது — முடிவு இயற்கையின் விந்தை! ஓடும் 'மிஷின்' ஓட்டப்படவேண்டும்; ஆடும் பண்டம் ஆட்டப் பட வேண்டும். பனிக்கட்டிமேல் ஓடும் வண்டி சிறகுடன் பறப்பது போலத் தெரிகிறது; ஆனால் தரையில் விழுந்தால், அசைவில்லை.

## மனிதனும், விதி நூலும்

இயற்கை நூலே, விதி நூல்: இயற்கை, தனது நூலின் பெரிய பக்கங்களை இதழ் இதழாகப் புரட்டிக் கொண்டு போகிறாள்; எதையும் திரும்பப் புரட்டுவதில்லை. ஒரு இதழைக் கீழே வைக்கிறாள் — பாறைத்தரை ; ஆயிரம் யுகங்கள் செல்லுகின்றன, அதன்பின் நிலக்கரி ; மறுபடி ஆயிரம் யுகங்கள் மறைகின்றன, சுண்ணாம்பும் களி மண்ணும் ; செடிரூபங்கள் வருகின்றன. அதன்பின் பல ரூபங்கள் பிறந்து பிறந்து, வளர்ந்து வளர்ந்து, மாறி மாறி, பூமி குளிர்ந்து மனிதன் பிறக்கிறான்! ஆனால் ஒவ்வொரு பிறவியும் தோன்றித் தோன்றி, கால அளவு வரை வளர்ந்து மாறி மடிவதும் இயல்பே. இதுபோலவே மனித வகுப்பும், மனிதப் பிறவியும்.

பூமியின் கீழ், பல நிலைகளில் பல படிகளில் மண் மாறி மாறி வளர்வதுபோல, மனித சமுதாயமும் ஒன்றின் கீழ் ஒன்றாகப் பிறந்து மறைந்து மடிந்து வளர்ந்து

வருவதே; இதுவே ஜனத்தொகையின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஏற்பட்ட நிபந்தனை. ஒரு வகுப்பு தாழ்ந்தும், ஒரு வகுப்பு உயர்ந்தும், வெற்றி ஒருபகுதிக்கும், தோல்வி ஒரு பகுதிக்குமாக இயற்கையில் அமைந்திருப்பதும், இந்த உண்மையைத்தான் விளக்குகிறது. சரித்திரத்தில், வகுப்பின் நிலை தெரிந்ததே. ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மன்காரர்கள், எல்லோரும் ஆஸ்ரேலியா, அமெரிக்காவில் ஒவ்வொரு கரையிலும் சந்தையிலும் முழுத் தொழிலையும் கைப்பற்றியும் வந்திருக்கிறார்கள். எங்கள் வகுப்பாரின் பலமான வீரச்செயலை விரும்புகிறோம். யூதர், இந்தியர், நீக்ரோ ஜாதியாரின் சுவடுகளைப் பின்பற்றி வருகிறோம். யூதரை ஒழிக்க எவ்வளவு பலம் விரையமாகிறது. நாக்ஸ் (KNOX) என்ற விஞ்ஞான மேதை ஒரு முடிவை உறுதியாகக் கண்டுபிடித்துக் கூறுகிறார்: இயற்கை ஒரு தொடர்ந்த வகுப்பையே மதிக்கிறது, கலப்பை வெறுக்கிறது. வகுப்பை விட்டு, ஒரு ஜனக்கூட்டத்தைப் பிரித்தால், அது தன் உயர்ந்தநிலையை இழந்து நண்டாகவே க்ஷீணித்து விடும்.'' நீக்ரோவைப் போல, ஏராளமான ஜெர்மன்காரர்களிடமும், ஐரிஷ்காரர்களிடமும் விதியின் உரம் உண்டு: அட்லாண்டிக் கடலை படகில் கடந்தும், அமெரிக்காவிற்கு வண்டிச் சுமையாகச் சென்றும், சாக்கடை தோண்டியும், குழிபறித்தும், தான்யத்தை மலிவடையப் பயிர்செய்தும், அதன் பின் தளர்ந்த நிலையில், வெறும் பொட்டலில் பச்சைப் புல்லையும் எழுப்பும் ஆற்றலுடையவர்களாக யிருக்கிறார்கள்.

புள்ளிவிவரங்கள் (Statistics) மூலம், ஜனத்தொகையின் அகண்ட அஸ்திவாரத்தின் மேல், இயல்பாய் நடக்கும் நிகழ்ச்சிகளையும் எதிர்பாராத பெரிய சம்பவங்களையும் கணக்கிட முடியும் என்பது ஒருவிதி

ஆனால் பாஸ்டன் நகரில், போன பார்டி (நெபோலியன்) போன்ற பட்டாளத் தலைவனும், ஜென்னி லிண்டு போன்ற பாடகனும், பௌடிச் போன்ற கப்ப லோட்டியும் எப்போது பிறப்பார்கள் என்று உறுதி கூறமுடியாது. ஆனால் இரண்டுகோடி அல்லது இரு நூறுகோடி ஜனத்தொகையிலிருந்து, ஏதோ ஓரளவு உண்மையை ஒட்டிச் சில விஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

புதிதாய் சில இயந்திரங்களைக் கண்டுபிடித்த தேதிகளை இன்ன தேதிதான் என்று குறிப்பிட்டுச் சொல்லுவது, புலமையின் இடமே தவிர வேறல்ல. ஐம்பது தடவைகளுக்கு மேல், ஒவ்வொன்றும் கண்டுபிடிக்கப் பட்டே வந்திருக்கின்றது. மனிதனே தலைமை இயந்திரம்: அவன் கருத்திற்பிறந்த மற்ற இயந்திரங்கள் எல்லாம், மனிதனுக்குக் கீழ் அமைந்துள்ள பொம்மை இயந்திரங்களே. அவசியத்தை அறிந்தறிந்து, நுட்பத்தையே துருவித் துருவி ஆராய்ந்தறிந்து புது இயந்திரங்களைச் செய்து தனக்கு உதவிக்கு வைத்துக்கொள்ளுகிறான். ஹோமர், சொரேஸ்டர், மெனு, கெயின், வல்கன், காட்மஸ், கோபர்னிகஸ், பஸ்ட், புல்டன் முதலியவர்களில் யார் உண்மையாகக் கண்டுபிடிக்க முயன்றவர்கள் என்பதைச் சொல்லுவது மிகக் கஷ்டம். அவர்கள் இருபதுபேர்களல்ல, பல நாற்றுக்கணக்கான பேர்கள் என்னலாம். எங்கும் மனிதச் செயலே பரவிக்கிடக்கிறது. மனிதனின் இயந்திரச் செயல், ஒவ்வொரு அணுவிலும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அவன் சுவாசிக்கும் மூச்சிலே, எத்தனையோ வாகன்சன்கள், பிரான்க்ளின்கள், வாட்ஸ்கள் உலவுகிறார்கள்.

சந்தேகமின்றி, ஒவ்வொரு மிலியன் ஜனங்களிலும், ஒரு வானசாஸ்திரி, ஒரு கணித நிபுணன், ஒரு

ஹாஸ்யக்கவி, ஒரு ஞானி தோன்றுவார்கள். கோபர்நிகஸ், நியூடன், லாப்லஸ், புது சக்திவாய்ந்தவர்கள் என்பதை உணராமல், ஒருவன் வானசாஸ்திர சரித்திர வளர்ச்சியை உணர முடியாது; ஆனால் இவர்கள் பின் உதயமாவார்கள் என்பதை எதிர்பார்த்தே, முன்னதாகவே உண்மையைக் கண்டுபிடித்தவர்கள் தேல்ஸ், அனெக்ஸாமினிஸ், ஹிப்பார்க்கஸ், எம்பிடாகினிஸ், அரிஸ்டார்கஸ், பைதாகரஸ், ஈஜேபிடீஸ்; உலகச் சுழற்சியை ஒட்டியே, இவர்கள் ஒவ்வொருவருடைய மனமும் சுழன்று, சுழன்று, கணிதத்திலும் தர்க்கத்திலும் ஆராய்ச்சிப் புலமையுடன் தங்கள் மனத்தில் படம் பொறித்துக்கொண்ட நிபுணர்கள், இந்தப் பழைய மேதைகள். பூகோள மத்திக்கோட்டை ஒட்டியே, ரோமன் மைல் அளவு நிர்ணயிக்கப்பட்டது. 'லீப்' வருஷத்தைப் பற்றியும், கிரிகரி பஞ்சாங்கத்தைப் பற்றியும் பூகோள மத்திக் கோடுகளின் சுழற்சிச் சந்திப்புகளைப்பற்றியும் நாம் தெரிந்துகொண்ட அளவு மகம்மதியர்களும் சீனர்களும் அறிந்திருக்கிறார்கள். செல்வமாக வழங்கப்படும் சிப்பிக்கூட்டத்தில் உயிர்க் கருவியும் அமைந்திருப்பது போல், ஒன்றேகால் கோடி மலாயிக்காரர்களிடமும், மகம்மதியர்களிடமும், ஓரிரண்டு வானசாஸ்திர நிபுணர்களும் இருக்கக்கூடும். காலை உணவிற்குக் கேட்டபடி அமைகிற ரொட்டித்துண்டுபோல அனேக சம்பவங்கள் எதிர்பாராத முறையில் அழகுடன் அமைகின்றன. 'பஞ்ச்' என்னும் ஆங்கில ஹாஸ்யப் பத்திரிகையில், ஒரு வாரத்திற்கு ஒரே ஒரு நயமான ஹாஸ்யந்தான் சரியாய் வந்து விழுகிறது. சஞ்சிகைகளில், தினம் ஒரு நல்ல விஷயந்தான் கிடைக்கிறது.

## விதியை எதிர்

மீறிச் செல்பவர்கள், தவறி நடப்பவர்கள், சட்டத்தில் துடிக்கிறார்கள். பஞ்சம், கொடிய தொத்து ஜ்வரம், பனி, யுத்தம், தற்கொலை, மலட்டு ஜாதி—, இவை எல்லாம் உலக அமைப்பில் எண்ணிக்கையில் சேர்ந்தவையே. இவைகள் எல்லாம் மலைப்பகுதியிற் பிறக்கின்ற தேய்ந்த கூழாங்கற்கள் போன்றவையே: நமது வாழ்க்கையின் சிறையிட்ட நிலையையும் இயந்திரம், அல்லது நெசவுசாலையின் கணக்கையே காட்டி நிற்கின்றன; இவைகளில், எ தி ர் பா ரா த நிகழ்ச்சிக் குறிப்புகளே திகழ்ந்து மின்னுகின்றன.

எதிர்பாராத சம்பவங்களின் கொடிய நிலையை நாம் எதிர்த்துப்போராட முயலும்போது, நம்முடைய சக்தியே பெருஞ் சோதனைக்குள்ளாகிறது. பெரும் புயலின் துடிப்பில், கப்பல் துடித்துச் சிதறும்போது, அதிலுள்ள ஜனங்கள் அலையில் எதிர்த்து நீந்திவர முடியுமா? சிதறிய ஜனங்கள் தனி பலத்துடன் அலையின் கொந்தளிப்பில் மிதந்து வருவதே துர்லபம். பெருஞ் செயலுக்கு இடமிருந்தும், மனமுடைந்து விதியின் கீழ் மடிகிறோம்.

வாழ்க்கையில் மனிதன் விதியுடன் அடிக்கடி போராடிப் போராடி, விதியின் ஒரு வளைந்த பகுதியை ஓரளவு அறிகிறான். வாழ்வின் படத்தில், விதியின் சாயையும் சுழல்கிறது. மனித சக்தி, விதிச்சங்கிலியால் கட்டுண்டு கிடக்கிறது. இயற்கையின் மத்திக் கோடாக ஓடிக்கொண்டு நம்மை எதிர்த்துத் தடை செய்யும் தடையே விதிப்போர். நாம் கொடிய மிருகம் போல் எதிர்த்தால், விதியும் மிகக்கொடிய மிருகம் போல் நம்முடைய செயலை எதிர்த்துத் தடை செய்கிறது. நாம் நயமான முறையில் எதிர்த்தால், விதியும் கூர்மையான

2068.
R625
நூலகம்-6503

முறையில் நம்மை உடனே தாக்குகிறது. ஆத்ம நிலையிலிருந்து நாம் எதிர்த்தால், விதியும் அதே பக்குவ நிலையைக் கைக்கொண்டு போரிடுகிறது. ஹிந்துபுராணங்களில், புழுவினின்று யானைவரை ரூபத்தை மாற்றிக் கொண்டுவரும் மாயையை, எல்லாப் பருவங்களிலும் விஷ்ணு பின்தொடர்ந்து செல்லுகிறார். மாயை பெண் ரூபம் எடுத்தால், விஷ்ணு அந்த வகுப்பில் ஆண் ரூபம் எடுத்துக்கொண்டே செல்லுவார்; கடைசியில், மாயை பெண்ணாகவும் பெண் தெய்வமாகவும் முடியும்போது, விஷ்ணு மனிதனாகவும் ஆண் தெய்வமாகவும் முடிவடைகிறார். ஆத்மா வளர வளர, தடைகள் உயர்ந்த நிலையில் வந்துவிடுகின்றன; ஆனால் விதி வளையம் உயரச் சுழல்கிறது.

விண்ணில் ஒரு ஓநாயை இரும்பாலும் மலையாலும் கட்ட முடியாத நிலையில், இரும்புத்தடையை ஓநாய் உடைத்தது, மலையை உதைத்தே தள்ளிவிட்டது; அப்போது, மிருதுவான பட்டுக்கயிறால் நாயின் காலைத் தேவர்கள் கட்டியவுடன், ஓநாய் காலைச்சுண்டி இழுக்க இழுக்க முடிச்சு இறுகி இறுகி நாயின் காலை உறுதியாகப் பற்றிக் கொண்டது. இந்தப் பட்டுக் கயிற்றின் நிலையில்தான், நெருப்புத் திராவகம், நரகத்தீ, தெய்வ ரத்தம், கவிதை, பிறவித்திறமை இவைகளில் எதைக்கொண்டும் விதிக் கயிற்றை அறுத்தெறிய முடியாது! விதியின் அழியாத உள் தத்துவத்தை, கவிஞன் உணர்ந்து உபயோகப் படுத்துவது போல் நாம் அறிந்து கொண்டால், சிந்தனை கூட விதியின் எல்லைக்கு மேற்பட்டதல்ல. விதியை எதிர்த்துச் செல்லுவது, விதியின் ஆழத்தை அறியாத நிலைதான்—இதுவும் தவறுதலான எதிர்ப்பு, அறியாமை.

உலக நீதி அரங்கில், தவறுகள் தலையெடுத்தாடும் போது, விதி, ஆவேசத்துடன் தோன்றி உண்மைக்குத்

துணையாக தியாக மூர்த்தியாக வந்து விடுவதைப் பார்க்கலாம்: அது, மனித நிலைகளை ஒருநிலைப்படுத்தியும், தாழ்த்தப்பட்டவர்களைத் தூக்கிவிட்டும், நீதியை ஸ்தாபித்தும் விடுகிறது. நல்லது நிலைக்கும்; கெட்டது கழியும். கிரேக்கர்களும், வெல்ஸ் தேசத்தவர்களும், ஸ்பானிஷ் காரர்களும், "கடவுளுக்குத் திருப்தியாக நடந்து கொள்ள முடியாத எவனும் ஈசனின் சாபத்திற்கே உள்ளாகிறான்" என்று அனுபவித்துக் கூறினார்கள். தெய்வம் நின்றே கொல்லும்; கொடியபாபி தப்பிக்கவே முடியாது. முன் எச்சரிக்கையால், மனிதன் விதியின் தடையைத் தாண்டவே முடியாது. விதியின் அகண்ட வேகத்தில், மனிதனின் அறிவு மங்கி மடிகிறது. விதி வலிது என்று சொல்லிக் கொண்டே போவதில் என்ன பிரயோசனம்? விதியின் அம்சங்கள் என்ன, எதிர்க்கும் வழியுண்டா என்று சற்று ஆராய்வோம்:

## விதியை வெல்லும் வழி

ஜடத்திலும், மனத்திலும், நீதியமைப்பிலும், ஜாதியமைப்பிலும், பல சிருஷ்டித் தடைகளிலும், சிந்தனையிலும், குணத்திலும், விதியின் உருவத்தைக் காண்கிறோம். அது எங்கும் தடையிட்டும் தடைப்படுத்திக் கொண்டும் இருக்கிறது. விதிக்குத் தலைவன் உண்டு; தடுப்பதே அதன் எல்லை; மேலும் கீழுமிருந்து பார்த்தால் விதியின் தோற்றம் மாறிமாறி அமைகிறது; உள்ளும் புறமும் அப்படியே தோற்றவில்லங்கம். விதி நம்மைத் தொடர்ந்து நமது சக்தியைத் தடை செய்தால், நமது சக்தியும் விதியின் ஓட்டத்தை எதிர்க்காமலில்லை. விதி, இயற்கையில் சரித்திர வளர்ச்சியாகவே வந்துவிடுகிறது; இன்னும் அதிகமான உண்மையும் விதியின் எல்லையில் உண்டு. ஜடத்தைச் சோதிப்பது யார்? இதைப்பற்றி ஆராய்ச்சி எழுப்புவது யார்? மனிதன் வீண் வயிற்று

மூட்டையல்ல, தசைக் கதம்பமல்ல; மனிதனும் ஒரு பெரிய சக்திதான்; உலக துருவ முனைகளையே இழுக்கும் ஆற்றலுடையவன்தான். சிருஷ்டியில் கீழான படியிலிருந்து வளர்ந்து வளர்ந்து, பிறந்து, முதிர்ந்த நிலையில் மனித சிகரத்தை யடைந்துவிட்டான்; கீழான மிருக நிலையினின்று மேலான மனித நிலையை எட்டிவிட்டான். புதுச்சக்தி அவனுக்கு வந்திருக்கிறது. பூமண்டலங்களையே உடைக்கவும் சிருஷ்டிக்கவும் ஆற்றலுள்ள ஓர் அபூர்வ மின்னற்சக்தி மனிதனுள்ளிருக்கிறது. ஒருபுறம் காடும் கடலும் கரையும் பாறையும் உண்டு; மறுபுறம் சிந்தனையும், இயற்கையை ஆக்கியழிக்கும் சக்தியுமுண்டு. நன்மையும் தீமையும், மனமும் ஜடமும், அரசனும் அவனைக் கொல்லச் சதிசெய்பவனும், வாதயிழுப்பும், எல்லாம் மனிதன் கண்முன் அமைதியாகச் சுழன்று வருவதைப்பாருங்கள்! மனத்திலே மனிதனுக்கு விடுதலையுண்டு; 'விதியே வலிது, விதியே எல்லாம்' என்று ஒரு புறம் சொல்லுகிறோம்; மறு நிமிஷம், விதியின் ஒரு பகுதியில் மனித சுதந்திரமும் அமைந்திருக்கிறது என்று வியப்புடன் கூறுகிறோம். மனிதன் சிந்திக்கச் சிந்திக்க, அவன் விதியினின்று விடுதலையடைகிறான்; மனச் சிந்தனையே, மனித சுதந்திரம். இந்த வகையில், மனித மூளை, சிந்தனையால் விதியை எதிர்த்து, விதியை அழிக்கவும் ஆற்றல் பெற்றுவிடுகிறது. விதியின் முன் கெஞ்சாமல், எதிர்த்து வேலை செய்வதே மனித சுதந்திரம்; காகிதத்தில் ஏறி வெளிவந்த அமெரிக்க சுதந்திரம் உண்மையான சுதந்திரமல்ல; வோட்டுரிமை வழங்குவதால், மனித சுதந்திரம் வாழ்க்கையின் ஆழத்தில் பிரதிபலித்துவிட மாட்டாது. இயற்கையின் கொடிய தன்மையைப்பற்றிச் சிந்திக்காதே; விதி விதியென்று கதறுபவர்கள், கேவலமான அடிமையுள்ளம் உடையவர்களே. முனைந்து முட்டிக் குமுறி உழை: ஜெயமுண்டு, பயமில்லை!

## மனோதிடம் காட்டு

பிறவியிலேயே சில ஜாதியார்கள், சில தேசத்தார்கள் விதியில் நம்பியிருந்தார்கள் என்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். அவர்கள் விதியுடனே சதிசெய்து வீழ்ந் தார்கள். பலமற்றவர்கள், பாபிகள் — இவர்களே உழைக்காமல், சோம்பலில் மடிந்து, விதியைக் குறை கூறுவார்கள். விதியை எப்படி நாம் நல்ல முறையில் உபயோகப் படுத்திக் கொள்ளமுடியும்? நம்முடைய வாழ்க்கையின் நடத்தையை, இயற்கையின் உயரத்திற்கு எழுப்பவேண்டும். வெளி இயற்கை குமுறும்போது, மனித இயற்கையும் குமுறி உயரட்டும். உயர்ந்த வழு வாத ஆகர்ஷண சக்தியுடன், மனிதன் தைரியமாக செயலாற்ற முன் வரட்டும். இந்த நிலையில் எவனும் அவனைத்தடுக்க முடியாது; எந்த சக்தியும் அவனை எதிர்க்க முடியாது; வஞ்சமும் அவனுடைய உயர்ந்த உள்ளத்தை அசைக்க முடியாது. ஓயாது ஓடும் களங்க மற்ற ஆறுடனும், உயர்ந்த காட்டு மரத்துடனும், உறுதி யான அகண்ட மலையுடனும், மனிதன் தன்னுடைய திடமான மனநிலையைப் பொருத்தி ஒப்பிட்டு உயர்ந்து வளர வேண்டும். எதையும் உயர்ந்து வளர்ந்த உறுதி யான மன நிலையுடன் மனோதிடத்துடன் எதிர்க்கும் ஆற்றல் உதயமாவதும் உறுதி.

விதியின் கொடிய நிலையை, வாழ்க்கையில் மனிதன் அஞ்சாது சோர்வடையாது எதிர்த்து நின்று பழக வேண்டும். இதுவே விதியைப் பலனுடன் அனுபவிக்கும் முறை. கடலில் தீயை எதிர்த்துப் போரிடு; உன் நண்பன் வீட்டில், 'காலரா'வை எதிர்த்துப் போரிடு; உன் வீட்டில் இரவில் சதி செய்பவனை எதிர்த்துப் போரிடு; கடமையின் பாதையில் குறுக்கிடும் எதையும் எதிர்த்து

நில்; எப்போதும், விதி உனக்கு உறுதியான துணை என்று கருதிக் கருதி, உழை. நல்ல பலனுண்டு, நன்மை உண்டு, நம்பு, உறுதியாய் நம்பு.

## விதியை விதியால் எதிர்

விதியின் செயல் எங்கும் பரவிக்கிடக்கும் போது, விதியின் அங்கமே மனிதனும்: மனிதன் இந்த வகையில் விதியை விதியால் எதிர்க்கலாம். உலகத்தில் கொடிய நிகழ்ச்சிகள் தோன்றினால் நம்முடைய ஜீவிய அணுக்களும் அவ்வாறே போரிடும். நமது உடலில், உள்ளும் புறமும் உள்ள காற்றலைகள், ஒன்றையொன்று எதிர்த்துச் சமநிலையை அடைகின்றன. கடல் நீரால் நிறைத்த ஒரு கண்ணாடிக் குழாய், கடலையும் எதிர்த்துப் போராடும். அடியும் அதிர்ச்சியின் எதிர்ப்பும், ஒன்றோடொன்று நின்று போராடி நிலைக்கும்.

விதி விதியுடன் எதிர்ப்பது, எதிர்த்துத் தடுப்பதே யாகும்: இதுவே இயற்கை யரண். இவைகளிலே, சிருஷ்டிச்சக்திகள் உதயமாகின்றன. சிந்தனைச் சிறப்பால், மனிதன் அடிமை யெல்லை தாண்டிச் சுதந்திரமடைகிறான். நாம் மாறி மாறிப் பிறக்கிறோம் என்று சரியாகவே நாம் உணர்ந்து பேசுகிறோம். நமது அனுபவம் தொடர்ந்து ஒன்றையொன்று பின்பற்றி மாறி மாறி வளர்வதால், நாம் பழைய நிலையை மறக்க நேரிடுகிறது; புது நிலையே ஞாபகக் கோட்டிற்குள் வருகிறது. இதனாலேதான், ஏழு அல்லது ஒன்பது வான மண்டலங்கள் என்று சாஸ்திரமும் எழுந்தது. வாழ்நாட்களில் சிறந்த உயர்ந்த நாள் எது? வாழ்வின் பெருநாளில், உலகப் பொருள்களினுள் பதிந்து பரவிக்கிடக்கும் ஒருமைப் பாட்டை, தெய்வத் தன்மையை, ஆத்ம நிலையை அகக்கண்ணால் அறிந்து,

விதியின் அகண்ட தத்துவத்தை உணர்ந்து, என்றும் நிலைத்து நிலவும் விதியே உயர்ந்த அழியாத நீதி என்று உணர்வதாகும். 'நிவாரண நிலை' மேலிருந்து கீழே நமது உள்ளத்தின் ஆழத்தில் உண்மையைப் பாய்ச்சு கிறது. இந்த ஆத்ம சக்தி நம்முள் கிடப்பதைவிட, நாமே விதியின் இதயத்தில் சுழல்கிறோம். நமது சுவாசக் கருவி யில், காற்றுவந்தால் நாம் சுவாசித்து உயிர் வாழ்கிறோம்; காற்று நின்றால், நாம் மடிகிறோம். புது உண்மையுடன், நமது மனம் புது உலகளவு விரிகிறது. நாம் இயற்கையின் விதியைக் கூறித்தழுவி வருபவர்கள்தான்.

## மனோசக்தி கொள்

உள்ளொளியுடன் கவனிப்பவனுக்கு, உலகத்தி லுள்ள வித்தியாசங்களும் பிளவுகளும் நன்கு புலனாகும்; நம்முடைய உள்நிலையே வெளிநிலையை எதிர்க்கிறது. அக நிலையறிந்தவன், தன் மனநிலையின் உண்மையான தன்மையை உணர்ந்து, உறுதியாகப் பேசுவான்; மனதின் அழிவற்ற நிலையை அறிந்து, தான் முடிவற்றவன் என்று கூறுவான்; மனதின் அகண்ட சக்தியை உணர்ந்து, தான் அசைக்க முடியாத பலமுடையவன் என்று சொல்லுவான். அது நம்முள் இல்லை, நாம் அதனுள்ளிருக்கிறோம். அது வீண் ஜடப்பொருளல்ல, ஈசனின் தன்மை நிறைந்தது. தெய்வத்தன்மை எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிப் பாய்ந்து, ஈசன் தன் அபூர்வ குணத்தை சில சிருஷ்டிச் சிறப்புகளில் வழங்கிப் புதுமையை இன்பமாக விரித்துக்கொண்டே போகிறான். கடவுள், பிற பொருள்களை உபயோகப்படுத்துவதைத் தவிர, பிறரால் கருவியாக்கப்படுபவரல்லர். இறையொளி யிற் கலப்பவர்களுக்கும், அதில் கலக்காதவர்களுக்கும் நீண்ட தூரமும் அகண்ட வித்தியாசங்களும் உண்டு.

கடவுளை உணரச் சக்தியற்றவர்கள் யார்? — புட்களும், மிருகங்களும். இறையொளி, தானே உதயமாவது—முன்னோர்களிடமிருந்தாவது, திறமையுள்ளவர்களிடமிருந்தாவது, பைபிளிலிருந்தாவது, அரசாங்கத்தி லிருந்தாவது, கலாசாலையி லிருந்தாவது, ஜாதிக் கோட்பாட்டி லிருந்தாவது இறையொளி தோன்றவில்லை. இறையொளியுடன் கலந்தே, இயற்கை முரணின்றித் தழுவி வளர்கிறது; எல்லாப் பொருள்களும் சிருஷ்டிச் சிறப்புடன், நாதச் சிலிர்ப்புடன் ஓவிய காம்பீர்யத்துடன் சுழல்கின்றன. மனித உலகமே சிரிப்பற்ற ஹாஸ்ய நாடகமாகத் தோன்றுகிறது: ஜனப்பெருக்கம், ஆசைகள், ராஜாங்கம், சரித்திரம் எல்லாம், கவனித்துப் பார்த்தால், பொம்மை வீட்டில் அமைந்த பொம்மை யுருவங்கள்! இதனால் சில உண்மைகளை அதிகப்படுத்திக் காட்டவில்லை. ஒவ்வொரு அறிவு நிறைந்த மேதையின் சொல்லும் கருத்தும் பலரால் வழங்கப்படுவதை நாம் ஆவலுடன் கேட்கிறோம். அந்த மேதையின் முன், நமது மனமே எழுந்து, கனலும் நிலையில், நமது சிந்தனை இதைவிட உயரும்போது, பழைய மேதையின் உயர்வை உடனே மறந்துவிடுகிறோம். இந்த மின்னுகின்ற உயர்ந்த மனநிலையை நாம் அடைந்து வரும்போது, சகல மனித பேதங்களையும் கடந்து நிற்கிறோம்; இந்த உயர்ந்த மனநிலையில், சகல சட்டங்களும் மறைகின்றன; பந்தமற்ற ஜோதி நிலையை அனுபவிக்கும் ஆற்றல் வந்துவிடுகிறது. பழைய பாதையை விட்டு விலகி, சிந்தனையின் ஒளியைப்பற்றிப் பறக்கும் போது, நாம் பலூனில் பறப்பதுபோல் காண்கிறோம். நாம் ஆதியில் புறப்பட்ட இடத்தையே மறக்கவும் நேரிடுகிறது. புது உயரத்தில், சிறப்பும் ஒளியும் கண்களைத் திறந்து இன்பம் ஊட்டுகின்றன.

ஒரு படத்தின் அமைப்பை ஊடுருவிப் பாய்ந்து பார்க்கும் ஆற்றலுடையவன், இந்த சிருஷ்டிக்குத் தலைவனாகவே

அமைந்து பின்வருவதையும் ஊகிக்கும் நுட்பமான அறிவையும் கொண்டவனாகவே திகழ்கிறான். சிருஷ்டியின் பலபகுதிகளையும், உயிர்நிலையுள்ள ஒருமை செறிந்த உலகமாகவே சம்பந்தப்படுத்தி அவன் திறமையுடன் உணர்கிறான். நாம் இருந்து எதையும் செலுத்தி ஆண்டால், உறங்கினாலும், கனவுகள் வேகமாக உருவடைந்து விடுகின்றன. ஒரே மணி நேரத்தில், முன்னும் பின்னும் சிந்தனைத் தொடர்பு, இதய முடிவைத்தழுவி, செயலில் உறுதி பெற்றுவிடுகிறது. சிந்தனைச் சங்கிலியில், ஈசனின் தலைமை மின்னிப் பரவிக்கிடக்கிறது. இதன் உயர்ந்த தன்மை என்ன?—என்னுடைய மனம், உன்னுடைய மனம் என்பதல்ல; உலக மன ஒருமையையே உண்மையாகப் பிரதிபலிக்கிறது. பல மனங்கள் ஒரே முடிவை எட்டிப்பிடிக்கின்றன. பல ஆத்மாக்களிலும் பெய்யப்பெற்ற ஒரு பெரிய ஆத்மச்சுடரின் விரிவே, இந்த நிலை. ஒளி நிறைவே, மனிதனின் ஆக்கநிலை. அணுக்கள் நீரோட்டத்தில் கலந்து ஐக்கியமடைவது போல், ஆத்ம நிலைகள் ஒருமைப்படும்போது, மற்றவர்களின் சுயநலப் போக்கிற்கு ஒரு தனி அர்த்தம் தொனிக்கிறது. எது நல்லது, எது அவசியம் என்ற பொருளின் திசையில், ஆத்ம உலகங்களில், மன நிலையின் முடிவுகள் சுழல்கின்றன. இந்த உயர்ந்த செயலின் காற்றே, நாம் உட்கொண்டு வெளியே அனுப்பும் ஆத்ம நிலை விரிவு. சிந்தனை வெள்ளத்தில் உலக ஜடம் கரைகிறது; மனம் உயரப்பறந்து பறந்து, திரவ நிலையில் கருத்தின் உச்சியைத் தழுவுகிறது. சிந்தனை நிறைந்த இருவர்களில், யாருடைய சிந்தனை மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறதோ, அவனே உறுதியான ஒழுக்க நிலையைக் காப்பவனாகிறான். எப்போதும், கடவுளின் முடிவைப் பிரதிபலிக்கும் பல இறுதியான மன நிலைகளைக்கொண்ட மனிதர்கள் எங்கும் உண்டு.

## மதியால் விதியை வெல்

சிந்தனையில் மனிதன் சுதந்திரத்தைச் சுவைப்பது போல, ஒழுக்கத்திலும் மனிதனுக்கு உயர்ந்த விடுதலை யுண்டு. மனிதனுட்கிடக்கும் ஆத்ம ரஸாயன நிலைகளைப் பிரித்துக்காட்டுவது மிகக்கஷ்டம். உண்மையறிந்து, அதைச் செயலில் அமைக்க விரும்பும் மனநிலையே உயர்ந்த நிலை; இதுவே உண்மையின் முடிவு, செயலின் சிறப்பு, மன உறுதியின் முடிவு. மன உறுதி தானுக அமைந்து ஒருமையுடன் வளர்வது; உடலும் மனமும் ஒன்றையே நோக்கிச் சுழன்று வருவது; எல்லாப் பெருஞ்சக்தியும், உண்மைப் பிரகிருதியின் தோன்றல்; உறுதியான மனம் இயற்கையில் தோன்றுவது, பிறரால் சமைக்கப்படுவ தன்று. சக்தி வெளியீட்டில், நிறைக்குநிறை தராசில் எதிர்த்து நிற்கவேண்டும். சக்தி, உள்ளும் புறமும் ஒரு முகப்பட்டு நிலை நிற்பது. ஆலரிக், போனபார்ட்டி, இவர்கள் இருவரும் ஒரே உண்மையில் நின்று செயலாற்றியவர்கள்; இவர்கள் நிலையற்றிருந்தால், இவர்கள் மனதையும் முடிவையும் யாரும் வளைத்துவிடலாம்; விலைக்கு வாங்கிவிடலாம்; குறுகிய மனதை யாரும் லஞ்சங் கொடுத்து அழித்துவிடலாம்; ஆனுல் உலக முடிவுகளைத் தழுவி நிற்கின்ற அகண்ட பரிவே, அழியாத எல்லையற்ற சக்தி; வளைக்க முடியாத, கலைக்க முடியாத உயர்ந்த உறுதியான மனநிலை. ஒழுக்க உலகில் நிறைந்து நிற்பது அகண்ட சக்தியின் உயர்ந்த ஆத்ம அனுபவமே; இதிலேதான் நம்பிக்கை வேரூன்றி வளர்கிறது. இதய நாடியில் ஒலிப்பது, நீதிக் கடவுளின் சத்திய உறுதியே. குழந்தையின் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் தெய்வக்குரலே உயர்ந்த நீதியின்ஜோதி வீரச்செயல்களின் கதைகளும், விளக்க நூல்களும் சரியான வாதங்களல்ல; அவை விடுதலையின் ஹாஸ்ய வெளியீடுகளே.

"விதியால் வஞ்சிக்கப்பட்டு, அவதிப்பட்டு வருபவன் நாசமடைவான். இது சுவர்க்கக் கதவில் பொறிக்கப்பட்டிருக்கிறது" என்று பாரஸீகக் கவி 'ஹபீஸ்' கூறுகிருர். சரித்திரத்தைப் படிக்கும் போது, நமக்கு விதியில் நம்பிக்கை ஏற்படுகிறதா? விதியையும் மதியால் வெல்லலாம் என்ற தைரியம் சரித்திர நிகழ்ச்சிகளில் ஓரளவு தோன்றவில்லையா? உலக லீலைகளில், மனிதனின் மன உறுதி, விதியை எதிர்த்து நிற்கவே முயல்கிறது.

## தளரா உறுதி

உட்பார்வை, உறுதியான முடிவல்ல; அன்பும் ஒரு முடிவல்ல. நாம் காண்பது உறுதிபெருத நிலையில், நல்ல குணம் செயலாக மாறுவதற்குமுன் எண்ணத்திலேயே மடிகிறது. வால்டேர் சொல்லியிருப்பது போல, நல்ல குணமுள்ளவர்கள் பயங்காளிகள்; தங்கள் எண்ணத்தைச் செயலாக மாற்றும் ஆற்றலற்ற துரதிர்ஷ்டசாலிகள். மன உறுதியுடன் எதையும் நிறைவேற்ற வேண்டுமாளுல், இரண்டு தன்மைகளும் கலந்தே உறுதிச்செயல் நிகழும். உண்மையை உணர்ந்து, அதைச் செயலில் ஆற்றும் சக்தி வாய்ந்த உத்தமத் தியாகியே, உயர்ந்த தளராத மன உறுதியுடையவன்.

இயற்கையில், மன உறுதியை உறுதியாக நிலைக்க வைப்பதே பெருஞ் செயல். சமூகத்தில், மன உறுதி பிளவுபட்டுக் கிடக்கிறது; இதனுலேயே, உலகத்தைக் காக்க தியாகிகளும் மதங்களும் அவசியம் வேண்டும். முன்னேற ஓரே வழி; தியாகி அதை உடனே யறிந்து, அதே குறிக்கோளுடன் வேகமாய்ச் செயலாற்றி, உலகத்தையே காப்பாற்றுகிருன்; அவனுடைய நற்செயலே உலக முன்னேற்றம்; அவன் வேண்டாத எதுவும் உலகத்திற்கு வேண்டாதவையே. அவன் மனமும் செயலும் விரிய விரிய, உலகம்

புகழும் உயர்ந்து முன்னேறுகிறது. அவன் கண்ணிலே சூரியஒளி சுடர்கிறது. அவனுடைய செயல் உயர உயர, புகழ் உயர உயர, நாம் எண்ணிக்கையையும், பணத்தையும், சிநேகிதர் நிலையையும், இழுப்பையும், விதியின் மற்ற அம்சங்களையும் மறக்கிறோம்.

## இரண்டு சக்திகள்

மனிதனின் உறுதியான செயல், அவனுடைய வளர்ச்சியை அளந்துகொண்டு செல்லுகிறது. குழந்தைகள் தங்கள் வீடுகளில் சுவற்றை எதிர்த்து நின்று தங்கள் உயரங்களை வருஷா வருஷம் கோடு கிழித்துப் பார்ப்பது போல், நாமும் விதியை எதிர்த்து நிற்கின்றோம். பையன் மனிதனாக முற்றி வளர்ந்தபின், வீட்டுக்குத் தலைவனான உடன், அவன் அந்தச் சுவற்றை இடித்துவிட்டு, புதிய பெரிய சுவர் எடுக்கிறான். இது காலத்தை ஒட்டிய கேள்வியேயாகும். ஒவ்வொரு தைரியமுள்ள வாலிபனும், தகுந்த தயாரிப்பின் பேரில், கொடிய ஜந்துவையும் அடக்கி ஆளுகிறான். எண்ணம்போல் வளரவும் குறைக்கவும் மனிதனிடம் சக்தியுண்டு; விதி, அதை எதிர்த்து நிற்கும். மனித சக்தி, இரண்டையும் கண்டபின்னுவது, நமக்கு ஒற்றுமையில் நம்பிக்கை உண்டாகிறதா? மனிதர்களில் பெரும்பாலார் இரண்டு தெய்வங்கள் உண்டென்று நம்புகிறார்கள். வீட்டில் ஒரு சக்தியும், தொழிற்சாலையில் மற்றொரு சக்தியும் உலகத்தை ஆட்டிவருவதாக அவர்கள் எண்ணுகிறார்கள். வாழ்க்கையில், சமூகத்தில், கடிதங்களில் கலையில், காதலில், மதத்தில், நண்பனாகவும் தாய் தந்தையராகவும் நடத்தி வருவது ஒரு சக்தி யென்றும், இயந்திரச் சுழற்சியில், சிநேகித வளர்ச்சியில், தொழிலில் அரசியலில். வேறொரு சக்தி ஆட்டிவைப்பதாகவும் கருதுகிறார்கள்; ஒரு பகுதியில் உள்ள தன்மையையும் செயலையும் மற்றொரு பகுதிக்கு மாற்ற முயலுவது பெருங்

தவறு என்றும் நினைக்கிறார்கள். தங்கள் வீட்டில் நல்லவர்கள், யோக்கியர்கள், பெருந்தன்மை யுடையவர்கள் என்று கருதப்படுவார்கள்; சந்தையில்உள்ள தொழிற் போரில் ஓநாய்களாகவும் நரிகளாகவுமே மாறிவிட வில்லையா? எலெக்ஷன் ஓட்டில், சதிசெய்து மறுக்கும் சண்டாளர்கள் இல்லையா? ஓரளவு தெய்வநம்பிக்கை யுடன் இருந்துகொண்டு, கடவுள் தங்களைக் காப்பாற் றுவார் என்று நம்புகிறார்கள்; ஆனால் கடலில் படகில் செல்லும்போதும், தொத்து நோய் பரவி வரும்போதும், யுத்தத்திலும், தெய்வத்துக்கு விரோதமாக ஏதோ ஒரு கொடிய சக்தி மனித வாழ்க்கையை அசைப்பதாகவே எண்ணுகிறார்கள்.

## உள்ளாராய்ச்சி

உலக வாழ்க்கையில் எப்பகுதியிலும், எந்த நேரத் திலும், காரியத் தொடர்பும் காரண சம்பந்தமும் உண்டு. இவ்வுலகில், மனிதனின் பார்வை நிற்கிற இடத்தில் கடவுளின் ஆக்ஞையும் நிற்கவில்லை. இதே சட்டத்தில் தான், எந்த சக்தியும் நேசமாகவும் உறுதியாகவும் உழைத்து வருகிறது. நம் கண்முன் ஆராயப்படாத விஷயங்களே விதியின் எல்லைஎன்று நாம் கருதநேரிடு கிறது; சிந்தனையில் விழாத விஷயமே, விதிக்கோடாக நாம் எண்ணுகிறோம்; உட் காரணங்களை நாம் ஆராய முடிய வில்லை. காரணங்களின் உட்பொருள் நமக்குப் புலப்படா விட்டால், நாம் எதையும் விதி, விதி என்று கதறுகிறோம்.

நம்மை அறுத்தெறிய எத்தனிக்கும் ஒவ்வொரு சூழலையும் ஆராய்ந்து பார்த்தால், அதை நாம் மதியால் துணைச் சக்தியாக மாற்றி யமைத்துக்கொள்ளலாம் என்று அறியலாம். புலப்படாக் காரணங்களே, அறிய முயலாத விஷயங்களே, விதியின்கீழ் வரும். சுப்பலையும்

மாலுமியையும் மூழ்கடிக்கும் அலையில், நீ நீந்திப் பழகிவிட்டால், எதையும் எதிர்த்து, கடலின் கொந்தளிப்பையே ஒரு துணைச் சக்தியாக மாற்றிக் கொள்ள முடியும். பனிக்கட்டியில் உள்ள குளிர்ந்த நிலை, நம்மையே ஜில்லிடச் செய்யலாம்; ஆனால் அதில் விளையாடிப் பழகினால், அதில் ஓர் உணர்ச்சி இன்பம், கவிதை யின்பம், செயலின்பம் வரக்காணலாம். இதிலே, உடலும் மூளையும் உறுதிப்பட்டு, ஒருவன் உயர்ந்த பதவியை அடைந்துவிடலாம். ஓர் ஆளும் சாக்ஸன் ஜாதிக்கே, கடலும் குளிரும் பெரும் பயிற்சி யளித் துள்ளன. ஆயிரம் ஆண்டுகளில் அவர்கள் வளர்ந்து பயின்று, நூறு இங்கிலாந்துகளையும், நூறு மெக்ஸிகோக் களையும் உண்டுபண்ணி யிருக்கிறார்கள். கடல், நீராவி, மின்சாரம், உலோகங்களைக் கம்பியாக அடித்து நீட்டும் தன்மை, பலூன், இவைகள் எல்லாம், முயற்சியின் முற் போக்கால், உங்களை எதிர்நோக்கி நிற்கின்றன.

யுத்தத்தைவிட ஜ்வரம், வருஷா வருஷம் அதிக மான உயிர்ச்சேதம் செய்கிறது. ஆனால் சாக்கடை நீர் சரியாக ஓடினால், ஜ்வரம் மறைந்துவிடுகிறது. கடலில் உடல் வெளுத்து, 'பிளேக்' நோயால் தாக்கப்பட்ட நிலையில், எலுமிச்சம்பழச் சாறால் நோய் மாறி, குணம் அடைகிறது. காலரா, அம்மையால் தாக்கப்பட்டு மடியும் ஜனத்தொகையை, நல்ல நீர் ஓட்டமுள்ள சாக்கடை யாலும், அம்மை குத்தலாலும் நாம் காப்பாற்ற முடியும். காரண காரியத் தொடர்பை யுணர்ந்து, எந்தக் குறையை யும் நாம் விலக்க முயலலாம்; குணதோஷத்துடன் போரிட்டு, நன்மையைத் தேடமுடியும். தோற்ற எதிரி யிடமிருந்தும் சில நன்மைகளை நாம் அறிய முடியும். கலை, பதுங்கிக் கிடக்கும் விஷத்தை வெளியே இழுத்துக் கொண்டு வருகிறது. அலையோட்டமும், மனிதனுக்கு

அடிமையாக உழைக்கிறது; கொடிய மிருகங்களையும், தனக்கு உணவாகவும், ஆடையாகவும், கூலியாகவும் மனிதன் ஆக்கிவிடுகிறான்; கடிகாரத்தை அடக்கி ஆளுவது போல், ரஸாயன வெடிகளையும் மனிதன் துணிந்து ஆளுகிறான். இவைகளே மனிதன் ஏறும் யுத்தக் குதிரைகள். மனிதன் எதையும் எவ்வகையிலும் அசைக்கிறான்; குதிரைக் கால்களிலும், புயலின் சிறகுகளிலும், நீராவியிலும், பலூன் காற்றிலும், மின்சாரத்திலும், மனிதன் பறந்து செல்லுகிறான்; ஆகாசத்தில், உயரப் பறந்து, கழுகுடனும் போரிடுகிறான். எதனாலும் மனிதன் எதையும் எதிர்த்து வெற்றிபெறுகிறான்.

ஒரு காலத்தில், நாம் நீராவியை ஒரு பைசாசம் என்று கருதினோம்! குயவன் செய்யும் சட்டியின் மேல் மூடியில், நீராவிப் பைசாசத்தை வெளியே அனுப்ப ஒரு சிறு துவாரம் விட்டு வைப்பதுண்டு. இந்த துவாரம் இல்லா இல்லாவிடின், அந்த சைத்தான் பானையையும் கூரையையும், வீட்டையுமே தூக்கிக்கொண்டு போய்விடும் என்று பயந்தார்கள், வாட், புல்டன் என்ற அறிவிற் சிறந்த மேதைகள். இந்த நீரா்வியின் அபூர்வ சக்தியை அறிந்தார்கள்: நீராவி பைசாசமல்ல, அதுவே மனிதனுக்கு உதவும் அகண்ட சக்தி வாய்ந்த தெய்வம் என்று கண்டு, ஜனங்களுக்கு இந்த அதிசயத்தை எடுத்துக் காட்டினார்கள். நீராவியின் அபூர்வ சக்தியை வீணாக்காமல், உடனே மனித சமூகத்துக்குப் பயன்படுத்தினார்கள். நீராவியே நமக்குப் பேருதவி செய்யும் செயலாளன் என்று அறிந்தார்கள். ஜனங்களின் முன், செயலில் விளக்கிக் காட்டினார்கள். எதிர்க்க முடியாத பொருள்களையெல்லாம், இந்த நீராவியின் சக்தியால் எதிர்த்துக் கைவசப்படுத்தினார்கள். மலை, நீர், இயந்திரம் எல்லாம் நீராவியின் எதிர்ப்புக்குச் சாய்ந்து படிந்து உழைத்தன. காலத்தை

யும் இடத்தையும் வேகமாய்த் தாண்டும் சக்தி படைத்தது, இந்த அபூர்வ நீராவி.

எந்த சக்தியின் நிலைமையும் இதுபோன்றதே. கோடிக் கணக்கான ஜனங்களின் அபிப்பிராயமும் இந்த விதமான சக்தி வாய்ந்ததே: சமூகத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக அமைக்கப்பட்ட பல படிகள்,—போர் வீரர்கள், பிரபுக்கள், உச்சியில் அரசன்; மாளிகைகள், போர் நிலையங்கள், போலீஸ். மத்தியில், மதப் பிளவுகள் உட்புகுந்து, பழைய சமூக மகுடங்களையும் பிரிவுகளையும் திடீரென்று பலவீனப் படுத்தலாம். சக்தியை உணர்ந்த அரசியல் நிபுணர்கள், வாட்ஸ் புல்டனைப்போல, அரசியலிலும் சக்தியின் தத்துவத்தை ஆழ அறிந்து மனித சமூக அமைப்பில் சக்தியைப் பல படிகளாக வரிசைப் படுத்தி, அரசியல் அமைப்பை எக்காலமும் அசைக்க முடியாத முறையில் சிருஷ்டித்திருக்கிறார்கள். சக்தி, சிதறாமல், ஒற்றுமையாக உழைத்து வருகிறது.

## விதியின் பாடம்

விதியின் பாடங்கள், மிக மிக வெறுக்கத் தக்கவையே. அதிர்ஷ்டக் கோடுகளை, நமது முகத்தில் கண்டு சொல்ல முயற்சிப்பவனை யார் விரும்புகிறார்கள்? நம்முடைய மனதிலும் மூளையிலும் மண்டிக் கிடக்கும் பல கெடுதல்களும், நம்மைக் கீழே இழுத்துவிடும் என்று சொல்லுவதை யார் நம்புகிறார்கள்? நேபிள்ஸ் தேசத்தான் வளர வளர, முதிர முதிர, பெரிய ஆஷாடபூதியாக மாறிவிடுகிறான் என்று ஓர் அறிவிற்சிறந்த வைத்திய நிபுணர் கூறுவதை ஆராய்ந்து பாருங்கள். ஓரளவு இதுவும் உண்மைதான்.

ஆனால் இவைகள் எல்லாம், வெடிமருந்துச் சுரங்கங்கள், போர் நிலையங்கள். ஒருவன் தன் குறைகளை விரும்பி,

திறமைகளைக் கண்டு நடுங்கவும் வேண்டும். ஒருவனுடைய அபூர்வ சக்தி, அவனுடைய உடல் நலத்தையே க்ஷீணிக்கவும் செய்துவிடுகிறது; ஒரு பக்கம் குறை, மறுபக்கம் நிறைவாக மாறிவிடுகிறது! பொறுமையோடு வருந்தி உழைப்பதே யூதர்களின் தருமமாயிருக்க, அவர்கள் தற்காலம் உலகத்தையே ஆளவும் புறப்பட்டுவிட்டார்கள். விதியே பாறையானால், தீமையே ஆரம்ப நன்மையானால், தடையே பின்வரும் வளர்ச்சியானால், துக்கமும் எதிர்ப்பும் சுமையுமே நாம் பறக்கும் சிறகாய் அமைந்துவிட்டால் நம்முடைய உயர்ந்த மனநிலை, உண்மையறிந்த பக்குவத்தில் பெருஞ் சாந்தத்தை யடைந்துவிடும். மனப்பிளவு மாறிவிடும்.

## விதியே விடுதலை

விதியே விடுதலை; விதியே சாந்தம். உலகத்தில் எதுவும் ஏறி இறங்கியே அமைதியும் சாந்தமும் அடைகிறது. உலகத்தில் முழுமையும் அதன் பின்னங்களும், ஒன்றையொன்று தழுவியே, நன்மையைக் கருதி, உடல் நலத்தையும் பலத்தையும் ஒட்டியே சுழல்கின்றன. சமூகம் பலபடிகளாக, மேல்நோக்கி வளர வளர, முன்னே தோன்றிய பகுதிகள் மடிய மடிய, புதுப் புது வகுப்புகள் சமூகத்தில் உயர வளர்கின்றன; வளரும் ஆத்மாவின்முன், சுதந்திரம் சுடர்கிறது, வளர்கிறது, மேன்மையடைகிறது, மனிதனின் நீண்டகால வளர்ச்சியில், நாம் கண்ட புது உண்மைகளும், புது அறிவின் அதிசயங்களும், செயலாற்றியவர்களின் சிறப்புக்களையே எடுத்துரைக்கின்றன; நாம் அறிந்த புது உண்மைகளெல்லாம், நாம் விதியின் கையினின்று பிடுங்கி வைத்திருக்கும் சுதந்திரத்தையும் விடுதலையையுமே சுட்டிக் காட்டுகின்றன. விடுதலையே மனிதவளர்ச்சி, விடுதலையே உலக வளர்ச்சி; கட்டைமீறி முன்னேறி வளரும் மனிதனே,

விதியை எதிர்க்கும் விடுதலை வீரன். ஒவ்வொரு துன்பமும், ஒரு வழிகாட்டி; இதுவே நன்மையைத் தூண்டுகிறது. உலகமே போர்மயம்: மிருக உலகிலே, உணவுச் சண்டை, பல்லை உடைக்கிறது, கர்ஜிக்கிறது, கதறுகிறது; ஆனால் இதே மிருகங்களை, நாம் நல்ல முறைகளில் உபயோகப்படுத்தவும் வழியேற்படுகிறது.

'விதியே விடுதலை, விடுதலையே விதி' என்ற நுட்பமான எல்லைகளுள் நுழைந்து பார்க்கும்போது, இயற்கையின் சல்லிவேர் வரை, விதியும் விடுதலையும் உட்காரணத்துடன் எவ்வாறு பின்னப்பட்டிருக்கின்றன என்பதை நீ ஆழமாய் அறிய முயல். நமது நெருங்கிய வாழ்வு, தனது தொடர்பை எட்டி வீசியிருக்கிறது. இயற்கையின் முடிச்சு, கெட்டியானது; அதனுடைய இரண்டு முனைகளையும் ஒருவரும் காண முயலவில்லை. காண்பதும் கஷ்டம். பிரகிருதியே, பெரும் பின்னல், வாழ்வின் வலை, முடிவற்றது, மிஞ்சிக் கிடப்பது. அழகிய அரசர் - கல்லூரியின் முதற்கல்லை எங்கே வைப்பது என்று யாருங் காட்டினால், தாம் மறு கல்லைக் கட்டுவதாகக் கூறினார், கிரிஸ்தோபர் ரென். பல பகுதிகள் அடங்கிய மனித வாழ்வின் கட்டிடத்தில், முதற்றோன்றிய அணுவை எங்கே கண்டறிவோம்? இயற்கையில், தன்னுள் தோன்றிய இயற்கை யியல்புள்ள பழக்கமே, காரணத் தொடர்பாக அமைந்துவிடுகிறது. உணவும் உறக்கமும், சீதோஷ்ண நிலையைப் பின்பற்றியே அமைந்திருப்பது இயற்கையின் நுட்பமான விதி.

ஒளியில் கண்கள், ஒலிக்கும் காற்றில் காதுகள், நிலத்தில் பாதங்கள், நீரில் மீன் செதிள்கள், விண்ணில் சிறகுகள்-எல்லாம், ஒவ்வொன்றும் தத்தம் இயல்பிற்குத் தக்கபடி இயற்கைப் பொருளில் இடம் பெற்றிருக்கின்றன. உலக சிருஷ்டியில், ஒவ்வொரு பகுதியிலும்

அதையொட்டிய ஜந்துக்கள் வாழ்கின்றன. ஜந்துவும் அதன் உணவும், அதை உறிஞ்சும் அட்டையும் அதன் எதிரியும், ஒன்றையொன்று தழுவி உயிர் வாழ்வதைக் காணலாம். சக்தித் தராசு நிலைத்து ஆடாமல் நிற்கிறது. உயிரின் விரிவில், எதுவும் குறையவுமில்லை, கூடவுமில்லை. மனித சிருஷ்டியின் பல அமைப்புகளும் அப்படியே; மனிதன் கரி மூட்டி உணவு சமைத்து, ஜன்னலுள்ள வீடு அமைத்து, நண்பர்களுடன் அன்புடன் சிரித்து, கூடிக் குலாவிக் கண்ணீர்விட்டு வாழ்கிறான். காற்றும் உணவும் தவிர, மனித தேவைகள் பல உண்டு: மனிதன், தன்னைச் சுற்றி வளர்ந்திருப்பதை உடனே வளைத்து ஒடித்துப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். தோன்றி மறைவன யாவும் அவனுடைய சிருஷ்டியின் இயல்பையே சோதித்து உறுதி பெறுகின்றன. தாந்தே, கொலம்பஸ் போன்றவர்கள் பிறந்ததற்கு அறிகுறியாக, விண்ணிலும் மண்ணிலும் நாம் என்ன அற்புதங்களைப் பார்க்கிறோம்!

## இயற்கை நிகழ்ச்சி

இது எப்படி நிகழ்கிறது? இயற்கை, காலத்தையோ, முயற்சியையோ வீணாக்குவதில்லை; எட்டிப்போகாமல், குறுக்குப் பாதையில் எதையும் நிறைவேற்றவே, அது முயல்கிறது. போர் வீரர்களுக்குத் தலைவன் கூறியது போல, கோட்டை வேண்டுமானால், அதைக் கட்டி எழுப்ப வேண்டும். ஒவ்வொரு உயிர்வாழும் ஜந்துவும், உழைத்தே வாழ வேண்டும்; அது கோளமாயிருந்தாலும் சரி, பிராணியாயிருந்தாலும் சரி, மரமாயிருந்தாலும் சரி, முயற்சியால் முளைத்து வரவேண்டும். பிறந்தவுடன், உட்பிறந்த உயிர்ச்சக்தி, தன்னையே தன் முயற்சியில் இழுத்துச் செல்கிறது. எதையும் ஜீரணித்து உபயோகப் படுத்தும் சக்தி அதற்கு வந்து விடுகிறது. வாழ்க்கையே

PALLATHUR,

விடுதலை; உட்சக்தியை [illegible] வெளிச் சுதந்திரம். மனிதன் பிறந்ததும், உள்ளும் புறமும், சக்தியும் அகண்ட சக்தியும் கண்ணைத் திறக்கின்றன; அவனைச் சுற்றி எல்லையற்ற இயற்கைக்கு மேற்பட்ட சக்தியும் சூழ்ந்து வருகிறது. மனிதனுடைய சக்தியை அவனுடைய தசைச் சுமையால் மாத்திரம் அளந்துவிட முடியாது; அவனுடைய சக்தி தோலளவில் கட்டுப்பட்டு நிற்கவில்லை, விரிந்து பரவிக்கொண்டே முயற்சியில் உள்ளும் புறமும் ஆக்கம் பெற்று அதிசயமாக வளர்கிறது. மனிதன் எதையும் தழுவித் தொட்டுக் கொக்கரிக்கும பிராணி! அவன் குணம் எங்கும் ஒளி வீசுகிறது. ஒரு சிறு மெழுகுதிரியும், தன்னுடைய கிரணங்களை ஒரு மைல் விரிவிற்கு அள்ளி வீசுகிறது; பெண்ணின் உடலிலுள்ள முலைக்காம்புகள் நட்சத்திரங்களையே தொடுகின்றன.

உலகத்திலே, எதையும் இயற்கையை ஒட்டி முயற்சியால் செயலாற்றிவிடலாம். ஒவ்வொரு செடியும் விரிந்து விரிந்து, வேர் இலை, பட்டை, முள் முதலியவற்றைத் தூவிக்கொண்டு வளருகிறது. உயிர் வளர்ச்சியின் முதலறையிலே, வயிறு, வாய், மூக்கு, நகம் எல்லாம் தேவைப்பட்ட இடத்தில் வளர்ந்து வருவதைக் காணலாம். உலகம் தன்னுடைய உயிரை, ஒரு வீரனிடமோ, ஆடு மேய்க்கியினிடமோ அள்ளிக் கொட்டிவிடுகிறது. தாந்தேயும், கொலம்பசும், தங்கள் காலங்களில், இதாலியர்கள்: இன்று அவர்கள் ரஷியர்களாகவோ, அமெரிக்கர்களாகவோ மாறிவிடுவார்கள். காலம் கனியக் கனிய, புது மனிதர்கள் தோன்றுவார்கள். இப்படி மாறி அமைவதால், எவ்விதத் துன்பமும் இல்லை. கால வளர்ச்சியில், பொருள் வளர்ச்சியில், குணம் வளர வளர, உலகத்தையே ஒருமைப்படுத்தி ஆட்டும் காரண சக்தி, செயலில் முன்னேறி வருகிறது; பல பருவங்

கள் தாண்டி, உன்னத நிலையை அடைகிறது, சிருஷ்டி சிறப்பின் அற்புதம்.

## காலமும் செயலும்

உலக மகாரகஸ்யம் இதுவே: மனிதனுக்கும் வெளி நிகழ்ச்சிக்கும் உள்ள சம்மந்தம், மனிதன் செயலாற்று கிறான்; நிகழ்ச்சியும் மனிதனைத் திருத்தி அமைக்கிறது. காரணம், காரியம் இரண்டும் ஒன்றையொன்று தழுவியே இயங்குகின்றன. நீண்ட சரித்திரக் காலங்களை குறுக்கே அளந்தால், மனிதச் செயல்களே மின்னிக்கொண்டு நிற்கும்: காலமே செயல், செயலே காலம். பெரியார் களின் செயல்களே காலவரைகள்: கதே, ஹெகல், மெடர்நிச், ஆடம்ஸ், கால்கூன், குஷோத், பீல், காப்டன், கோசுத், ராத்சைல்டு, ஆஸ்டர், புருனல்,—போன்ற பலரும் பெருஞ் செயலாற்றிய பெரியார்கள், அதிசய புருஷர்கள். மனிதனும், அவனைச் சுற்றியமைந்துள்ள கால நிலைகளும், ஆண் பெண் இணைப்பும், பிராணிகளின் வம்சங்களும், அவைகளின் உணவுத் தொடர்புகளும், தகுந்த மூலகாரணங்களுடனேயே இயற்கையில் அமைந் திருக்கின்றன. தொடர்பு மறைந்திருந்தால், விதி மனித னுக்குப் புறம்பானது என்று எண்ணமுடியாது; அவன் மனதில் விதியின் வினை பதுங்கிக் கிடக்கிறது: நிகழ்ச்சியே, உனது உருவத்தின் சாயல்; செயலே உனது தோற்றத்தின் பிரதிபிம்பம். தான் செய்வது தனக்கே சரியென்று தோன் றுகிறது. ஒவ்வொருவனுடைய உடல் மனக்கலப்பில், செயல்கள் ஜனிக்கின்றன. "விதியின் ஆத்மாவும் எனது ஆத்மாவும் ஒன்றேயென இன்றே கண்டேன்" என்று ஆழ்ந்து கூறுகிறார், கவி ஹபீஸ்!

மனிதனைத் தூண்டி வஞ்சிக்கும் உலக இன்பங்கள் எல்லாம்,—வீடு, நிலம், பணம், இடம்பவாழ்வு, அதிகாரம்,

புகழ்— நம்மை வாழ்க்கையில் ஏமாற்றும் கனவுத் தோற்றங்களேயாம். போர்வீரர்கள், தாங்களாகவே சண்டைக்குப் போகவில்லையென்றும், ஏதோ விதி, பின் நின்று அவர்களை ஆட்டி வைப்பதாகவும் கூறுவது பொருந்தாது. மந்திரவாதி, ஒரு பொம்மையை மயிர்க்கம்பியில் சுழற்றுகிறான்; ஆனால் இந்த உட்குட்டை உணரச் சக்தியற்று, ஆழமற்ற கண்களைக்கொண்ட நாம், குருடர்கள்போல் அதிசயப்படுகிறோம். காரணம், காரியம் இரண்டுக்குமுள்ள தொடர்பை நாம் அறிந்துகொள்ள முயல்வதில்லை.

இயற்கையின் சிருஷ்டியில், மனித நிலைகள் குணங்களைப் பொறுத்தே வளர்கின்றன; நீரில் வாத்தும், வானத்தில் கழுகும், கடலோரத்தில் நெடுங்கால் பட்சிகளும், காட்டில் வேடர்களும், கணக்கிடுவதில் கணக்காயர்களும், சண்டையில் போர்வீரர்களும் அமைந்திருக்கிறார்கள். எல்லாம் மனித குணத்தைத் தழுவி வளரும் செயல்களேயாகும்; மனித இன்பம், மனிதனின் உட்குணத்தை ஒட்டியதேயாகும். வாழ்வே ஓர் உணர்ச்சி வெறிக் காதலில் எவ்வளவு பித்தேறி விடுகிறது? இருண்ட தோற்றமும், காதலின் சிகரமாக இன்பவெறியில் மாறிவிட வில்லையா? பைத்தியம் பிடித்தவர்கள் தங்கள் உடை, உணவு, மற்ற வசதிகளையெல்லாம் அலட்சியம் செய்வது போலவும், நாம் கனவு காணும் போது அமைதியாக மிகக் கேவலமான காரியங்களையும் செய்வதாகக் கனவு காண்பதுபோலவும், வாழ்க்கைக் கிண்ணத்தில் ஒரு துளி மது மிகையாகச் சேர்ந்துவிட்டால், நாம் எந்த வேலையிலும் எந்தக் கூட்டத்திலும் கலக்க மறுக்கவேயில்லை; எவ்வாழ்க்கையிலும் இறங்க நாம் கசப்பின்றிச் சம்மதித்து விடுகிறோம். ஒவ்வொரு உயிர்வாழும் ஜந்துவும், தன்னுள்ளிருந்து வருகின்ற நிலையையும் வெளியே தனக்கு வேண்டிய நிலையையும், தன்செயலால், தன்குணத்தால் தீர்மானித்து உறுதிப்

படுத்துகிறது. நத்தை தன்னுடைய கூண்டை உள்ளி ருந்து உருக்கி ஈச்சம்பழ இலையில் ஊற்றி அமைப்பது போலவும், ஆப்பிள் பழத்தை அழிக்கும் மயிர்க்கொடி வெளியே கொப்பளித்து வருவது போலவும், மீன் தன்னு டைய எலும்புக் கூட்டையும் அமைத்துக் கொள்ளுகிறது. இளமையில் நாம் நம்மை வானவிற்களால் அலங்கரித்துக் கொண்டு, பல அண்டங்களையும் நாம் ஆளுபவர்கள்போல வெளியே துணிந்து செல்லுகிறோம். முதுமையடைந்ததும், நாம் வேறு குணங்களையே காட்டுகிறோம்—கீல்வாதம், ஜ்வரம், தசைவாதம், நிலையற்ற மனம், ஐயம், பேராசை, சலனம் முதலியன!

## அதிர்ஷ்டம்

ஒருவனுடைய அதிர்ஷ்டங்கள், குணத்தின் கனிகள். அவனுடைய நண்பர்கள், அவனை இழுக்கும் காந்தமுடை யவர்கள். ஹெரடோடஸ், புளூடார்க் போன்றவர்களிடம், விதியின் அறிகுறிகளைக் காண்கிறோம்; நாமே விதியின் சின்னங்களல்லவா? நமது வாழ்க்கையில், நாம் விதியின் கையினின்று தப்பவேண்டுமென்று எவ்வளவு சூழ்ச்சி செய் தாலும், இறுதியில் நாம் தப்பமுடியாமல் விதியின் கையில் அகப்படுவதும் உறுதி. நம்முடைய ஒவ்வொரு செயலும், விதியின் வீதிக்கே நம்மை இழுத்துச் செல்லுகிறது.

ஒருவனை எதிர்நோக்கிவரும் நிகழ்ச்சிகள், அவனு டைய குணத்தின் சுடரையே எடுத்துக் காட்டுவதும் இயல்பு; குணம் அவனுட் பிறந்து, அவனை எப்போதும் எங்கும் தொடர்ந்து செல்லுகிறது. குணம் விரிய விரிய, செயலும் நிகழ்ச்சியும் விரிந்து கொண்டே செல்லும். குழந்தைப் பருவத்தில், பொம்மைகளுடன் வாழ்ந்தான்; வளரவளர, மனிதனுடைய தன்மை விரிந்துவிரிந்து, பெரிய காரியங்களில் ஈடுபட்டு, நண்பர்களிடமும், புகழிலும்,

செயலிலும், லட்சியங்களிலும் ஐக்கியமடைந்து விடுகிறது. அவன் ஓர் அதிர்ஷ்டச் சின்னமாகத் தோன்றுகிறுன்— ஆனால், அவனே காரண இயல்பைக் காட்டும் ஒரு சின்னம்; அவனுள், காரணங்கள் பின்னப்பட்டு வளர்கின்றன. மனிதனே பல செயல்களின் காரணமாக அமைகிறுன். எந்த நாட்டையும், எந்தச் சந்தையையும் மனிதன் தன் முயற்சியால் எழுப்பி வளர்க்கிறுன். பல தேசங்களைக் கட்டிய பெரியார்களைப் பார்க்கும்போது, அவர்கள் சாதாரண மனிதர்களாயல்லாது, 'நடமாடும் தேசங்களாகவே' காட்சியளிக்கிறுர்கள். புது பிராட்போர்ட், லின், லவல், லாரன்ஸ், கிளிண்டன், பிட்ச்பர்க், ஹோலியோக், போர்ட்லண்ட், இன்னும் மற்ற வியாபார ஸ்தலங்களைக் கட்டியவர்கள், பெரு முயற்சியில் ஈடுபட்ட பெரியார்களே.

## மனேசக்தியும், சிந்தனையும்

சரித்திரத்தில், இரண்டு சக்திகளே எதிர்த்து நின்று வளர்கின்றன—, இயற்கையும் சிந்தனையும். இரண்டு பையன்கள் கயிறு இழுப்பதுபோல, இந்த இரண்டு சக்திகளும் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. ஒன்று தள்ள வேண்டும் அல்லது தள்ளப்படவேண்டும். ஜடமும் மனமும் மோதி மோதியே நிலைபெறுகின்றன. மண்ணில், இயற்கையில், எந்தத் திட பதார்த்தமும் மனிதனுடைய சிந்தனைத் தீயில் உருகி உருகி உருவெடுக்கின்றது. மனநிலை உயர உயர, அதன்முன் எதுவும் எதிர்த்து நிற்காது; சூட்சம சக்தியுடன், மனம் தாவித் தாவிச் சென்று, தீப்பதத்தில் எதையும் உருக்கி அமைத்துவிடும். மனித மனத்தின்முன், நகரம் வளர்கிறது, பாறை உடைகிறது. மனித முயற்சியால், மன வேகத்தால், மரம், கனி, வஜ்ஜிரம், இரும்பு, எல்லாம் மனிதன் கையில் சிக்குகின்றன. சிந்தனைக் கம்பிகளில், உலக நிலைகளும் கனிகளும் சுழல்கின்

றன; உழைத்தால், உறுதியாக அபூர்வப்பலன்களை எங்கும் பெறலாம். ஒவ்வொருவனும் உழைத்து முன்னேறவேண்டும். கருத்தின் வேற்றுமையால், ஈஜிப்ஷியனும் ரோமனும் ஆஸ்டிரியனும் அமெரிக்கனும் வேற்றுமைப் படுகிறார்கள். மேடையில் வந்து நிற்பவர்கள், ஒருவரோடொருவர் முன் பின் தொடர்புள்ளவர்களே. சிலர் கூர்மையான உள்ளறிவுடையவர்கள்; மற்றவர்கள் அறிவதற்கு முன், பெரிய உண்மைகளைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஊசி முனையில் ஸ்பரிசிப்பதுபோல, சில பெரியார்களின் அபூர்வ சக்திக்கு எதிர்பாராத உண்மைகள் வேகமாகவே புலப்பட்டு விடுகின்றன.

மனநிலையில், உடற்குறைகளும் வந்து மோதுகின்றன. கட்டிடம் சரியான பாகங்களுடன் அமைந்திருந்தால், கட்டிட உறுதியுடன் அழகும் வந்து குவிகிறது. குறையுள்ள கட்டிடத்தில், அழகும் மறைகிறது. இரத்தக் குறை, கூனல், குரலில் வெடிப்பு, இவைகளெல்லாம், மனிதனின் மனநிலையையும் வந்து தாக்கி அழிக்கும். மனிதன் தன் குணத்தால் தாக்கப்படுகிறான்; மனிதன் தன்னுடன் பிறந்த நோயால் மடிகிறான்; அவன் குணதொந்த விகாரன்.

ஒவ்வொரு மனிதனுள்ளும், செடிக்கிருப்பதுபோல, உயிரை யழிக்கும் புழுக்கள் உண்டு. கொடியவனுக்குக் கொடிய விரோதிகள்: வீரனும் தப்பாமல் தாக்கப்படுகிறான். எவனையும் மோசம் பண்ணவும் அழிக்கவும் எதிரியுண்டு: வஞ்சனையாலும், தேன் மொழிப் பசப்பினாலும், ஏமாற்றம் நிகழ்ந்தே தீரும். இந்த மனநிலைப் பின்னலை, சாசர் என்ற கவியும் உறுதிப்படுத்துகிறார். சிலருக்கு, ஓசையின்பமும், சகுனமும், பருவ மாற்றமும், ஜோதிடமும் தித்திக்கலாம்: இதே குணமுள்ளவர்கள், ஒருவரையொருவர் மிக எளிதாக ஏமாற்றிவிடுவார்கள்.

நமது வாழ்க்கை, ஒரு நெருங்கிய வலைப்பின்னல். அது ஒரு வில்லங்கமான கட்டிடம். நாம் அலைந்தலைந்து, உண்மையைக் காண்கிறோம். ஆண் ஈ, பெண் ஈ, வாழ்க்கையில் துணைகொண்டு விடுகின்றன; அதுபோலவே, மனித வாழ்க்கையிலும் ஆண் பெண் ஜோடிகள் அமைவதைப் பார்க்கிறோம். "தேடுவது கிடைக்கும்; நாம் மறுப்பது நம்மையே மறுத்துவிடும்;"—இதுவே கண்கண்ட உண்மை, வாழ்வின் சிருஷ்டி இரகஸ்யம். இளமையில் நாம் தேடுவது, சில சமயங்களில், முதுமைப் பருவத்தில்தான் கிட்டக்கூடியதாயிருக்கிறது. ஆகையால், நாம் எதைத்தேடி முயன்றாலும், உயர்ந்த பொருளையே தேடவேண்டும்.

மனிதனுள் இரண்டு சக்திகள் சுழல்கின்றன. ஒன்று தன்னை யொட்டியது, மற்றொன்று உலகநிலையைப் பொறுத்தது. தனக்கு உதவாத நல்லசெயல்கள், உலக நன்மையைப் பின்னால் வளர்க்க உதவலாம். தன்னையும் உலகத்தையும் சுற்றியே, எந்தச் செயலும் நிகழும். ஒவ்வொரு செயலுக்கும், மேலே சொன்ன இரண்டு தன்மைகள் உண்டு. மனிதன் விதியினிடமிருந்து விலகும்போது, ஈசன் பார்வையில், உலக நன்மையில் ஐக்கியமடைகிறான். எந்த நிலையிலும், சிறு துரும்பும் சுழன்று வந்துசேவை செய்யும்.

உலக சிருஷ்டியின் அழகையும், ஒருமைப் பாட்டையும் கண்டே நான் அதிசயப்படுகிறேன். உலகமே படக்காட்சியாக மாறி மாறி யமைகிறது. வான வில்லும், ஆகாசவளைவும், நீல வான் மூடியும், கண்ணின் நுட்பத்தால் நாம் அறியக் கிடக்கின்றன. உலக ஒற்றுமைக்கு நாம் திருப்பணி எழுப்புவோம்: ஒவ்வொரு அணுவும் சேவை செய்கிறது; குப்பையில் குண்டுமணி போல் மின்னுகிறது. இந்தப் பேருண்மையின் இயற்கையில் இன்பமும் இசைச் சிறப்பும் திகழ்கின்றன.

உலக சிருஷ்டியின் கட்டாய அமைப்பில், எல்லாம் ஒருமைப்பாட்டை நோக்கியே அமைந்திருக்கிறது. வாதியும் பிரதிவாதியும், நண்பனும் எதிரியும், பிராணியும் இரகமும், உணவும் உண்பவனும், ஒரே தன்மையில் தான் ஆக்கப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். இயற்கையில், தத்துவமும் தெய்வத்தன்மையுமே கலந்து மிளிர்கின்றன; பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்ட நாம், ஏன் பஞ்சபூதங்களின் செயல்களைக் கண்டு நடுநடுங்க வேண்டும்? மனிதன் ஊழ்வினைப்பயனால் தனக்கு வரும் எதையும் தடுக்க முடியாது; வேண்டாததை வருவிக்கவும் முடியாது. "வருந்தி அழைத்தாலும் வாராது வாரா, பொருந்துவன போமினென்றாற் போகா" —இதுவே உண்மையான முடிவு! விதியின் சட்டம், மனித அறிவிற்கு மேற்பட்டது; அதை மனிதன் அறிய முயல்வது வீண் முயற்சியாகும். ஆனால் தன்னம்பிக்கையும், தளராவுறுதியும் கொண்ட மாசற்ற நெஞ்சத்தாருக்கு விதி துணையே செய்யும். இன்னல் விளைவிக்காது; களங்கமற்றவர்களுக்கு விதியே கடவுட் கலப்பாகத் தோன்றும்!

# 2. தன்னம்பிக்கை

"நண்பா! உன் சக்திக்குப் புறம்பானது எதுவாயினும் சரி, அதைத் தேடி வீணே அலுக்காதே. உன் அதிர்ஷ்டம், உன்னிடமேதான் உள்ளது; உன் உள்ளத்தில் உள்ளது. இதை அறி. நேர்மையும், தூய்மையும் வாய்மையு முள்ளோனுக்கு, இவ்வுலகும் உடைமையும், அருளும் பொருளும், விதியும் வினையும் ஒரு பொருட்டன்று. ஆதலால், அவை அனைத்தும் உனக்கு அடிமை யெனக் கருது. இன்ப துன்பம் எது வந்தாலும், எப்பொழுது வந்தாலும், அவற்றைக் கண்டு அஞ்சாதே, மயங்காதே, துணிந்து நில். நல்லதும் பொல்லதும், உன் மனமாயையே. அவை, உன்னுடன் எப்போதும் தொடர்ந்து வரும் நிழலே—"

*[போமண்ட், பிளேச்சர் எனும் இருவரும் எழுதிய ஒரு நாடகத்தின் முடிவுரை]*

## கருத்தின் சிறப்பு

சிறந்த ஓவியப் புலவன் ஒருவன் எழுதிய சில பாடல்களை ஒரு சமயம் நான் தற்செயலாய் படித்துப் பார்க்க நேர்ந்தது. அவை, சாதாரணமான மாமூல் கவிகளல்ல; சுயமாய் எழுந்த புதுமைக் கவிகளாய்த் தோன்றின. கருத்து எதுவானாலும் சரி, இத்தகைய கவிகள், அறிவைத் தட்டியெழுப்பும் ஆற்றல் மிக்கவை என்பதை அறிந்தேன். அவை அந்தராத்மாவினின்று பேசுவதால், உட்பொருள் செறிந்து, ஒப்பற்ற இயலழகுடன் விளங்குகின்றன. அன்பா! நான் சொல்லுவதைக் கேள்: உன் அறிவிலூறும் சிந்தனைகளை ஒருபோதும் அலட்சியம் செய்யாதே; அவற்றை நன்கு மதி. உனக்கு நீதி எதுவெனத்

தோன்றுகிறதோ, அதுவே உலகிற்கும் என்று நம்பு; மனித மரபை மதி. இது தான் பேரறிவு, மேதை. உன் உள்ளத்தில், அந்தராத்மாவில் கனியும் தூய எண்ணங்களை அஞ்சாது வெளியிட்டு விடு; தயங்காதே. அவ்வெண்ணங்களே, ஒரு காலத்தில் உலக மக்களின் மதமாகி விட நேரிடும். நீ கவனிக்காவிட்டாலும், உன் சீரிய சிந்தனைகள், ஒரு காலத்தில் உன் இதயத்தினின்று வெளி வந்தே தீரும். நாம் ஆதியில் ஆழ்ந்து ஆராய்ந்தறிந்து முடிவு கட்டிய எண்ணங்களே, இறுதியில் நமக்குச் சரியெனப் புலப்படுவதை நாம் அறிகிறோம். நூலாராய்ச்சியால் எய்திய அறிவுரைகளை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், மோஸஸ், பிளேட்டோ, மில்டன் முதலிய பேரறிஞர்களுக்கும், மகாகவிகளுக்கும் நாம் செலுத்தும் தனி கௌரவம் எதற்காக என்று நினைக்கிறாய்? அவர்கள் தாம் படித்த நூல்களிலிருந்து கருத்துக்களைத் திரட்டி வாரி வழங்கினார்கள் என்பதற்காகவா? இல்லை, இல்லை: அவர்கள் தாம் படித்தறிந்த புத்தக மூட்டைகளைத் தூரக் கட்டி வைத்துவிட்டு, அவற்றைப் பேசாமல், தமது சொந்த இதயத்தினின்று, பூத்துக்கனிந்த அனுபூதிவாக்குகளை உலகிற்குத் தந்தார்கள் என்பதற்காகத்தான்! சாதாரணமாக நாம் மகாகவிகளின் சொல்லமுதத்தையும், ஞானிகளின் திருவாக்குகளையும் கருத்துடன் கவனிக்கிறோம், சிந்திக்கிறோம், கற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் இதைவிட அதிகமான கருத்தூன்றி, அவ்வப்போது நம்முள்ளத்தில் மின்னொளிபோல் பளிச்சிட்டு மறையும் பேரொளி மணிகளை, நாம் தேக்கி வைத்துக் கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும். நம்மில் பலர், நமது சொந்த எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. 'இது அற்பம்' என்று நமது சித்தத்திலிருந்து நாமே ஒரு காலத்தில் விலக்கித் தள்ளிய எண்ணரிய பல கருத்துக்கள்,

உயரிய அற நூல்களில் மிளிர்வதை நாம் சிற்சில சமயங்களில் கண்டுகளிக்கிறோம்!

## சுய முயற்சியும், சிந்தனையும்

நாம் வேலையினின்று விலக்கிய ஒருவன், ஒரு காலத்தில் தன் சுய முயற்சியால் வருந்தி எய்திய புகழுடன் நம்மிடமே திரும்பிவரும்போது, அவனைக் காண நமக்கு எவ்வளவு நாணம் ஏற்படுகிறதோ, அவ்வளவு நாணம் உண்டாகிறது, நாமே அற்பமெனத் தள்ளிவிட்ட நம் அரிய இனிய சிந்தனைகள், அப் பெரிய நூல்களில் வரும் போது! பெரிய காவியங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய புதிய உண்மை, ஒன்றே ஒன்றுதான்: அதாவது, நம் அறிவில் உதிக்கும் சிந்தனைகளையும், உண்மை உணர்ச்சிகளையும் ஒன்றுவிடாமல் சேமித்து வைத்துவிட வேண்டும் என்பதே. நாம் நாள்பல வருந்தி, சிந்தித்துச் சிந்தித்துச் சேமித்து வைத்திருக்கிற பல அரிய கருத்துக்களை, நாளையே வேறொருவன் அற்புதமாகச் சொல்லி விடுவான். அப்போது நம தெண்ணத்தை நாமே பிறனிடமிருந்து தலைகுனிந்து கேட்க நேரிடும்.

## வலிமையும், மனோதிடமும்

பொறாமைப் படுவது மடமையாகும்; அது தீது: ஒருவன் செய்த நூலின் கருத்துக்களை மற்றொருவன் திருடித் தன் உடைமையாக்கிக் கொள்ளுதல், தன்னைத் தானே தற்கொலை செய்து கொள்ளுவதற்கு ஒப்பாகும். நலமோ தீதோ, நம் மனவலிவையே நாம் ஆதாரமாகவும், சிறந்த நிதியாகவும் கொள்ள வேண்டும். இந்த அகண்ட உலகில் எங்கு நோக்கினும் இயற்கைச் செல்வம் நிரம்பிக் கிடக்கிறது; இருந்தும், பயனென்ன? தன் நிலத்தை உழுது அதைப் பயிர் செய்துண்ணத் தெரியாதவனுக்கு

ஒரு தானியமணியாவது கிடைக்குமா? கிடைப்பதரிது. இவ்வுண்மை, ஒவ்வொரு ஆசிரியனுக்கும் ஒரு காலத்தில் மனத்தில் நன்கு பதிந்து விடுகிறது. ஒவ்வொருவனும் 'தன்னுதவி பொன்னுதவி' என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மனிதனுள் எழும் எண்ணத்திற்கும், இயற்கைக்கும் அதிகத் தொடர்புண்டு: இன்று நமக்கு ஓர் உருவத்தில் விருப்பமிருக்கும்; நாளையே அது நம தெண்ணத்தைக் கவரச் சக்தியற்றுவிடும். நாம், நமது சிந்தனைகளை அரை யுங் குறையுமாக வெளியிடுகிறோம். ஆனால், எந்தப் பரம் பொருளின் சின்னமாக நாம் விளங்குகிறோமோ, அந்தக் கடவுளுண்மையை வெளியிட நாம் நாணுகிறோம்! அதை மட்டும் நாம் தக்கவாறு வெளியிட்டால், நமது மனோ வாக்குக் காயத்தில் ஒரு தேசும் திருவும் விளங்குமென் பதில் ஐயமில்லை. ஆனால், வீரமில்லாக் கோழைகள் மூலம் ஆண்டவன் ஒருபோதும் செயல் புரியான். இது உண்மை; நம்பு. ஒருவன், தான் மேற்கொண்ட பணியில் முழு மனத்தையும் செலுத்தி, ஊக்கமுடன் அதைச் செய்தால் தான், அவனுக்கு அப் பணியில் அமைதியும் உற்சாகமும் ஏற்படும். அவ்வாறின்றி, அதை வேறு எவ்வாறு இயற் றினும், அவனுக்கு மனத்தில் சாந்தம் எய்தவே எய்தாது. செய்யும் பணியில் அவன் சிந்தையனைத்தையும் செலுத் தாவிடில், அவனுக்கு உய்வில்லை. அரைமனத்தனாக ஒருவன் செயலில் இறங்கும்போது, அவனை அறிவுப் புலமை நீங்கிவிடும்; அவனுக்குக் கலைவாணியின் திரு வருள் கிட்டாது. அவன் கற்பனை வரளும்; நம்பிக்கை சோம்பும்.

## நம்பு, நினை, முயல்!

நண்பா! நீ உன்னையே நம்பு. நீ மகாவலிமையும், மனோ திடமும் தன்னுறுதியும் படைத்தவன் என்பது, உன்

சிந்தையில் எப்பொழுதும் ஊறிக் கிடக்கட்டும். அந்தத் தன்னம்பிக்கை உன்னுள் இருக்கும் வரை, எல்லா உள்ளங்களும் உன் வழியை நாடும். ஆண்டவன் உன்னை எங்கு வைக்கிருனே, அங்கிரு ; அவ்விடத்தில் அமைதியாயிருந்து பணியாற்று. அவன் ஆணையை ஒருபோதும் மீருதே ; உன்னுடன் ஏக காலத்தில் வசிப்போரிடம் நட்புறவை வளர்; அவர்தம் காலநிகழ்ச்சிகளில் கலந்து கொள்; அனுபூதிபெற்ற மகான்களின் போக்கை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள். அவர்கள், தேவ தூதர்கள் ; கடவுளின் திருவடிகளை, குழந்தை யுள்ளத்துடன் வீழ்ந்து துதித்த மகான்கள். அவர்கள் எய்தியுள்ள பக்குவ நிலையைப் பார்த்தால், அவர்கள் ஆண்டவன் அருளால் தூண்டப்பெற்று விளங்கும், மனோ வாக்குக் காயசித்தி பெற்ற மகாத்மாக்கள், அவதாரபுருஷர்கள் என்றே நமக்குத்தோன்றும். அவ்வனுபூதிச் செல்வர்களைப் போன்று நாமும் ஆகமுடியும். அதற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது? நாம் குழந்தைகளல்லோம் ; நோயாளிகளல்லோம்; நாமும் ஆண் பிள்ளைகளே, வீர மைந்தர்களே ! ஏதோ ஒரு புரட்சியைக் கண்டு நாம் நடுங்கி ஓடலாமா ? இது கோழைத்தனமல்லவா ? நாம் எல்லாம் வல்ல திருவருட் சக்தியின் ஆணையைச் சிரமேற் கொண்டு, உலகில் பேரிருள் கவிந்த மடமையைக் கொளுத்தி, மக்களைக்காக்கப் படையெடுத்துச் செல்லும் வீரர்கள் அன்ருே? பின்வரும் சந்ததிகளுக்கு வழி காட்டிகளன்ருே ? வள்ளல்களன்ருே ? ஆதலால், அந்த அருட்பெரியார் தமது அந்தராத்மாவில் அனுபவித்து வந்த பேரின்பத்தை நாமும் நாடுவோமாக !

இவ் விஷயத்திற்கு உதாரணமாக, இயற்கை தேவியானவள், கைக் குழந்தைகள், சிறுவர்கள்—ஏன் மிருகங்களின் முகத்திலும் நடையிலுங்கூட—எத்தனையோ படிப்பினைகளைக் கொட்டி வைத்திருக்கிருள் ! நமது அலைந்த

மனமும், குலைந்த உள்ளமும் அவர்களிடம் கிடையாது. நமது கருத்துக்களுக்கு இடையூருய், வலிமையுடன் எதிர்த்து நிற்கும் தூய எண்ணங்களைக் கண்டு சகியாது பின்வாங்கும் சிறுமை, அவர்களிடமில்லை. ஆதலால்தான், அவர்கள் விழிகளில் என்றும் தோல்வியே காணு வீரியம் பொலிகிறது! நாம் அவர்களை உற்று நோக்கும் போது, நாணத்தால் வெட்கிப்போய் விடுகிறேம். குழந்தைகள், யாரையும் பொருட் படுத்துவதில்லை. நாம்தான் குழந்தைகளின் போக்கில் செல்ல வேண்டுமே யொழிய, அவை நம் வழிக்கு இணங்கா. ஒரு சிறு குழந்தை, ஐந்தாறு பெரிய மனிதர்களுக்கு ஈடு கொடுப்பதை நாம் சகஜமாகக் காண்கிறேம். அவ்வாறே இளைஞர்கள், பிறரைச் சார்ந்திராமல் 'தன்னுதவி பொன்னுதவி' என்று உழைப்பின், ஆண்டவன் அவர்களது வாழ்வில் ஒரு சிறந்த வனப்பும், அறிவுக் கூர்மையும், உவகையும் அளிக்கிருன். உலகோர் அவர்களுடைய குணத்தை விரும்புவர்; தகுதிக்கேற்ற பெருமை அவர்களுக் கெய்தும்.

## இளைஞர் தன்மை

நண்பா, அதோ! அங்கிருக்கிருனே, அந்த இளைஞன்; அவனுக்கு உன்னிடமும் என்னிடமும் திறமையுடன் பேசத் தெரியவில்லை என்பதற்காக, அவனுக்கு ஆற்றலில்லை என்று நினைத்து விடாதே! அவன், அடுத்த அறையில் இருந்து கொண்டு பேசும் போது, அவன் வார்த்தைகளைக் கூர்ந்து கவனி: அவன் குரல் எவ்வளவு கணீரென்று கேட்கிறது என்பதைப் பார்! அதிலிருந்து அவன் நம்முடன் பேச ஆற்றல் உள்ளவன் என்பது தெரிகிறதல்லவா? எனவே, முதியோராகிய நம் உதவி, அவனுக்கு அவசியமில்லை; அவன் தன் திறமையைக் கொண்டே தனித்து நிற்க முடியும் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்.

தோமூா, கேள் : அன்ன விசாரமற்ற இளைஞர்கள் இருக்கின்றார்களே, அவர்கள் பிறரிடம் நையப்பாட்டுப் பாடுவதை வெறுப்பவர்கள் ; அவர்களுக்கு உலகில் எதுவும் லக்ஷியமில்லை ; அனைத்தையும் துரும்பு போல் மதிப்பவர்கள். இது போலவேதான் பெரிய மனிதர்களின் தன்மையும் இருக்கவேண்டும். நாடகக் கொட்டகையில் தரைப் பேர்வழிகள் எப்படி நடந்து கொள்வார்களோ, அப்படியே வீட்டிற்குள் இளைஞர்களும் இருப்பர்: இளைஞருக்கு யாருமே பொருட்டன்று. ஒன்றுக்கும் கட்டுப்படாமல், பின்வருவதை யோசியாமல், ஒவ்வொருவரையும் 'அவன் நல்லவன், இவன் கெட்டவன் ; அவன் மேதை, இவன் அறிவிலி ; அவன் சீலன், இவன் ஒழுங்கீனன்' என்று பயப்படாமல் எல்லாருக்கும் பட்டங்கட்டி விடுவார்கள். அவர்களுடைய தீர்ப்பு, பாரபக்ஷமில்லாதது ; வஞ்சமற்றது ; நீதான் அவர்கள் தயவை நாடவேண்டுமேயொழிய, அவர்கள் உன் தயவை ஒருபோதும் நாடார்.

## குடும்பி

ஆனால், இல்லறத்தான் மாத்திரம் அங்ஙனம் இருப்பதில்லை: அவன் அச்சமே அவனுக்குச் சிறையாகி விடுகிறது. பிறர் அபிப்பிராயங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வதிலும், பிறரைத் திருப்தி செய்வதிலுமே, குடும்பி தன் அரிய காலத்தை வீணாக்கி விடுகிறான். இளைஞனாயிருந்த போது அவனுக்கு ஏற்பட்டிருந்த சமநோக்கு, இப்போது அவனிடம் காணவில்லை. கட்டற்றவன், நன்மை-தீமை என்னும் இருவினை மயக்கற்றவன், நயம் பயம் இரண்டாலும் சல சலக்காத திடசித்தன், தெளிந்த கருத்துடன் எதையும் தீர்மானிக்கும் ஆற்றல் உடையவன் எவனோ, அவனே ஆண்மைச் சிங்கம் ! அவனைக் கண்டு உலகம் அஞ்சும், கைகூப்பும். அத்தகையோன் எந்தப் பொது விஷயத்தைக்

குறித்தும், தன் கருத்தைத் துணிந்து வெளியிடுவான். அவன் சொல்லுக்கு மதிப்பதிகம்; வார்த்தைக்கு வலிமை மிகுதி. அவன் வார்த்தைகள் சுயநலமற்றவை யாதலின், அவற்றைக் கண்டு மக்கள் அஞ்சுவர்; அவர்கள் உள்ளத்தில் அவ் வார்த்தைகள் அம்பு போல் பாயும்.

## சமூக இடர்

இத்தகைய வலிமை பொருந்திய வாக்குகள், நாம் தனித்திருக்கும் போதுதான், நமது உள்ளத்தின் அமைதியில் உதிக்கின்றன. ஆனால் நாம் உலக விவகாரங்களில் இறங்கும்போது, அவற்றின் நாதம் கேட்பதில்லை. மனிதன் ஆற்றலையும் ஆண்மையையும் அடக்கி யொடுக்க, அவனைச் சுற்றியுள்ள சமூகமே பொறுமையுடன் சமயம் பார்த்து நிற்கிறது. சமூகம், ஒரு கூட்டுறவுச் சங்கம் போன்றது: அதில் சேர்ந்த பங்குக்காரர்கள் எல்லாரும், ஒரு விஷயத்தில் ஒற்றுமை யுடையவர்கள்; ஏக மனம் படைத்தவர்கள். அதாவது, வியாபாரத்தில் கிடைக்கும் லாபத்தை, தமக்குள் பங்கிட்டுக் கொண்டு, தாமே அதை உண்டு களிக்க நினைப்பார்களே யொழிய, தம்மிடம் வருவோர் நலத்தைச் சிறிதும் கவனியார்கள். மாமூல்படி நடப்பவனையே ஜனசமூகம் விரும்பும்; தன் சொந்த அபிப்பிராயப்படி நடப்பவனை, அது வெறுக்கும். இது உலகியல்பு!

## மாமூலும், மனிதத் தன்மையும்

எவன் ஒருவன் மனிதத் தன்மையுடன் நிலவ விரும்புகிறானோ, அவன் மாமூல் பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறிபவனாய் இருக்கவேண்டும். அழியாப் புகழை அடைய விரும்புவோன், தருமம் என்ற பெயரைக் கண்டு மயங்கி

விடக்கூடாது : அது அறமா, இல்லையா வென்று ஆழ்ந்து ஆராய வேண்டும். நண்பா! உனது அறிவின் புனிதத் தன்மையை, நேர்மையை, நீ பாதுகாத்துக் கொள்ளுவது ஒன்று தான், உனக்கு எல்லாவற்றினும் சிறந்த தருமமாகும். நீ பரிசுத்த மனத்தனாகிவிடு ; உடனே, உலகமே உன்னைப் பின்பற்றும் ; இதில் சந்தேகமில்லை. நான் சிறுவனாயிருந்தபோது, ஒரு பெரியார் அடிக்கடி என்னிடம் வந்து, கிறிஸ்துமதக் கொள்கைகளைப் பற்றி விவாதிப்பதுண்டு. அவருக்கு ஒரு சமயம் நான் சொன்ன பதில், இப்பொழுது என் நினைவிற்கு வருகிறது : "ஐயா, என் மனத்தில் எழும் நல்லறிவின் கட்டளைக் கேற்ப நான் நடப்பவன்; புராணங்கள் எதைச் சொன்னபோதிலும், அவற்றில் சிறிதும் அக்கறை கொள்ளாதவன்; இதில் பிழையென்ன?" என்றேன். ஆதலால், உன் மனதில் தோன்றும் எண்ணங்கள் இயற்கையாய் வந்தாலும் சரி, அல்லது செயற்கையால் வந்தாலும் சரி, தம்பீ! நேர்மையை மாத்திரம் கைவிடாதே; உன் உள்ளப் போக்கின்படி நட ; உனக்கு நேர்மையெனத் தோன்றும் இயல்பான அறக் கோட்பாடுகளை மறக்காதே. நல்லது பொல்லது என்பன, வெறும் நாமகரணங்களே. உலகோர், அந்தப் பெயர்களை ஒரு பொருளினின்று மற்றொரு பொருளுக்குச் சுலபமாக மாற்றிவைத்து விடுகின்றனர். [உன் அறிவிற்கு எது சரியென்று தோன்றுகிறதோ, அதையே நியாயமென்று உணர்; அதற்குப் புறம்பானதெல்லாம், அதருமமாகும் என்று எண்; இடையூறுகளைக் கண்டு அஞ்சாதே. இடுக்கண் வருங்கால் நகுக; அப்போது உனக்குதவி, நீயே! மற்ற உறவெல்லாம் தோன்றி மறையும் நிழலே ; நொடியில் அவை உன்னை விட்டு அகன்று விடும். வாழ்வின் துன்பங்களைக் கண்டு உள்ளங் கலங்காதே ; முன் செல் ; துணிவொடு நில்!"]

## பகட்டில் மயங்கேல்

அந்தோ! பெரிய ஆரவாரங்களையும், கூட்டங்களையும், பெயரளவில் உயிர்வைத்துக் கொண்டு, செயலளவில் செத்துப்போன சங்கங்களையும் கண்டு நீ தலைவணங்கி விடாதே. என்ன அறிவீனம்! இதை நினைக்க நினைக்க, என் நெஞ்சில் வெட்கம் மண்டுகிறது. பகட்டிப் பசப்பி மதுரமாகப் பேசும் ஆற்றலுடையோன் உன்னை வெகு எளி தாய் ஏமாற்றி விடுவான்; அவன் சொல்லில் மயங்காதே. ஆனால் உன் கடமையில் வழுவாதே; துணிந்து நின்று, நேர்வழியில் செல்; எதுவரினும் கலங்காதே; கசந்தாலும் சரி—சத்தியத்தைப் பேசிவிடு; ஒளிக்காதே. தம்பீ! உன்னை ஒருவரும் அசைக்க முடியாது. பொறாமை, பொய், தற்பெருமை, இவையே உருவெடுத்த ஒருவனது பசப்புவார்த்தைகளுக்கு நீ இடந்தருவதா? தராதே; பேராசை பிடித்தலையும் நடிப்புப் போலியருக்கு இடங் கொடாதே. உன் அறிவின் மேதை, உன்னை ஓர் உயர்ந்த பணிக்கு அழைக்கும்போது, நீ ஏன் தயங்குகிறாய்? உடனே தாவிச்செல்; தகப்பன், தாய், மனைவி, சேய்—இவர்கள் யாரும் உனக்குப் பொருட்டன்று; அவர்கள் உதவிக்காக நீ காத்திருக்காதே. உன் உதவியே உனக்காகுக! உலகில் ஒருவன் எல்லாரையும் திருப்தி செய்துவிட முடியாது. ஏதோ சிலர், ரூபாய், அணா, பைசாவை மாற்றிவைத்துக் கொண்டு அவற்றைச் சில ஏழைகளுக்குக் கொடுத்து விட்டால், கேவலம் அது தருமமாகிவிடுமா? என் அந்தராத்மா இயல்பில் விரும்பாதவர்களுக்கு, நான் உதவி செய்வதெப்படி? உலகில் சில மகாத்மாக்கள் இருக்கின்றனர். அவர்களிடம் நான் நெருங்கிய ஆன்மவுறவு கொண்டுள்ளேன்; அவர்களுக்காக நான் என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயார்; அவசியமானால் சிறை செல்லக்கூடத் தயார். எண்ணத் தொலையாத எத்தனையோ சங்கங்கள்,

மூடரின் கல்விக் கழகங்கள், தருமம் புரியப் பணவசூலுக்குக் கிளம்பி விட்டன! சிற்சில வேளைகளில் தாக்ஷிண்யப் பட்டு, இச் சங்கங்களுக்கு நான் ஏதேனும் ஒரு வெள்ளி ரூபாயாவது கொடுப்பதுண்டு. இப்படிக் கொடுப்பது துர்விநியோகமான தென்றே எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய காணிக்கை வசூலுக்கு யாரும் வந்தால், கொடுக்க முடியாதென்று துணிந்து மறுத்துவிடுவேன்.

## தருமமும், கடமையும்

புண்ணியம் புரிவது மனிதனுக்கு இயற்கை யல்ல வென்றும், அது அபூர்வமாய் மாந்தர் உள்ளத்தில் எழக்கூடிய தன்மை என்றும், உலகில் ஒரு தப்பபிப்பிராயம் நிலவி வருகிறது; இது சரியல்ல: மனிதன் வேறும், அவனியற்றும் நற்கருமங்கள் வேறும்! என்ன மடமை! அபராதம் செலுத்துவது போல் ஏதாவது ஒரு காசை யாருக்கேனும் கொடுத்து விடுவதை பெரிய புண்ணிய காரியமென எண்ணுகின்றனர், மாந்தர்! உலகில் தாம் செய்யும் குற்றங்களுக்குப் பரிகாரமாக, இப் புண்ணியங்களைச் செய்கின்றனராம்! தருமங்களை, அபராதம் செலுத்துவதற்கொப்ப இயற்றுவது கேலிக்கிடமானது; அறிவற்றது. இப்படிப் பரிகாரங்கள் புரிவதை நான் ஒருபோதும் விரும்பேன்; அறவழி நின்று, அற வாழ்க்கை வாழ்வதே என் லட்சியம். இங்ஙனம் நான் வாழ்வது எனக்கேயொழிய, ஊரார் என்னைக் கண்டு மெச்சுவதற்கன்று. பகட்டும் வாழ்வில் பயனேது? அடக்க வொடுக்கமான, டாம்பீகமற்ற வாழ்வே சிறந்தது. ஆனால் அவ் வாழ்வு, இன்பமும், வளமும், எழிலும், தூய்மையும் நிறைந்திருக்க வேண்டும்; இல்லேல், பயனில்லை. ஊரார் ஒரு காரியத்தைச் செய்கிறார்கள் என்பதற்காக, நானும் அதைச் செய்ய வேண்டும் என்பதில்லை. நான் விரும்பாத

தொன்றைச் செய்ய, எவ்வாறு எனக்கு மனம் வரும்? என் மன சாட்சியை யாரும் விலைக்கு வாங்கிவிட முடியாது. என் மனதிற்குச் சரியென்று தோன்றும் கடமை எதையும் செய்ய நான் பின்வாங்கேன்; அதனால் ஊரார் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைக் குறித்துச் சிறிதும் பொருட்படுத்தேன். தினசரி வாழ்க்கையிலும், அறிவுலகிலும், இதை விதியாக வைத்துக் கொண்டு ஒருவன் நடப்பது கடினம். ஆனால் பெருமைக்கும் சிறுமைக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்: உலகில், மக்கள் அபிப்பிராயங்களுக் கிணங்க மாமூல்படி நடப்பது சுலபம்; தனிமையில் தன் எண்ணங்களுக் கிணங்க நடப்பதும் சுலபமே. ஆனால் உலகின் சந்தடியில் இருந்து கொண்டு, தனிமையின் இனிமையும், அமைதியும் மேற்கொண்டு, மனச் சுயேச்சையின்படி எவன் திடசித்தத்துடன் நடக்கிறானோ, அவனே மனிதனுள் மனிதன், மகாத்மன், புருஷோத்தமன்!

தோழா! இறந் தொழிந்த மாமூல் கொள்கைகளை நீ ஏன் கடைப் பிடிக்கக் கூடாது என்றால், காரணம் கூறுகிறேன், கேள்: அவை, உன் ஆற்றலைச் சிதறடிக்கும்; உன் அரிய நேரத்தை வீணாக்கும்; உன் குணத்தின் தன்மையை அழுக்குறுத்தும். செத்த கொள்கைகளைப் பின்பற்றும் திருமடங்களையும், உயிரற்ற சமய சங்கங்களையும் நீ ஒருபோதும் பின் பற்றாதே; பதவி மோகம் பிடித்தலையும் அர்த்தமற்ற அரசியல் கட்சிகளுக்கு நீ வாக்குரிமை அளிக்காதே. ஏன் தெரியுமா? இந்த வெளிவேஷங்களுக்குப் பின்னால் மறைந்திருக்கும் உன் மனிதத் தன்மையின் உண்மைச் சிறப்பை, நான் சுலபமாய்க்கண்டு கொள்ளவே. இவை யெல்லாம் உன் சக்தியை அபரிமிதமாய் உறிஞ்சி விடுகின்றன. ஆதலால் உன் கடமையைச் செய்; அதை மறவாதே. பிறகு, உன் புனிதத் தன்மையை நான்

எளிதில் அறிந்து கொள்வேன். உன் கடமையைச் செய்ய ஒருபோதும் தவருதே; அது உனக்கு வலிமைக்குமேல் வலிமை சேர்க்கும்!

## போலிக் கூட்டம்

பொருளற்ற ஒரு கூட்டத்தை ஒருவன் சார்ந்திருப்பது குருட்டுத்தனமாகும். நீ எந்தச் சமயத்தைச் சேர்ந்தவன் என்பதை மட்டும் என்னிடம் சொல்லிவிடு; உடனே நீ செய்யப்போகும் வாதம் இன்னதென்று கூறி விடுகிறேன். ஒரு பிரசங்கி, தன் சமூகத்தின் கடமையைப் பற்றிப் பேசுவதாக முதலில் விளம்பரப்படுத்தி விடுகிருன். ஆனுல், அவன் உள்ளத்திலிருந்து, அனுபவத்தால் எய்திய உண்மை, கடுகளவேனும் வெளிவராது என்பது மட்டும் எனக்கு நன்கு தெரியும். இத்தகைய மதப் பிரசங்கி, ஒரு கட்சிக்காகக் கூலிக்கு வாதாடும் 'வக்கீல்' போல்வான். அவன் நியாயாதிபதி போல் நடிப்பதெல்லாம் வீண் பகட்டு; அந்த நடிப்பை நம்பாதே. கண் மூடித்தனமாய் அறியாமையால் சிலர், இத்தகைய குருட்டுச் சமய சங்கங்களுடன் தம்மை வலிய இணைத்துக் கொண்டு விடுகின்றனர்; அதனுல் அவர்களுக்கு உண்மை, சிறிதும் புலப்படுவதில்லை. நமக்குப் பிடிக்காத கூட்டத்தாருடன் சேர்ந்து, அவர்கள் சொல்லும் அசட்டு வார்த்தைகளைக் கேட்கும் போது, நமக்குத் தானே சிரிப்பு வந்துவிடுகிறது;

நீ சமுதாய வழக்கத்திற்கு விரோதமாக நடந்தால், உலகினர் வெறுப்பே உனக்கெய்தும். ஆதலால், கடுத்த முகத்தின் போக்கை மனிதனைவன் அவசியம் அறிந்துணர வேண்டும். நீ தெருவில் செல்லும் போது யாரேனும் உன்னைக்கண்டு கேலி செய்தால், நீ அவர்களைக் கண்டு எப்பொழுதாவது ஒரு சமயம் அவமதித்திருக்கக் கூடுமென்று நினைத்து, மௌனமாக வீடு செல். மக்கள்

உன் மீது செலுத்தும் விருப்பு வெறுப்பு எனும் குறிகளுக்கு அடிப்படையான காரணங்கள், ஏதுமில்லை; அவர்கள் விருப்பும் வெறுப்பும் காலச் சுழலில் ஆடும் காற்றாடிகள் என்றனர்; அவை, தோன்றி மறையும் காட்சிகளாகும். பொது ஜனங்களின் வெறுப்பு, அறிவிற் சிறந்த ஒரு பேரவையினர் அதிருப்தியினும் பயங்கரமானது. ஆனால், உலகானுபவமும், தன்னுறுதியும் உள்ள மனிதன், அறிஞர் குழுவின் எத்தகைய முனிவையும் எளிதில் தாங்கிவிட முடியும். ஏன் இங்ஙனம் கூறுகிறேன் எனில், அறிஞர் கோபம் ஒரு வரம்பிற் குட்பட்டது; முன் பின் வருவதைச் சிந்தித்து எழுவது. தமது குறை என்னவென்பது அறிஞர்களுக்கு நன்கு தெரியுமாதலால், நிதானித்தே பிறர்மீது முனிவு கொள்வர். ஆனால், பெண்ணியல்புள்ள அவர்களுடைய கோபத்துடன், ஜனங்களுடைய முனிவும் சேர்ந்து விட்டால், ஏழைகளும் முட்டாள்களும் வீறிட்டெழுந்தால், உறங்கிக்கிடக்கும் ஜனசக்தி விழித்தெழுந்து கர்ஜிக்கத் துவங்கி விட்டால், அவற்றை நீ சிறிதும் பொருட்படுத்தாது எதிர்த்து நிற்க உனக்குப் போதிய **தன்னம்பிக்கையும்**, திடச்சித்தமும், பேரறிவும், அறநெறித் திறனும் அபரிமிதமாய் வேண்டும்.

## ஆராய்ச்சி

நமது தன்னம்பிக்கையைக் குலைக்க, மற்றொரு பயம் குறுக்கே வந்து விடுகிறது: அதாவது, நேற்று நடந்ததினின்றும், சொல்லியதினின்றும் நாம் எங்கே மாறுபட்டு விடப் போகிறோமோ, அல்லது பிழை செய்துவிடப் போகிறோமோ என்ற வீண் பயம். நம்மைச் சுற்றியுள்ளோர் எதிர்பார்ப்பதற்கு மாறாக நடக்க, நமக்குத் தைரியம் வருவதில்லை. நீ எப்போதாவது ஒரு சமயம், ஒரு கருத்தை வெளிப்படையாகச் சொல்லியிருப்பாய்; அது, பிற்காலம்

சரியல்லவென்று உனக்கே புலப்படும். அச்சமயம் அதை மாற்றிச் சொல்ல நேரிடும்போது, நீ அஞ்சாதே, தயங்காதே, உண்மையைத் துணிந்து சொல்: நீ செல்லுமிடமெல்லாம் இந்தப் பாழும் 'நினைவு' என்னும் சவத்தையும் உன்னுடன் இழுத்துக் கொண்டு செல்லாதே. நீ முன்பு சொன்ன கருத்தையே, உண்மையறிவால் பின்பு மாற்றிக் கூற நேர்ந்தால், அதனால் என்ன தவறு? உன் பழைய மாமூல் எண்ணங்களையே சிந்தித்துக் கொண்டிருப்பது, அறிவுடைமையாகாது. நீ எப்போதும் நினைவிலேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டிய சங்கதிகளைக் கூட, ஆயிரக் கணக்கான ஆராய்ச்சிக் கண்களுடன் உற்று நோக்கி, அவை தற்காலத்திற்குப் பொருந்துமா, பொருந்தாதா வென்று நன்கு ஆராய்ந்தறிந்து, நீ ஒரு முடிவிற்கு வர வேண்டும். தன்னம்பிக்கையுடன் ஆராய்ந்தறிந்தே உண்மையைக் கண்டறிந்து, மனிதன் புதிய புனிதவாழ்வை மேற்கொள்ள வேண்டும். 'கடவுளுக்கு உடலில்லை' என்று நீ ஆதார பூர்வமாய் ஆராய்ந்தறிந்து முடிவு கட்டியிருப்பதாய் வைத்துக் கொள்வோம்: ஆனால் பின்பொருசமயம் உன்னுள் ஆன்மபக்தி மூளும்போது, இறைவனை உருவமுள்ளவனாகவே நீ கருத வேண்டியதிருக்கும். அச்சமயம், கடவுளை உருவிலேயே மனப்பூர்வமாய்த் துதி; நீ படித்தறிந்த சாஸ்திர மூட்டைகளை யெல்லாம் புகுத்தாமல், தூரக் கட்டிவைத்து விட்டு, ஆண்டவன் திருவடிகளைச் சரணெய்து!

மூடத்தனமாய் ஒன்றை அப்படியே பின்பற்றுவது அறியாமை; அது, சிறுமதியாளரைப் பிடித்தலைக்கும் பேய்த்தனம். விசால புத்தியற்ற ராஜ தந்திரிகளும், பண்டிதர்களும், சமயவாதிகளுமே ஆராய்ச்சியின்மையை வணங்குவார்கள். அபிப்பிராய ஒற்றுமையைப் பற்றி, சிந்திக்கக் கூடாது; அது வீண் வேலை. ஏனெனில், இன்று

உனக்குச் சரியென்று மனத்தில் தோன்றுகிற விஷயங்களை, உடனே ஆணித்தரமாகச் சொல்லிவிடு; நாளை உனக்குச் சரியென்று தோன்றுவதை அதேமாதிரி, நாளையே அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிடு; அஞ்சாதே! அப்படியானால் ஜனங்கள், உன்னைப்பற்றிக் குறைவாக நினைப்பார்களோ என்று பயப்படாதே. ஆழ்ந்தறிந்த கருத்துக்களைத் துணிவாக அவ்வப்போது வெளியிடுகின்ற உன்னைக் குறைவாக நினைப்பது, இழிவென்று நினைக்கிறாயா? இல்லை, இல்லை! கிரேக்கத் துறவி பித்தாகோரன், கிரேக்க மஹாத்மா ஸொக்ராத்தன், இயேசுநாதர், லூதர், போலந்து தேசத் துறவி கோப்பர்நிக்கன், இத்தாலிய வானசாஸ்திரி கலீலியோ, ஆங்கிலக் கணித சாஸ்திரி நியூட்டன்—இவர்களென்ன, இன்னும் இந்த மனித உடலை எடுத்த எத்தனையோ ஞான—தருமாத்மாக்களென்ன, அனைவருமே அவரவர்கள் காலத்தில் இழிவாகத்தான் கருதப்பட்டனர். அதனால் என்ன? தப்பெண்ணம் வளர வளர, பெருமையே உயரும்!

## இயற்கைக் குணம்

உலகில் எந்த மனிதனும் தன் இயற்கைச் சுபாவத்தை மீற முடியாது என்பது என் திட நம்பிக்கை. உலகில் பெரிய மலைத் தொடர்கள், ஆந்திஸ், ஹிமாலயம் எனினும், பூகோள அமைப்பின் தோற்றத்தில் இவை எம்மட்டு? கேவலம், அற்பமானவை! இதைப்போலவே மனிதனது மனப்போக்கின் தன்மைகளும், அவனது இயல்பான குணங்களுக்கு உள்ளடங்கியவை. மனிதன் தன்மையை எப்படி வேண்டுமானாலும் சோதித்துப் பார்; இந்த ஒரே முடிவுக்குத்தான் நீ வருவாய்: மனித சுபாவமானது, அலெக்ஜாந்திரியக் கவியென அழைக்கப்படும் சித்திரக்கவி போன்றது: அதைக் குறுக்கே, நடுவே, அல்லது

தலை கீழாக, அன்றி வேறு எப்படிப் படித்தாலும் சரி, பொருள் ஒன்றாகத்தானிருக்கும். ஆதலால், ஆண்டவன் உனக்கு அளித்திருக்கிற இந்தப் புண்பட்ட அடவி வாழ்க்கையில், உன் மனதில் உதிக்கும் நல்லெண்ணங்களையெல்லாம் குறித்து வைத்துக் கொள். அவ்வாறு குறித்து வைக்கப்பட்ட சிந்தனைகள் உன் சங்கற்பமில்லாமலே, உன் முயற்சியின்றியே, அழகுடன் நன்கு அமைந்துவிடும் என்பதில் ஐயமில்லை! உன் நூலைப் படிக்கும்போது, அதிலொரு புனித மணம் கமழவேண்டும். நம் தன்மைக்கு மாறாக, நமக்குக் கீர்த்தி வருகிறதேயில்லை. நம் சுபாவம், இயல்பாகவே நமக்கு நற்போதனை புகட்டுகிறது; நாமாகவே வேண்டுமென்று கற்பனை செய்து சொல்லும் வார்த்தைகள், இரண்டாந் தரத்தனவாகவே காண்கின்றன. தம்மிடமுள்ள பாவ புண்ணியங்களை, தமது புறச் செயல்களால் பிறருக்குப் புகட்டுவதாய்ச் சிலர் நினைக்கின்றனர். ஆனால், தருமம் அதருமம் இரண்டும் தத்தமது நறுமணத்தை விடாது பரப்பிக்கொண்டே யிருக்கின்றன. இவ்வுண்மை, அநேகருக்குத் தெரிவதில்லை.

## அற வினைகள்

செய்யுங் கருமங்கள் பற்பல விதமாயிருப்பினும், அவை அந்தந்த வினைகளுக்கு ஏற்ப, சுத்த மனத்துடன் செய்யப்பட்டிருப்பின், அவைகளுக்குள் ஒற்றுமையும் பொருத்தமும் அவசியம் அமைந்திருக்கும். ஏனெனில், அக்கருமங்கள் ஒரே உள்ளத்திலிருந்து உருவாகி வெளி வருகிறபடியால் அவற்றின் தோற்றத்தில் வேற்றுமையிருப்பினும், உண்மையில் வேறுபாடு காண்பதரிது. அறிவின் உயரத்தினின்று உற்று நோக்கினால், இத்தகைய வேறுபாடுகள் நமக்குப் புலப்படா. கப்பல், வளைந்து வளைந்து கடல் நீரில் ஓடுகிறது; தூரத்திலிருந்து அதை

நோக்கினுல், அவ்வளவுகள் நேர்பாதையாகி விடுகின்றன. உனது சுயேச்சையான தூய செயல், தானே கம்பீரமான குரலில் உறக்கப் பேசும்; அது, உன்னிடம் காணும் இதர நற்கருமங்களையும் இயல்பாய் விளக்கிக் காட்டும். ஆனுல், மாமூல் தன்மையில் எழுந்த செயல்களோ, ஒன்றையும் விளக்குவதில்லை. ஆதலால் தோழா! நீ இப்பொழுது ஆற்றிவரும் கருமங்களில் கவனத்தைச் செலுத்தி, மனவொருமையுடன் செய்; நீ முன்பே தன்னறிவுடனும் திட நம்பிக்கையுடனும் செய்து முடித்திருக்கும் செயல், அப்பொழுது உனக்குத் துணை நிற்கும்; வருங்காலத்தில் பெருமையளிக்கும். எது எப்படியிருந்தாலும் இருக்கட்டும்; நீ இன்றே, இப்பொழுதே தருமம் செய்; பகட்டிற்காகவும், உன்னைப் பிறர் மெச்சவும் என்றும் தருமம் செய்யாதே; அப்படியானுல் உன் லக்ஷியமே, தருமமாகி விடும். உன் மனவுறுதியின் சக்தி நாள்தோறும் வளர்ந்தோங்கும் தன்மையது. நீ முற்காலத்தில் செய்துவைத்த தருமங்களெல்லாம், இன்றுவந்து உன் தலைகாக்கும் என்பதை நம்பு! போர்வீரர்களின் வீரச் செயல்களும், அருளறிஞரின் கர்ம வீரமும் தேசுபெற்று நமது கவனத்தை ஈர்ப்பதின் காரணமென்ன? அவர்கள் முன்பே அடைந்த வெற்றிகளும், பிரதாபங்களுமே யல்லவா? அப்பெருமைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து, ஏக காலத்தில் அவர்கள் மீது பேரொளியைக் கொட்டுகின்றன. தேவ கணங்களே அவர்கள் பக்கலில் வந்து, துணைநின்று செயலாற்றுவது போல் நமக்குத் தோன்றும்! அவ்வளவு பேரொளி, அவர்களைச் சூழ்ந்து நிற்கும்! அந்தச் சக்தியின் வல்லமையே, காந்தியே, அந்த அமெரிக்கச் சுதந்திரச் சொல்வீரன், **சாதம்** (Chatham) வாக்கினின்று ஒரு காலத்தில் பேரிடி முழங்கியது; அவன் சொல்லிலும், நடையிலும் காம்பீரியக் கொலுவிருந்தது; அந்தச் சக்தியே,

அமெரிக்காவின் வீரமனைத்தையும் ஜனதிபதி ஆதம்ஸின் (Adams) நாட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தியது. மானம் மரியாதை இரண்டிற்கும், நாம் இவ்வளவு கௌரவம் செலுத்துவதின் காரணம் யாதெனில், அவ்வை எக்காலத்தும் அழியாத பொருள்கள் என்பது பற்றியே; மானமழிந்தபின் வாழாமை மிக இனிது. மானமே எக்காலத்தும் பழமையான நல்லறம். அது, இன்று நேற்று வந்ததன்று; மிகப் புராதனமானது; அதனுல்தான் அதை நாம் இன்றும் வணங்கி வருகிரும். அது, நம்மை ஏமாற்றும் பொருளன்று; களங்கமற்ற, பழமையான பொருள்.

## மாமூல்

மாமூல், முன்னைய வழக்கம், பழமைப் பொருத்தம் என்னும் பொருளற்ற கதைகளெல்லாம், இக்காலத்திலேயே மறைந்துவிடும் என்று கருதுகிறேன். இவைகளை மாந்தர் எள்ளி நகையாடுக! என் வீட்டிற்கு விருந்துண்ண ஒரு பெரிய மனிதன் வருகிருனென்று வைத்துக்கொள்வோம்: அவனிடம் வலியச்சென்று முகமன் பேசி, அவனைச் சந்தோஷப்படுத்த எனக்கு விருப்பமில்லை; வேண்டுமானல் அவனே என்னைக் களிப்புறுத்தட்டுமே. அவ்வாருயின், மனிதத்தன்மையின் மாண்பிற்கு நான் ஓர் எடுத்துக்காட்டாக நிற்பேன்; அன்புடனிருப்பேன்; தடையில்லை. ஆனல் போலி மனத்துடன் யாரையும் வீண் துதி செய்யேன். பகட்டிலும், மினுக்கிலும் மதிமயங்கிவிடும் ஆழமற்ற மனிதர்களை, நான் பலமாகக் கண்டிப்பேன். ஒருவன் எந்த இழிவான தொழிலைச் செய்தாலும் சரி, அதை உண்மையுடனும், சிரத்தையுடனும் செய்கிறவனே சிறந்தவன்; அவனே கலைஞன்; அறிவுடையோன். உண்மையான மனிதன், கால தேச வர்தமானங்களில் கட்டுப்

பட்டவன் அல்லன்; அவன் அனைத்திற்கும் நடுநாயக மானவன்; கருப்பொருளா யிருப்பவன். இவ்வுண்மையை மாமூல்காரர், வணிகர், சேவகர் அனைவரிடமும் நாம் சொல்லி, ஊக்குவோமாக. இத்தகைய புனிதாத்மா வதியும் இடத்தில், இயற்கை அன்னை திருநடம் புரிவாள்!

அந்த உண்மை வாதி, உன்னையும், உலகினரையும், உலகின் எல்லாச் செயல்களையும் ஆராய்ந்து, சீர்தூக்கிப் பார்ப்பான். நாம் மக்களிடையே யாரையாவது பார்க்கும்போது, நமக்கு வேறொரு மனிதனின் நினைவு வருவது இயல்பு. ஆனால் உண்மையான தரும வீரத்தைப் பார்க்க நேரும்போது வேறொன்றும் நமது ஞாபகத்திற்கு வராது. ஏன்? அத் தரும வீரம், உலகனைத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதற்கியல்பான இடத்தில் ஊன்றிக் கொள்ளுகிறது. மனிதன் கால தேசச் சூழ் நிலைகளின் போக்கைக் கண்டு பராமுகமா யிருக்கவேண்டும். ஏனெனில் மெய் வழி நிற்கும் ஒவ்வொரு மனிதனும், தானே ஒரு தருமம், ஒரு தேசம், ஒரு யுகம்—இவற்றைப் படைக்கும் ஆற்றலுள்ள ஆதர்ச புருஷனாகி விடுகிறான்! அவன் மேற்கொண்ட கொள்கைகள் அனைத்தும் நிறைவேற, அவனுக்கு எல்லையற்ற இடம், காலம், மக்களின் அன்பு ஏனைய வேண்டியதிருக்கின்றன. அத்தகைய உண்மையாளனின் அடிச் சுவடுகளை மக்கள் பரம்பரையாகப் பின் பற்றி வருவார்கள். ஸீஸர் (Caesar) என்பான் தோன்றினான்; அவனுக்கு எத்தனையோ யுகங்களுக்குப் பிறகுகூட, ரோம ராஜ்யம் விளங்கியது. கிறிஸ்து தோன்றினார்; அவர் அவதாரத்திற்கு எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகுகூட, கோடானுகோடி மக்கள் இன்றும் அக் கடவுள் மைந்தனைச் சரண்புகுந்து, 'தருமத்திற்கும் உய்விற்கும் அவனே எல்லை' என்று எண்ணியெண்ணி இன்புறுகின்றனர்! ஒரு ஜாதத்தின் ஸ்தா

பனம் என்பது, ஒரு சமுதாயத்தின் சாயல், அல்லது தோற்றமேயாகும். துறவு நெறி, ஐரோப்பியத் துறவி அந்தோணியின் சாயல்; 'பிராட்டஸ்டெண்டு' என்னும் சீர்திருத்த ஏசுமதம், கத்தோலிக் கிறிஸ்து மதத்தில் சில மாறுபாடுகளை உண்டாக்கிய தீரன், லூதரின் சாயல்; கிறிஸ்துசமயத்தில் அஹிம்ஸையைப் பிரதான தருமமாகக் கொண்டாடும் குவேக்கரின் கொள்கைகள், அச்சமயத்தை ஸ்தாபித்த பாக்ஸின் சாயல்; "நீக்கிரோவர்களை அடிமைப் படுத்தக் கூடாது" என்ற அடிமை விமோசனம், ஆங்கில மகான் கிளார்க்ஸனின் சாயல்; ரோம் தேசத்தின் புகழ்பெற்ற யுத்தவீரனை ஸிப்பியோவை "ரோமாபுரியின் வீரச் சிகரம்" என்றான், ஆங்கில மகாகவி மில்டன். தேசச் சரித்திரங்கள் அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது, திண்மையும் உண்மையுமுள்ள வீரதீரர்களின் மாண்புறு வரலாறுகளே, அவற்றில் நிரம்பிக்கிடப்பதை நாம் காண்கிறோம்.

## மாந்தர் மனோநிலை

ஆதலால், மனிதன் தன் ஆற்றலையும், வீரத் திண்மையையும் நன்கு தெரிந்து கொண்டு, கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிலவவேண்டும். இந்த அகண்ட உலகத்தில் மனிதன் பிச்சையேற்கும் ஆதரவற்ற ஏழைச் சிறுவன் போலவும், திக்கற்றவன் போலவும், அடங்கி ஒடுங்கிப் பதுங்கிக் கொண்டு அங்குமிங்கும் அலைந்து செல்ல வேண்டாம். ஓர் ஆச்சரியமான அழகிய கோட்டையையோ, அல்லது கடவுளின் திருவடிச் சிலையில் வடித்தெடுத்த சிற்பியையோ சாதாரணமாக நாம் காணில், 'நமக்கு அத்தகைய திறமை இல்லையே' யென்று ஏங்கி, நம் சக்தியில் நம்பிக்கை யிழந்து, நம்மையே நாம் ஒரு வீண் பதரென எண்ணிக் கொண்டு விடுகிறோமல்லவா? சிற்சில

சமயம், மாடமாளிகைகளையும் அரண்மனைகளையும், சிற்பச் செல்வங்களையும், விலை யுயர்ந்த அழகிய நூல்களையும் கண்டு நாம் மலைத்து விடுகிறோம்! அவற்றிற்கும், நமக்கும் சிறிதும் சம்மந்தமில்லை யென்றே நினைத்துக் கொண்டு விடுகிறோம். உண்மையில் அவையெல்லாம், 'இவன் எப்பொழுது நம்மைக் கவனிப்பான்' என்று காத்துக் கொண்டிருக்கின்றன! அவை, மனிதனது மனோ சக்திகள் வெளிப்பட்டு, அவன் தம்மை அவனுடைமை யாக்கிக்கொள்ள வேண்டுமே என்று ஏங்கி நின்று மாதவம் புரிந்துகொண்டிருக்கின்றன. அதோ, அந்த ஓவியம், என் அபிப்பிராயத்தை ஏற்கவே, காத்து நிற்கிறது! ஆனால் என்னை ஏவ, அதற்கு வலிவில்லை; தன் அழகைத் தானே நிதானிக்கும் ஆற்றல், அந்த ஓவியத்திற்கில்லை. நானே அதன் சிறப்பின்மாண்பையும் தாரதம்மியத்தையும் நிர்ணயிக்கத் தக்கவன். உலகத்தில் மனிதனது மனோநிலை, குடிகாரனைப் போன்று நிலைதடுமாறியது. சிற்சில சமயங்களில் மனிதன் தன் தடுமாற்றத்திலிருந்து விழித்தெழுந்து, தன்னறிவும், மெஞ்ஞானமும் அடையும் போதுதான், அவனது தன்னம்பிக்கையின் வலிமைச் சிறப்படைகிறது.

## ஆட்சி முறை

யாசிப்பதுபோலும், முகஸ்துதி செய்வது போலுமே, நாம் நூல்களைப் படிக்கிறோம். சரித்திரக் கதைகளைப் படிக்கும்போது, நம் மனோதருமம் நம்மையே ஏமாற்றிவிடுகிறது! காரணம்? பொன்னும், பொருளும், பூமியும், அதிகாரமும் படைத்தோரைப்பற்றிய கதைகள், சின்னஞ்சிறு குடிலில் கிடந்து வருந்தி யுழைத்து உண்ணும் ஜான், எட்வேர்டு போன்ற சாதாரண ஏழைகளின் கதைகளைவிட உயர்ந்தவை போல நமக்குத் தோன்றுகிறது. ஆனால், உலக வாழ்வின் இன்ப துன்பம்

அரசனுக்கும், ஆண்டிக்கும் ஒன்றே; அதில் வித்தியாச மில்லை. எல்லோருக்கும் பொழுது ஒன்ருகத்தான் போகி றது. கல்வி கேள்விகளில் சிறந்து, நீதிமானென விளங்கிய இங்கிலாந்தரசன் ஆல்ப்ரெட் (Alfred) என்பவனையும், தன் தாய் நாட்டின் சுதர்மத்தைக் காக்க 22-ஆண்டுகள் பகைவனுடன் போர்புரிந் திறந்த அல்பானிய வீரன் ஸ்காந்தர்பெக் (Scanderbeg) என்பவனையும், ஐரோப்பியப் போர் வீரனை கஸ்தேவஸன் (Gustavus) என்பவனையும் இன்று நாம் எதற்காக இவ்வளவு பெருமையுடன் கொண் டாடுகிருேம்? அவர்கள் அனைவரும் தருமவான்களாய் இருந்தனர் என்பதற்காகவா? அப்படியே இருப்பினும், அதனுலென்ன? உலகில் உண்டான தருமம் அவ்வளவை யும் அவர்கள் செய்தொழித்து விட்டனரா, என்ன? அன்றையவுலகம் எவ்வாறு அவர்களது இசைபெற்ற நற் செயல்களுக்குக் காத்துக் கொண்டிருந்ததோ, அதைப் போன்றே இன்றைய உலகமும், நீ செய்ய வேண்டிய தரு மங்களுக்கும் நற்கருமங்களுக்கும் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதைத் திண்ணமாக நம்பு. சாதாரண மக்கள் தன்னம்பிக்கையுடனும், தமது சொந்த அபிப்பிராயத்துடனும் நடக்க ஆரம்பித்து விட்டால், புகழ் என்பது வேந்தர்களின் செயல்களை நீங்கி, சான்ருேரின் செயல்களை நாடிவந் தடைந்துவிடும். மனிதக் கண்களை மயக்கி விட்டு, வேந்தர்கள், உலகிற்கு இந்த உண்மையைப் போதித்து வருகின்றனர்: மனிதனுக்கு மனிதன் எத்துணை மரியாதை செலுத்த வேண்டியது என்பதையே அரசர், தமது அரசியல் வடிவின் மூலம் உல கிற்குக் காட்டுகின்றனர். குடிகள், வேந்தனுக்கு அள வுக்கு மிஞ்சி, தகாத முறையில், தமது அரச பக்தியைக் காட்டி இடங் கொடுத்து விடுகின்றனர். அதனுல்தான் அரசனும், செல்வனும், கிராமத் தலைவனும், தத்தம்

மனப்போக்கின்படி, தான்தோன்றித் தனமாய் நடக்க ஆரம்பித்துவிடுகின்றனர்; வேந்தன் தன்னிச்சைப்படி மக்களுக்குக் கௌரவங்கள் வழங்குகிறான்; அடுத்த நிமிடமே அவற்றை மாற்றிவிடுகிறான். ஜனங்கள் அரசனுக்குச் செலுத்தும் மரியாதைக்குப் பதில், விலையாகப் பொருள் கொடுக்காமல், வெறும் கௌரவப் பட்டங்களை மட்டும் அரசன் அளித்து விடுகிறான்; மேலும், சட்டத்தின் திருவுரு, தானே என்றும் பறையடித்துக் கொள்ளுகிறான். மக்கள், இவ் வரசர்களுக்கு இவ்வளவு இடங் கொடுத்திருப்பதின் உண்மைப் பொருளென்ன? உலகில் ஒருவருக்குள்ள உரிமை மற்றவருக்கும் உண்டு என்பதையே, இவ்வரசபக்தி என்ற உணர்ச்சி நிரூபிக்க வில்லையா?

## பரம்பொருள்

உலகில் வேறொன்றையும் பார்த்து அபிநயிக்காமல், சுயமாகவே எண்ணித் துணிந்து உண்மையுடன் இயற்றப் படும் செயல்கள் அனைத்திற்கும், ஒரு தனி அழகும், கவர்ச்சியு மிருக்கிறது. இதற்குக் காரணம் யாதென அறிய வேண்டுமாயின், தன்னம்பிக்கையின் உண்மைத் தத்துவத்தை நாம் முதலில் அறிய வேண்டும். உலகில் எல்லாரும் போற்றத்தக்க தீர புருஷன் யார்? ஆத்மார்த்தத்தின் அடிப்படையான தருமம் யாது? விஞ்ஞான ஆராய்ச்சியை மயக்கி, சிறு செயல்களிலும் அழகை வீசி, எங்கும் ஒரே ஒளியைப் பரப்பிக் கொண்டுலவும் நட்சத்திரம் இருக்கின்றதல்லவா, அதன் இயல் பென்ன? அதன் சக்தி யாது? இவற்றை நன்கு ஆராய்ச்சி செய்து பார்க்கும் போது அவ்வாராய்ச்சி, நம்மைப் புலனறிவிற்கு மேலுள்ள இயலறிவு, தருமத்தின் சிகரம், ஞானத்தின் வரம்பு— இவற்றிற்கெல்லாம் ஆதாரமான, ஆதிப் பரம்பொருளான ஆண்டவனிடம் கொண்டு வந்து இணைத்து விடுகிறது!

இந்த இயல்பான அறிவையே, நாம் "ஆத்மஞான போதம்" என்கிறோம்; இதற்குப் புறம்பாய் நூலறிவால் பெறுவதெல்லாவற்றையும் 'கல்வி, கேள்வி' என்கிறோம். நமது அறிவாராய்ச்சியில் எய்தும் முடிவான பொருள், **பரம்பொருளே!** அஃது அனைத்திற்கும் ஆதாரமானது; பொதுவானது; அதுவே அனைத்திலும் தோன்றியும் தோன்றாமலுமிருக்கும் கருப்பொருள்; மகா சக்தியாய் எங்கும் காட்சியளிப்பது. ஆழ்ந்தடங்கிய மனவமைதியில் தான், நம்மையறியாமல் அந்தப் பரமாத்ம சக்தியின் திருவருள் நம்முள் பொலிகிறது! இந்த உண்மையொளி, பஞ்சபூதங்களுக்கு வேறுபட்டதன்று; மாறுபட்டதன்று; பஞ்சபூதாதிகள் எங்கு உற்பத்தியோ, அங்கிருந்தே, அதுவும் ஜனிக்கிறது. எந்த சக்தியினுல் உலகப் பொருள்கள் ஆதரமாய் நிற்கின்றனவோ, அதே சக்திதான் நமக்குள்ளும் புகுந்து, நம்மையும் ஆட்டிவிக்கின்றது! அவனின்றி ஓர் அணுவும் அசையாது. உலகில் அவன் படைப்பினங்களை நாம் காணும்போது, அவற்றையும் நம்மையும் தோற்றுவித்தவன் அப் பரம்பொருள் என்பதை, நாம் மறந்து விடுகிறோம். இந்த மகா சக்திதான், ஞானம், கருமம் இரண்டிற்கும் வற்றாத ஊற்று; ஆதி மூலம்; அருளறிவாகிய மூச்சை உட்கொள்ளும் சுவாசப்பை. இத்தகைய பரந்த அருட்சக்தியை மறுப்பது, நாஸ்திகத் தன்மையல்லவா? நாம் இம் மகாசக்தியின் மடியில் தவழும் கைக் குழந்தைகள்; அவளது ஞானப் பாலருந்தும் சிசுக்கள்; அவளது சத்தியமாகிய நித்திய ஞானத் தேனை ஏற்கும் பாத்திரங்கள்; அவள் இட்ட கட்டளையை இயற்றும் அங்க உறுப்புகள். எத்தொழிலையும் நாமாகச் செய்வதில்லை; அவளே கர்மங்களுக்குத் தலைவி, இறைவி; அவள் செயலே நம்மை ஆட்டிவிக்கிறது. ஓர் உண்மையை நாம் கண்டறியும்போது, அதைக் காண்பது நாமல்ல;

காண்பதும் காட்டுவதும் அம் மகாசக்தியே! நம் உள்ளத்தில் ஒளியைத் தூண்டுவது, அவளது அருட்சக்தி; அதற்கு மனத்துள் வழிவிடுவது, நாம்; அதுவும் அவளிச்சையே! இந்த அருட்சக்திக்குப் பிறப்பிடம் எங்கென்று ஆராய்ந்தால், நமது ஆராய்ச்சி மேலே ஓடாமல் அப்படியே நின்றுவிடுகிறது. ஏன்? இந்த ஆத்மரகசியம், மூளை அறிவாராய்ச்சிகளுக்கு அப்பாலானது; அதற்கப்பாலுக்கும் அப்பாலானது! ஒவ்வொரு மனிதனுக்கும், தன் மனத்தில் சங்கற்பத்தால் எழும் எண்ணங்களுக்கும், சுயமாகவே அருட்சக்தியின் திருவருளால் உதிக்கும் சிந்தனைகளுக்கும் உள்ள பேதம் நன்கு தெரியவரும். இவ்வாறு இயல்பாய் உதிக்கும் சிந்தனைகளை முற்றிலும் நம்பி விடுவது மனிதனது இயல்பு; இச் சிந்தனைகள், பகலும் இரவும் போல் நித்திய சத்தியமானவை; யாராலும் மறுக்க முடியாத ஆற்றலுடையவை. இவ் வுண்மையை திடச்சித்தன் உணர்ந்துகொள்ளுகிறான். ஒருவன் மனதில் உதிக்கும் நற்கருமங்களெல்லாம், அந்த மகாசக்தியின் திருவருள் நோக்கால் அவனுக்கு விதிக்கப் பெற்ற செயல்களேயொழிய, அவன் தன் விருப்பப்படி செய்து கொண்டதன்று. எனக்கோர் உண்மை புதிதாய்ப் புலப்படுமாயின், அஃது என் முன்னோர்களுக்குத் தோன்றாமலிருந்தாலும், என் சந்ததிகளுக்கும் எனக்கும் ஏன் தோன்றக் கூடாது? அவர்களுக்கும், உலகனைத்திற்கும் நாளடைவில் அவ் வுண்மை தோன்றலாம். சூரியன் இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, நம் சித்தத்தில் உதயமான ஞானத்தின் தோற்றமுமாகும்.

## ஆத்ம ஞானி

அன்பா, ஆத்மாவிற்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பு, மகாப் புனிதமானது; இவற்றிற்கிடையே வேறுபாடு கற்பிப்பது பிழையாகும். மனிதனது ஒவ்வொரு

செயலிலும், அந்த அருட்சக்தி நின்று பேசவேண்டும்; அவன் வாழ்வு தேவஜீவனமாகுக. கடவுளருள் எல்லா ஞானத்தையும் தரவல்லது; கடவுளின் அருள்நாதம் உலகனைத்தையும் நிரப்ப வேண்டும்; அருட்சோதி, காலம் இயற்கை ஆருயிர்கள் அனைத்தையும் புதுமையாகச் சிருஷ்டித்து, நம்முள் ஒரு புதிய சத்திய யுகத்தைத் தோற்றி விட வேண்டும். மாசு மறுவற்ற தூய உள்ளத்தில் ஆன்ம ஞானம் பிறக்கும் போது, முன் வினை நினைவுகள் மறந்தொழிந்துபோய் விடுகின்றன; பழையன பறந்தோடி விடுகின்றன. சரியை, கிரியை, சாதனம், குரு, உபதேசம், ஆலயம் எல்லாம் உயிரற்றுப்போய் விடுகின்றன. ஆத்மஞானியானவன், காலாதீதன்; அவன், இறந்த காலம், எதிர்காலம் இரண்டையும் தனக்கடிமையாக்கிக் கொண்டு, நிகழ் காலத்தில் சிறப்புறுகின்றான். அவனை எது சார்ந்தாலும், அஃது அவன் மயமாகி விடுகிறது! எல்லாவற்றிற்கும் தோன்றாத் துணையாய், நிமித்த காரணமாய் நிற்கும் பரம்பொருள், அவனது அந்தராத்மாவில் சொலிப்பதால், அவனது கண் பார்வையில், பொய்ப் பொருள் வீழும்; மெய்ப் பொருள் வாழும்; உண்மையே நிலைத்து நிற்கும். உலகில் பெரிய அற்புதத்தில் சிறிய அற்புதங்கள் மறைந்து விடுவதைக் காண்கிறோம். சிறு விதையிலிருந்து பெரிய மரம் உண்டாவதைப் பார்க்கிறோம். எனினும், அவ்விதை அதன் விருக்ஷத்தினும் பெரியதாகுமா? தந்தை, தன் முழுத்திறனையும் மகனுக்குப் புகட்டி விடினும், அத் தந்தையினும் மகன் சிறந்தவனாகிவிடுவானா? அப்படியாயின், பழமையை ஒருவன் ஏன் இவ்வளவு சிறப்புடன் போற்ற வேண்டும்? மனிதனின் ஆன்மச் செழிப்பையும் மனவலிவையும் குறைத்துவிடவே பழைய சக்திகள், சூழ்ச்சி புரிகின்றன. காலமும், தேசமும், கேவலம் கண்மயக்கால் எய்தும் வர்ணபேதங்களா

கும். ஆத்மா, அருட்சோதி வடிவானது ; அழிவற்றது ; அது, நிற்குமிடந்தொறும் நீக்கமற ஒளிபரவும் ; நிற்கா விடத்தில், இருள் தான் கவியும்.

என் சரித்திரத்தை நான் ஒருவனுக்குச் சொல்வேனுயின், அஃது, எனது தூய வாழ்வைப் பற்றியும் நல் வளர்ச்சியைக் குறித்தும் பேசுகிற இனிய நீதி மஞ்சரியா யில்லாவிடில். கேட்போருக்கு அது அருவருப்பை உண்டு செய்வதுடன், அதிகப்பிரசங்கமு மாகிவிடும்.

## சுகமும், வலிமையும்

மனிதன் மருளுகிருன்; பஞ்சப் பாட்டுப் பாடுகிருன். கெஞ்சாமல் கூழுமல் நேரே நிற்கிருனில்லை. "இது என் ஆழிய சிந்தனை ; நான் இப்படி நினைக்கிறேன் ; இப்படித்தான் செய்வேன், வாழ்வேன் " என்று துணிந்து சொல்லாமல், ஒரு மகானையோ, அல்லது ஒரு தவப் பெரியாரையோ, " அவர் இப்படி நினைத்தார் ; அப்படிச் சொல்லியிருக் கிருர் " என்று உதாரணங் காட்டுகிருன். நண்பா ! இதோ, இந்தச் சாளரத்தின் வெளியே காணும் ரோஜா மலர்களைப் பார் ! அவை, தம்மைக் காட்டிலும் உயர்ந்த மலர்களைப் பற்றியோ, அன்றி அவை பூப்பதற்கு முன்னர் மலர்ந்த பழைய ரோஜாக்களைக் குறித்தோ பேசுவதில்லை; சிந்திப்பதில்லை. தமது கடமையைச் செய்யவே, அவை பூத்துள்ளன ; அவை இன்று பரம்பொருளின் திருமுன் நின்று, அவன் திருவடிவாய்ப் பொலிகின்றன! ரோஜாவின் ஆயுட் காலம் மிக அற்பமானதெனினும், அது உறையும் சிறித்து நேரத்திற்குள் பரிபூரண வடிவில் பொலிகிறது ! அதற்குவமை அதுவே! முதலில் ஒரு குருத்து வெடிக்குமுன், அதன் உயிர்ப்பனைத்தும் அதனுள் துடிக்கிறது! விரிந்த மலர், எப்பொழுதும் களிப்புடனிருக்கிறது: அஃது இயற்கையையும் களிப்புறுத்துகிறது. ஆனல் மனிதனே, நாளைக்

கவலையைப் பற்றியோ, அல்லது சென்றதைக் குறித்தோ வருந்திக்கொண்டே யிருக்கிறான். வருங்காலத்தில் எய்தும் களிப்பை ஏற்க, முன் வருகிறானில்லை. ஒன்று, கண்ணைத் திருப்பிக் கொண்டு, சென்றதைக் குறித்து வருந்துகிறான். அல்லது, தன்முன் விரிந்து பரந்து கிடக்கும் செல்வத்தைப் பொருட்படுத்தத் தெரியாமல், வருங்காலத்தில் ஏதோ தனக்குக் கிடைக்கப் போகிறது என்னும் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறான். காலத்தை வென்று விளங்கி, நிகழ்காலத்தில் இயற்கையோடியைந்து வாழக் கற்றுக் கொள்ளும்வரை, மனிதனுக்குச் சுகமும் வராது; வலிமையும் எய்தாது.

## அருள் வாக்கு

இது நன்கு தெரிந்த விஷயம். நண்பா! யூதக்க[illegible]ன தாவீதனோ(David), யூததீர்க்கதரிசியான [illegible]வோ (Jeremiah), கிறிஸ்துமதாசாரியப் பிர[illegible] பௌலே வோ (Paul)— இவர்களது வாக்கிலிரு[illegible]வுள் பேசா விட்டால், வேறு யாருடைய வாக்[illegible]யும் லக்ஷியம் செய்ய மாட்டோமென்று எத்தனை மேதாவிகள் வீணே உட்கார்ந்திருக்கின்றனர், பார்! ஏதோ சில அனுபவ வாக்குகளுக்கு, நாம் எப்பொழுது பார்த்தாலும் இத்துணை வீண் மதிப்பு வைத்துக்கொண்டிருப்பது தவறு. குழந்தைகள் பேச்சுக் கற்பதை உதாரணமாகக் காண்க: அவை, தமக்குப் பாட்டிகளும், உபாத்தியாயர்களும் சொல்லித்தரும் வார்த்தைகளை மனனம் செய்கின்றன: சிறிது வயது வந்தபின், ஆத்மவான்கள் பேசிய வார்த்தைகளை அப்படியே சிரமப்பட்டு, மனதில் உருவேற்றி நினைவில் வைத்துக் கொண்டு திரும்பப் பேசிவிடுகின்றன. இறுதியில் குழந்தைகள் யாரிடமிருந்து சொற்களைக் கற்றுக்கொள்ளுகிறார்களோ, அவர்களது மனப்பக்குவம்

தமக்கு வந்ததும், அப் பதங்களின் பொருளை நன்குணர்ந்து கொண்டு, வார்த்தைகளை உதறித் தள்ளி விடுகிறார்கள். ஏனெனில், சமயோஜிதமான வார்த்தைகள், அக் குழந்தைகளின் நாவிற்குத் தாமே எளிதில் வருகின்றன. அது போல் நாம் உண்மை ஒன்றையே கடைப்பிடித்து வாழ்ந்தால், நம் நோக்கும் உண்மையாகவே யிருக்கும். பலமில்லாதவனுக்கு அசதி வருவது எவ்வளவு எளிதோ, அவ்வளவு எளிது, பலமுள்ளோனுக்கு வலிமை சேர்வதும். ஆதலால், நமதுள்ளத்தில் புத்துணர்வு பிறக்கும்போது, நாம் நமது மனத்தில் மண்டிக் கிடக்கும் பழைய சரக்குகளையெல்லாம் குப்பை கூளங்களைப் பெருக்கித் தள்ளுவதுபோல், கூட்டித் தள்ளிவிட வேண்டும். ஒருவன் கடவுள் அருளை மட்டும் பெற்றுவிடுவானாயின், அவன் வாக்கு, பாடி நகர்ந்து செல்லும் நீரோடையின் இனிய கீதம் போன்றும், தென்றலடிக்கும்போது, நெற்பயிரின் மீதிருந்து தவழ்ந்துவரும் இன்னிசை போலவும், காதுக்கு அவ்வளவு இன்பமயமா யிருக்கும்! அதுவே அனுபூதி வாக்காகும்.

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கையின் இரகசியத்தைக் கேள்: நண்பா, பரம்பொருளின் சக்தி உன்னை அணுகும்போது, அஃது ஏற்கனவே உனக்குத் தெரிந்திருக்கிற மார்க்கத்தில் அணுகுவதில்லை. நீ ஆத்ம வாழ்க்கையில் ஈடுபட்டதும், அனைவரும் சென்ற பழைய வழிகளில் நீ ஈடுபடமாட்டாய்; ஆங்கே, வேறொருவன் அடிச்சுவடுகளைப் பின்பற்ற மாட்டாய்; மாந்தர் முகத்தை நோக்கமாட்டாய்; ஒருவனுடைய பெயரையும் கேட்க மாட்டாய்; சுயவழியில் ஆத்மானந்தத்தில் ஊன்றி விடுவாய். தனி மார்க்கத்தில் செல்லும்போது எய்தும் அந்த நலமும், அதன் ஞானமும்,

அது சேர்க்கும் இடமும், முற்றிலும் அலாதியானது; புதுமையானது. அஃது, அனுபவம், யுக்தி, உதாரணங்களைக் கடந்தது. எனினும், நாம் மனிதரிடமே ஞான சாதனங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்; ஆனால், அங்ஙனம் கற்றுக்கொள்ளும் சாதனங்கள், முடிவானதன்று. இதுகாறும் உலகில் ஜீவித்து வந்திருக்கிற எல்லா ஆத்ம வீரர்களும், நாம் ஏற்படுத்திக்கொள்ளும் சாதன மார்க்கத்திற்குத் தக்க வழிகாட்டிகள்தான். இருப்பினும், அவர்கள் கண்டறிந்த சமய உண்மைகளில், நமக்குத் தேவையானவற்றை ஏற்றுக்கொண்டு, இதர பாகங்களைத் தூரத் தள்ளிவிடவேண்டும். ஆத்மசாதனம் செய்வதில், அச்சம், இச்சை இவ்விரண்டையும் ஒதுக்கிவிடவேண்டும். நீ ஆத்ம சித்தியில் இச்சை வைக்காதே; பலனை இச்சிப்பது சிறப்பன்று. ஆத்மப் பணியே உனக்குப் பிரதானம். சமாதி நிலையில் விருப்பு வெறுப்பிற்கு இடமேயில்லை. இந்த இருவிகாரங்களையெல்லாம் தாண்டி நிற்கும் ஆத்மா, எங்கும், எப்போதும் பேதமற்றிருக்கிறது; அறுதியான படைப்புக் கிரமத்தையும் காண்கிறது. சத்தியம் அறம் இரண்டும், வேறொன்றையும் தழுவாமல் சுயம்புவாய் நிலைத்து நிற்பதை உணருகிறது; உலகில் நடப்பதெல்லாம் நன்மைக்கு வழிகாட்டியே என்று தெளிந்து, பரமசாந்தத்தை அடைகிறது. ஆன்மா, அகண்டாகாரமானது: இப்பொழுது நான் நினைக்கும் நினைவும், அனுபவிக்கும் அனுபவங்களும், இன்று என்னிடம் எவ்விதம் இருந்து வருகின்றனவோ, அதுபோலவே ஆன்மா, என் முற்பிறப்பிலும் என்னுள் அந்தரங்கமாகவே இருந்திருக்கிறது. அது, என் பிறப்பிறப்பு எதிலும் என்னிடமிருந்து அகலுவதில்லை.

## ஆத்ம சக்தியின் உறைவிடம்

இப்பொழுது வாழும் வாழ்வுதான் நமக்குக் குறிப்பே யொழிய, நமது முற்பிறப்பைப் பற்றி முக்கியமல்ல. முயற்சியை எவனொருவன் எப்பொழுது நழுவவிடுகிறானோ, அப்பொழுதே அவன் சக்தி, அவனிடமிருந்து பறந்துபோய் விடுகிறது. சக்திக்கு இருப்பிடம் யாது? பழைய நிலையை ஒழித்து, புதிய செயல் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் துள்ளி வரும் மனோ திடமும், பழவினையின் முடிவிற்கும், புது வினையின் துவக்கத்திற்கும் இடையே காணும் ஆழியமடுவைத் தாண்டி, தன்னுடைய நோக்கத்தின்படி சுயவழியில் செல்லும் வீறுமே, ஆத்ம சத்தியின் உறைவிடமாகும். 'ஒருவனுக்கு நல்ல அதிர்ஷ்டத்தால் அவனது காரியம் வென்றது' என்னும் வார்த்தையைக் கேட்கும்போது, உலக சக்தி சீறிச்சினக்கின்றாள், ஏனெனில், அச்செயல் தன்னம்பிக்கையின் பெருமையை அழித்துவிடுகிறது; ஊக்கத்தைச் சிதைத்து விடுகிறது; புகழைத் தேய்த்து விடுகிறது. புனிதாத்மனுக்கும், சண்டாளனுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வைப் போக்கிவிடுகிறது; ஏசுநாதரையும், அவரைப் பகைவரிடம் காட்டிக் கொடுத்த பாதகன் யூதாசையும், ஒரே தன்மையில் வைத்து மூலையில் தள்ளி விடுகிறது. 'அதிர்ஷ்டகாலம்' என்னும் வார்த்தை மெய்யாயின், ஆன்மவுறவு, ஆன்மவீறு என்பவையெல்லாம் வெறும் பேச்சாக வன்றோ மாறிவிடும்? ஆத்மசக்தி ஓரிடத்தில் ஊன்றி நிற்கும்போது, அதன் வீறு வேறொன்றையும் சார்ந்திராது. எது தன்னைத்தானே உறுதியாக நம்புகிறதோ, நீ அச்சக்தியைக் குறித்துப் பேசு. அது தான் உனக்குள்ளும் உலகிலும் செயல் புரிகிறது; அதுவே என்றுமுள்ள மெய்ப்பொருள். எவனொருவன் தனது ஆத்மாவிற்குப் பயந்து நடக்கிறானோ, அவனை யாரும்

அசைக்கவே முடியாது. அவனே, மிக்க வீறுடையோன். அத்தகையோனிடம் என் உள்ளம் தானே சென்று, கவிந்து ஒன்றி விடுகிறது; நான் அவனைச் சுற்றிச் சுழலுகிறேன்.

உலகில் அறத்தின் மாண்பைக் குறித்துப் பேசும் போது, அதை நாம் ஓர் அலங்காரப் பொருளாக மதித்துப் பேசுகிறோம். அறம் 'நானே உயர்வு' என்று சொல்லுகிறதென்பதை, நாம் அறியவில்லை. தருமத்தையும், அதன் அரிய கோட்பாடுகளையும் தழுவும் புனிதாத்மாக்கள், அவ்விதம் தருமத்தின் வழி நிற்காத வகுப்பினர், வேந்தர், செல்வர், கவிஞர் அனைவரையும் வென்று விளங்கும்படியான சக்தி பெறுகின்றனர். இஃது, இயற்கையின் விதி. ஆனால், இது இன்னும் நமக்குப் புலனாகவில்லை.

## தருமத்தின் சிறப்பியல்பு

முடிவில் எல்லாம் பேரானந்தப் பெருவெளியில் இயங்கும் அந்தத் தனிப் பரம்பொருளினிடத்திலேயே அமைந்து அடங்குகின்றன. தனக்குத் தானேயாகி எங்கும் நிறைந்து நிற்பது, ஆதிமூலப் பொருள்; அதன் சிறப்பு அதுவே! உலகில் ஒவ்வொருபொருளும், தத்தமது தருமத்தை உள்ளடக்கி வைத்துக் கொள்ளுகிற வரையில்தான், நிலைத்து நிற்கும். வாணிகம், வேளாண்மை, விலங்கு வேட்டை, போர், சொல்வன்மை, செல்வாக்கு இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான தனிச்சிறப்பு, இருக்கவே செய்கிறது. அவைகளில் தோன்றும் சிறப்பியல்பு, பரிசுத்தமின்றிக் கலப்புற்றிருந்த போதிலும், அவற்றுள் காணும் அறத்தின் தன்மைகளைப் பொறுத்த வரையில், எனக்கு அவைகளிடம் பெருமதிப்பு உண்டாகி விடுகிறது. இதே விதிதான் இயற்கை முழுவதிலும், தற்காப்பிற்கும், விருத்திக்கும் காரணமாயிருக்கிறது. இயற்கை – வேந்தனின்

அரசாங்கத்தில் நமக்கு ஓர் உரிமை கிடைக்க வேண்டுமானால், முதலில் அதை நிர்வகிப்பதற்கு வேண்டிய தக்க நிர்வாக சக்தியை நாம் கட்டாயம் எய்த வேண்டும்; அஃதில்லேல் பயனில்லை. எந்தப் பொருள், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வலிவற்றிருக்கிறதோ, அதை இயற்கையன்னை ஒருபோதும் காப்பாற்றுவதே இல்லை. வான வெளியில் தோன்றும் கிரகங்களின் உற்பத்தி முதல் அவற்றின் வளர்ச்சி சமநிலை ஈறாகவும், தாவரங்கள் முதல் விலங்கினங்கள் வரையும் உள்ள எல்லாப் பொருள்களிலும் துடிக்கும் ஆத்மவுயிர்ப்பு, நமக்கு நன்கு புலனாக வில்லையா?

ஆகவே, உலகில் எல்லாப் பொருள்களும் உள்முகப் படுகின்றன. நாம் ஆத்மாவைத் தேடி, எங்கும் ஓடியாடித் திரியவேண்டாம். அது, தானே நம்மிடம் இயங்கும் போது, நாம் ஏன் அதைத் தேடியலைய வேண்டும்? இவ்வுண்மையை, நாம் அமைதியாய் இருந்து, சிறிது சிந்தித்துப் பார்ப்போமாக. நமது உள்ளமன்றில், எல்லாம்வல்ல இறைவன் திருநடம் புரிகிறான்; இயலறிவு செறிந்து விளங்குகிறான். அவனது அருட்சக்தியின் முன், உலகோர் செல்வமும், இயற்கையின் வனப்பும் மங்கிவிடும். நாம் மட்டும், நமது ஆத்ம தருமத்தின் அடிப்படையை மறவாது, என்றும் கடவுளைத் துதித்துக்' கொண்டே வாழ்ந்து வரவேண்டும்!

## வாழ்வின் தத்துவம்

நாம் இன்றைய உலகில் ஒரு சந்தைக் கூட்டம் போல் வாழ்ந்து வருகிறோம்: கூடுவதும் கலைவதுமாகவே, நாம் வீணே காலங்கழித்து வருகிறோமேயன்றி, மனித வாழ்வின் புனிதமான அடிப்படைத் தத்துவத்தைச் சிறிதும் உணர்கிறோமில்லை. மனிதனுக்கு மனிதன் பரஸ்பரம் காட்

டிக் கொள்ளவேண்டிய அன்பும் மரியாதையும் நம்மிடம் அற்றன. மனிதன், தன் உள்ளத்தில் பொங்கிப் பொசியும் அன்பு வெள்ளத்தைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ளத் தெரியாது, அதில் சிறிதளவு நீரை அருந்தித் தன் தாகத்தைத் தணித்துக் கொள்ள முடியாமல், ஒரு குவளை தண்ணீருக்குப் பிறரிடம் கையேந்தி நிற்கிறான்! இது எவ்வளவு அறியாமை! நாம் துணிந்து, நமது எண்ணத்தில் எழும் தனிவழியில் செல்ல வேண்டும். கோயிலில் நடக்கும் அர்ச்சனை முழக்கத்தைவிட, அது துவங்குமுன் அங்கே நிலவும் பேரமைதியே, எனக்கு இனிமை தருகின்றது. மனிதர், அமைதி கலந்த அறவழியில் வாழ்வார்களேயானால், அவர்களிடம் எத்துணை உள்ளமைதி, அடக்கம், சீலம், மகிமை, வாழ்வினிமை, பளிச்சிடும் என்னைப் பாருங்கள்! நாம் எப்போதும் இவ்விதமே தனிமையில் வாழ்ந்து, இன்புறலாம்! தாய் தந்தை, மனைவி மக்கள், நண்பர் ஏனையோர், என் வீட்டில் என்னுடன் எப்பொழுதுமே வசிப்பவர்கள் என்பதற்காகவும், என் இரத்தக் கலப்புள்ளவர்கள் என்பதற்காகவும், நான் அவர்களிடமுள்ள குற்றங்குறைகளை எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும்? மனிதவர்க்கத்தின் நரம்பனைத்திலும் என் குருதியோடுகிறது; என்னுள்ளும் மனித சமுதாயத்தின் ரத்தம் கலந்தோடுகிறது. அவ்வாறிருக்கும் போது, இரத்தக்கலப்பை மட்டும் சொந்தமென நினைத்து, அவர்களது சிடுசிடுப்புக்கும், அறிவீனத்திற்கும் நான் ஒரு போதும் இடங் கொடேன். நான் வற்புறுத்தும் தனிமை, உடல் தனிமை யன்று: அஃது, ஆத்மீக உள்ளத் தனிமையே. நீ தனிமையில் ஊன்றியிருக்கும் போது, உலகமே திரண்டு வந்து உன்னை அழைப்பது போலிருக்கும்: நண்பன் குழந்தை, பிச்சைக்காரன், நோயாளி எல்லோரும் ஒருங்கு சேர்ந்து வந்து, உன் கதவைத் தட்டி, "எம்மிடம் வர

வேண்டும்; எம்மிடம் சிறிது பேச வேண்டும்" என வற்புறுத்துவர். ஆனால் நீ உன் தனிமையைக் கலைத்துக் கொண்டு, அந்தக் கூக்குரல் அழைப்பில் கலந்துவிடாதே; உறுதியுடனிரு. உறுதியற்ற சஞ்சலபுத்தி, உன் அமைதியைக் கலைத்துக் கெடுக்கும். உன் சம்மதமின்றி, ஒருவனும் உன்னை அணுகவே மாட்டான். "எதன்மீது நாம் தூய உள்ளன்பைச் செலுத்துகிறோமோ, முடிவில் அது, நமக்குச் சித்திக்கிறது; ஆனால் அவ்வாறின்றி, நாம் வலியச்சென்று ஒன்றைப் பேராசையால் இச்சித்து, நம் மனத்திலுள்ள பரிசுத்த அன்பை மாய்த்துக் கொள்ளுகிறோம்" என்று கூறுகிறார், ஒரு பெரிய மகான்.

## சத்தியப் பொருள்

இத்தகைய திடநம்பிக்கை, ஆன்மப்பணி என்னும் தூய படிகளின்மீது ஏறிச் செல்ல நமக்கு மனவலிமை இடந்தரவில்லையாயின், நம் உட்பகைகளையாவது எதிர்த்துப் போராட வேண்டும். அஞ்சாமல் நாம், ஸாக்ஸோனிய, ஜர்மானியப் புராணங்களில் பேசப்படும் வீர தேவதைகளை நம் உள்ளத்தில் எழுப்பி, இழியல்புகளுடன் போரிட வேண்டும். இந்த நேர்மையற்ற காலத்தில் உண்மையை ஒளியாமல் பேசுவதுதான், உய்யும் வழி. ஆதலால், தம்பீ! நீ இந்தப் போலி நட்பு, பாசாங்கு மரியாதை, வஞ்சச் சிரிப்பு முதலியவைகளுக்கு இடங் கொடாமல், அவற்றை வெட்டி வீழ்த்தி விடு. தாமும் ஏமாந்து, பிறரையும் ஏமாற்றிக் கொண்டு திரியும் உன் நண்பர், உறவினர் முதலியோரின் விருப்பப்படி நீ நடக்காதே. அவர்களை அழைத்து, பின் வருமாறு சொல்லிவிடு: "ஏ, என் தந்தையே, மனைவியே, தோழனே, உடன் பிறந்தோனே! கேண்மின்: நான் இதுவரை உங்களோடு ஒத்திருந்து வாழ்ந்து வந்தேன். இன்று முதல் நான் நித்தியானந்த

சத்தியப் பொருளின் அடியனாகி விட்டேன். அவன் திருவடிகளைச் சரணெய்தினேன். ஆண்டவனைத் துலக்கும் அறவழியைத் தவிர, நான் இனி வேறு எந்த தருமத்திற்கும் ஆளாகேன்! இதை அறியுங்கள். சாத்திர கோத்திர நியமங்களில் நான் ஒருபோதும் கட்டுப்படேன்; சுத்த சத்யானுபவமே, நான் விரும்பும் மெய்ப் பொருள். என் தாய் தந்தையரையும், குடும்பத்தையும் நாணயமாகக் காப்பாற்ற முயல்வேன்; பிறர் மனையஞ்சி, என் மனைவியை அன்புடன் நேசிப்பேன். இதில் சிறிதும் தடையில்லை. நான் எப்பணியையும், பிறரைப் பார்த்து அபிநயிக்காது புது முறையில் சுயமாகப் புரிவேன்; உங்கள் மாமூல் பழக்க வழக்கங்களை வேண்டேன். என் புதிய முயற்சியில் நான் இனித் தளரேன். என் தன்மையைக் கண்டு, நீங்கள் என்பால் அன்பு செலுத்தினால், நாம் ஒருவருக்கொருவர் முன்னிலும் இன்பமாகக் கலந்துறையலாம். அவ்வாறு செய்ய உங்களுக்கியலா விட்டாலும், என்னையாவது நான் உங்களன்பிற்கு உரியவனாக்கிக்கொள்ள முயல்வேன். என் உள்ளத்தில் அவ்வப்போது எழும் விருப்பு வெறுப்புக்களை ஒளியேன்; என் அந்தராத்மாவில் எழும் தூய எண்ணங்களை நழுவவிடாது, பற்றிக் கொள்வேன். என் உள்ளம் எதை உண்மையென்று ஆராய்ந்து செய்யும்படி கட்டளையிடுகிறதோ, அதைப் பயமின்றி வெளியிடச் செய்வேன். உங்களிடம் தகுதியிருப்பின், விரும்பி, மரியாதை செலுத்துவேன்; இல்லேல், வெளிக்கு மாத்திரம் மரியாதையும் நட்பும் காட்டி, உள்ளே எனக்கும் உங்களுக்குமிடையில், உண்மையில் தீங்கிழைத்தவனாவேன். நாம் பொய்யிலேயே உழன்ற போதிலும், மெய்யை நாடி அதில் நிலைப்பதில், உங்களுக்கும் எனக்கும் மற்றுமுள்ள எல்லா மக்களுக்கும் பலனிருக்கிறதல்லவா? இன்று நான் சொல்லுவதெல்லாம் ஒருவாறு கடுமையாகத் தோன்ற

லாம். எனினும், விரைவில் நீங்களே உண்மையை அறிந்து கொள்ள நேரிடும். ஆதலால், நாம் சத்தியத்தைத் துணையாகக் கொண்டு வாழ்வோமானால், முடிவில் அது, நமக்கு நன்மையே பயக்கும்.''

## அறிவு விளக்கம்

சகோதரா! உன் நண்பனின் மனது நோகுமே யென்று கருதி, நீ நியாயத்தை மறைக்காதே. என் தோழன் மனது நோகாமலிருப்பதற்காக நான் என் திடநம்பிக்கையையும், சக்தியையும் என் மனச்சாட்சிக்கு விரோதமாக விற்று விடுவதா? தவிர, ஒரு போதும் அது முடியாது. தெய்வத்தின்பால் மனம் திரும்பும் போது, எல்லாரும் அறிவு விளக்கம் பெறும் நேரம் ஒன்று வந்துவிடுகிறதல்லவா? அப்போது மாந்தர், நான் கூறுவதைச் சரியென்று ஏற்றுக் கொண்டு, நான் செய்கிறபடியே காரியங்களை இயற்றவும் முற்படுவர். உலகில் ஒவ்வொருவருக்கும், பொதுஜன சம்மதம், தன்னுடைய மனச்சாட்சி என்கின்ற இரு நீதி சபையுண்டு: இவ்விரு நீதிமன்றங்களில், நாம் ஏதாவது ஒன்றில் நியாயம் சொல்லியே தீரவேண்டும். என் உள்ளமாகிய சக்கரம், நான் பிழை புரியும் போது என்னைச் சலுகையின்றிச் சிதைத்துவிடும். கடமைகள் என்று உலகோர் பேசியும், செய்தும் வருகிற பல செயல்களை, என் உள்ளம் ஒப்புவதில்லை; சாமானிய மக்களுக்கு இருக்கக் கூடிய யோசனைகளை யெல்லாம் விடுத்து, தனக்குத் தானே தலைவனாய் இருந்து நடத்திக் கொள்ளத் துணிகின்ற மனிதனிடம், ஒரு தெய்வத் தன்மை இருக்கத்தான் வேண்டும். இதில் சிறிதும் ஐயமில்லை. அத்தகைய தன்னம்பிக்கையாளனின் உள்ளம், கம்பீரமாய் ஓங்கி நிலவுக! அவனது மனம் உரம் பெற்று நிலைத்திடுக! அவனது அறிவில் தெளிவோங்குக! ஏனெனில், அவன் தானே தனக்கு

ஓர் உண்மை அறநூலாகவும், மக்களின் சமூகமாகவும், அரசனின் ஆணையாகவும் இருக்க வேண்டியவனாகிறான். அவனது உள்ளத் துணிவு, மாவலி படைத்தது.

## தற்கால ஜனசமூக நிலை

ஜன சமூகம் என்று சிறப்பித்துக் கூறப்படும் கூட்டத்தின் தற்கால நிலையை ஊன்றி நோக்கின், மனிதனுக்குத் தன்னிடம் எவ்வளவு தூரம் மனோதிடமும், ஊக்கமும், அறிவுத் தெளிவும், தன்னம்பிக்கையும் தேவை என்பதின் அவசியம் நன்கு விளங்கும். தற்கால மனிதனைப் பார்க்கும் போது, அவனது உள்ளமும் உணர்வும் உளுத்துப் போனதாய் காண்கின்றது. நாம், தன்னம்பிக்கை இழந்த பேடிகளாகி விட்டோம்; உண்மையைக் கடைப்பிடிக்கப் பயந்து சாகிறோம்; சாவை நினைத்து அஞ்சியோடுகிறோம். பூரணமான, திடச்சித்தமுள்ள உண்மையாளர், நம் காலத்தில் பிறப்பது அரிதாகி விட்டது. மனித வாழ்க்கையையும், மக்கட் சமுதாயத்தின் போக்கையும் அடியோடு மாற்றியமைத்துப் புத்துயிரளிக்க, உண்மையான ஆத்ம வீரரும், வீரப் பெண்டிரும் தேவை. நம்மில் பலர், நமது சொந்த விவகாரங்களைக் கவனிக்கக்கூடத் திறனில்லாதிருக்கிறோம்; ஆனால், நம் ஆசையோ, நமது ஆற்றலுக்கு மீறினதாகக் காணப்படுகிறது! இரவு பகல் ஓயாமல், பிறரைச் சார்ந்தும், பிறருதவியை எதிர்பார்த்துமே இரவல் வாழ்க்கை வாழ்கின்றோம். நமது குடும்ப ஏற்பாட்டிலும் சிறப்பில்லை. நமது கல்வி, தொழில், திருமணம், கொள்கை எதையும் நமக்காக நாம் நிர்ணயம் செய்து கொள்ளுவதே யில்லை; அவற்றைக் கூடப் பிறரே, நமக்காகத் தீர்மானித்து முடிவு செய்ய வேண்டியதிருக்கிறது. நாம் கேவலம் சோதா வீரர்களாகி விட்டோம்.

விதியோடு கடும்போர் புரிந்து, அதை வென்று, நமது தன்னம்பிக்கையையும், வலிமையையும் விருத்தி செய்து கொள்ள நாம் அஞ்சுகிறோம்.

முதல் எடுப்பிலேயே தாம் துவங்கிய காரியம் முடியா விட்டால், நம் இளைஞர்கள் மனத் தளர்வுறுகின்றனர். ஒரு புது வியாபாரிக்கு எடுத்ததும் நஷ்டம் வந்துவிட்டால் ‘அவன்முறிந்து போய் விட்டான்’ என்று உடனே மனிதர் பட்டங்கட்டி விடுகின்றனர். பெரிய கெட்டிக்காரன் அல்லது அறிஞன் ஒருவனுக்கு, நமது கல்லூரிகளில் அவனது படிப்பு முடிந்ததும், உடனே போஸ்டன், நியூ யார்க் போன்ற நகரங்களிலோ, அல்லது அதன் சுற்று வட்டாரங்களிலோ ஒரு வேலை கிடைத்துவிட வேண்டும்; இல்லாவிட்டால், அவன் மனத்தளர்ச்சி யுறுவதும், வாழ் நாள் முழுதும் கல்லூரிப் படிப்பைப் பற்றிக் குறை சொல்லிக் கொள்வதும் நியாயந்தான் என்று, அவனது நண்பர் சிலர் தவறாக நினைத்து விடுகின்றனர். ஆனால் வண்டியோட்டிப் பயிர் செய்து, தட்டுத் தூக்கி, பள்ளிக் கூடம் வைத்து, சொற் பொழிவுகள் நிகழ்த்தி, பத்திரி கைகள் நடத்தி, சட்டசபை அங்கத்தினனாகி—இப்படி யெல்லாம் பல துறைகளில் முன்னேறி நிலைமையைச் சமாளித்துக் கொண்டு வரும் ஒரு ஹாம்ஷயர் (Hampshire) அல்லது வெர்மாண்ட் (Vermont) சிறுவன் இருக்கிறானே, அவன், மேற்கூறிய நூறு நகரப் பதுமைகளுக்கு ஈடாவான்! ஏனெனில், விரைந்தோடும் நாட்களுடன் அவனும் இணைந்து பின்னடையாது ஓடுகிறான். ஏதேனும் ஒரு தொழிலைத் தான் கற்றுக் கொள்ளவில்லையே என்ற நாணம் அவனுக்குக் கிடையாது: காரணம், அவன் ஆரம்பத்திலேயே தொழிலில் இறங்கி விட்டான் அல்லவா?

## ஸ்தோயிக் சித்தாந்தம்

அத்தகைய முயற்சியாளனுக்கு, உலகில் பிழைக்கும் வழிகளும், அதற்கியைந்த தொழில்களும் எத்தனையோ உள்ளன. ஒரு * ஸ்தோயிக் (Stoic) சித்தாந்தி, மாந்தர் உளத்தே அடைபட்டுக் கிடக்கும் அரிய சக்தியைத் திறந்து விட்டுப் பின்வருமாறு அவர்களிடம் கூறுகிறான்.

"உலகீர்! நீங்கள் சேர்தாக்கள் அல்லீர்; வீரர்கள்; பிறர் உதவியின்றி உலகில் நீங்கள் தனியே நிலவ முடியும். எனவே, சுயேச்சையுடன்—தனியே நிற்கப் பழகுங்கள். தன்னம்பிக்கையை வளர்க்க வளர்க்க, உங்களுக்கு நாள்தோறும் அது புதிய சக்திகளை உண்டாக்கும். மனிதனுனவன் உடல் கொண்டுலவும் வேதமாவான். உலகில் நிலையான இன்பத்தையும், ஆருயிர் நலத்தையும், காசினித் துயர்கெடக் கருணையை வளர்க்கவுமே, அவன் பிறந்திருக்கிறான். சட்டதிட்டங்கள், புராதன ஆகமங்கள், விக்கிரகங்கள், பிம்பங்கள், பண்டையப் பழக்க வழக்கங்கள்—அனைத்தையும் குப்பையில் தள்ளிவிட்டு, அவ்னது மனத்தின் அறக் கோட்பாடு கட்டளையிடுவது போல் எந்தத் தருணத்தில் மனிதன் நடக்க ஆரம்பிக்கிறானோ, அந்த நிமிஷம் முதல், நாம் அவனைக் கண்டு வணங்கி வாழ்த்தப் பின் வாங்கோம். அத்தகைய தன்னம்பிக்கையாளனே, மனிதருள் மனிதன்; மனித வர்க்கத்திற்கே தேசும், திருவும் அளிக்கவல்ல பரமகுரு. அத்தகையோனின் திருநாமத்தையே, இதிகாசங்கள் அன்போடு சிறப்பிக்கும்."

---

* காம குரோதாதிகளையும், இன்பதுன்பங்களையும் வென்று, மனதைச் சலியாததாக்கி, அறம ஒன்றையே குறியாகக் கொண்டு மாந்தர் வாழவேண்டும் என்கிற கிரேக்கர்களின் சித்தாந்தத்திற்கு, "ஸ்தோயிக் மதம்" எனப் பெயர். இன்றைக்குச் சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன்னால், அதேனு நகரில் ஜேனோ என்னும் மஹாத்மாவால் இக் கொள்கைகள் பரப்பப் பெற்றன.

ஸ்தோயிக் சித்தாந்தம் பகருவதுபோல், இப்போதிருந்து வருவதைக் காட்டிலும் அதிகமான ஆன்மப் பற்று மாந்தர் உள்ளத்தில் இடங்கொண்டால், அவர்களது அறவழியிலும், கல்வி கேள்வி, சிந்தை செயல், வாழும்வகை, செல்வச் சேர்க்கை, ஆன்ம விசாரம் அனைத்திலுமே, என்றுமில்லாத ஒரு தனிமாறுதலும், புதுமையும் புத்துணர்வும் ஏற்பட்டு விடுமென்பது, தெளிவாய் விளங்குகிறதல்லவா ?

## உண்மை பக்தி

கடவுளைப் பக்தி செய்யும்போது, அந்தோ எத்தனை வரங்களை மாந்தர் கேட்கின்றனர் ! பக்தியைப் புகட்ட வரும் புரோகிதன் இருக்கிறுனே, அவன் தொழிலில் வீரமும் ஆண்மையுமாவது எள்ளளவேனும் உண்டா? அவையுமில்லை ! பக்தியானது உயிரற்றுப்போய், ஏதோ ஒரு புண்ணிய பலத்தைத் தேடியலைகிறது ; பாவம் புண்ணியம், அக்ஷதை குரு பிரசாதம் என்பனவற்றில் மதிமயங்கி மடிகிறது. மனிதன், தனக்காகத் தனி நலனையோ, அல்லது சொந்தப் புகழையோ தேடுவது அறமாகாது. உலகிற்கு நாம் செய்யவேண்டிய பணிகளைச் சுயநலமின்றி, மிகச்சிறந்த ஆத்ம நிலையிலிருந்து கொண்டு புரிவதுதான், சிறந்த பக்தியாகும். உலகின் ஆடலைக் காட்சிப் பொருளென மதித்து, அதன் இன்ப துன்ப இருவிகாரத்தில் மனம் பற்றுருது. தனிமையில் இனிமைபூணும் ஆத்மானந்த நிலையே, உண்மைப் பக்தியின் உயிர் நாடியாகும். மனிதன், தன் சொந்த உலகாயத இன்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தினம் கோயிலுக்குப் போய் வருவதும், ஆண்டவனைத் துதிப்பதாகப் பாசாங்கு செய்வதும், பக்தியாகா ; திருட்டுத்தனமாகும். ஏனெனில், மனிதனின் மனவுல

கிலும், வெளியுலகிலும் நிலவ வேண்டிய தொடர்பையும் ஒற்றுமையையும் நீக்கிவிட்டு, 'இகம், பரம்' என இரு பிரிவுகளை உண்டாக்கி விடுகிறது, இந்தப் போலி பக்தி! கடவுளிடம் மனம் ஒன்றி, பேதபுத்தி அகலும்போது தான், மனிதன் ஆண்டவனிடம் போய், 'இந்த வரம், அந்த வரம்' என்று யாசிக்க மாட்டான். அப்போது, அவன் தன் சுதர்மத்தைப் பின்பற்றிச் செயல் புரிவது தான் சிறந்த கடவுள் வணக்கம் என்று காண்பான். எந்தத் தொழிலைப் புரியினும், மனம் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டிருத்தலே சிறந்தது. திருவருளின் சன்னிதானத்தில், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடில்லை; எல்லாரும் சரிநிகர் சமானரே! ஏழைக் குடியானவனும், நெற்றி வியர்வை நிலத்தில் விழத் துடுப்புத் தள்ளும் படகோட்டியும் செய்கின்ற பக்தி, உண்மையான பிரார்த்தனையே யாகும்; இந்த ஏழைக் குரலின் அருள் விண்ணப்பம், உலகனைத்தும் ஒலிக்கிறது. பிளெச்சர் (Fletcher) என்னும் ஆங்கில நாடகக் கவிஞன் எழுதியுள்ள போந்துகா (Bonduca) என்னும் நாடகத்தில் காரட்டாக் (Caratach) என்பவனை, ஔதாத்தே (Audate) என்னும் தெய்வத்திடம் சென்று குறிகேட்கும்படி ஒருவன் சொன்னபோது,

> "திருவருள் வாக்கெலாம் நமது செய்வினைக் கேற்ற
> வாறே அமையும்; ஆதலின், மனிதனுக்கு அவனது
> ஆற்றல் ஒன்றுதான் அருளுடைத் தெய்வம்"

என்று காரட்டாக் பதிலளிக்கிறான்.

## பிறருக்கு உதவி

கஷ்டத்தை அனுபவிக்கிர ஒருவனைக்கண்டு நாம் மனமிரங்குதல், நம்மிடம் மனவுறுதியும் தன்னம்பிக்கையும் இல்லாதிருப்பதையே காட்டுகிறது. நீ மனமிரங்குவதால்

கஷ்டப்படுகிறவனுக்கு உன்னால் ஏதேனும் உதவி கிடைக்குமானால், மனமிரங்கு. அத்தகைய உதவி ஏதும் புரிய முடியாவிட்டால், உன் காரியத்தை மாத்திரம் கவனி; இடர்கள் தாமே விலகும். நாம் ஒருவனது துன்பத்தைக் குறித்து விசாரிப்பது, இழிவான செயல். ஏனெனில், அழுது புலம்பித் தவித்து வாழ்வோருக்கு இதமாய்ப் பேசி, இன்பத்தையும், உண்மையையும், ஆத்ம தீரத்தையும் போதிப்பதற்குப் பதிலாக, நாமும் அவர்களுடன் அருகில் வந்து சேர்ந்து உட்கார்ந்துகொண்டு, கூட அழுகிறோம்! உள்ளக் கிளர்ச்சியே, வெற்றியின் இரகசியம். எவனொருவன் தன்னைத்தானே சுய முயற்சியால் கைதூக்கி விட்டு அபிவிருத்தி செய்து கொள்ளுகிறானோ, அவனே கடவுளுக்கும் மனிதருக்கும் எப்போதும் விருப்பமானவன்; அவன், உலகோர் அனைவருக்கும் இனிய தன்மையன் ஆகிவிடுகிறான். அத்தகைய திடசித்த தீரனை, உலகோர் நன்கு மதித்து ஏற்றிப் போற்றுவர்; புகழ்வர்; ஆனந்தக் கண்ணீர் சொரிவர்; அவன் நமது அன்பை நாடுவதில்லை, எனினும், நமதுள்ளம் அவனிடம் தானே சென்று ஈடுபட்டு, அவனது பேரன்பிற்குக் காணிக்கையாகி விடுகிறது; அம் மனிதன், நமது இசை வசைகளைப் பொருட்படுத்தாமல், தன்னம்பிக்கையுடன், ஒரு புதிய தனி வழியைக் கடைப்பிடித்துச் செல்லுகிறான். அக் காரணத்தைக் கொண்டே அவனிடம் நாமே வலியச் சென்று, நயந்து பேசி, உள்ளன்பு காட்டி, அவனைப் புகழ்ந்து போற்றுகிறோம், அத்தகைய திடச் சித்தனை, பொறாமையால் மாந்தர் வெறுத்துப் பகைக்கினும், கடவுள் தனது அருளால் அணைத்துக் கொள்ளுகிறான். "தனக் கெய்தும் துன்பங்களையும், இடையூறுகளையும் கண்டு எவனொருவன் மனங்குலையாமல், தளரா மனவுறுதியுடனும், தன்னம்பிக்கையுடனும்

முன்னேறிச் செல்லுகிறுனே, அவனுக்கு உதவி புரியத் தேவர்கள் விரைந்து வருவர்" என்கிறுன், ஈரானிய ஞானி ஜாரதுஷ்டிரன்.

## அறிவும், மனமும்

ஆதலால் மாந்தர் இப்போது செய்துவரும் போலிப் பிரார்த்தனை, தம்மிடமே தமக்கு மனவுறுதி இல்லை என்பதைக் நிரூபிப்பதோடு, அவர்களது தற்காலச் செயலும், சிந்தனையும், அறிவும் அடியோடு மழுங்கி விட்டன என்பதையே விளக்கிக் காட்டுகின்றது. என் தோழன் ஒருவனுக்குள் பொதிந்து கிடக்கும் கடவுளை, நான் தரிசிக்க முடிகிறதில்லை; ஏனெனில், அவன் தனது மனப் பெட்டகத்தின் கதவுகளைப் பூட்டி விட்டு, தன் தம்பி, அல்லது அத் தம்பிக்கு தம்பியி னுடைய மனதில் உள்ள கடவுளைப் பற்றி, வெறுங் கதைகள் பேசிக்கொண்டு திரிகிறுன். ஒவ்வொரு உண்மை அறிவாளியும், ஒரு புதிய வேதவியாசனுவான். அவனுடைய அறிவின் மேதை, ஆங்கில மனேதத்துவ பண்டிதன் லாக் (Locke), பிரான்சின் இயற்கைத் தத்துவ ஞானி லவாசியே (Lavoisier), ஆங்கிலக் கணிதப் புலவன் ஹட்டன் (Hutton) ஆங்கில அர்த்த சாஸ்திரி பெந்தாம் (Bentham), பிரெஞ்சுக் கணிதப் புலவன் பூரியே (Fourier) முதலியோரின் அறிவைப் போல் ஆழமும், அபூர்வமான ஆற்றலும் அமைந்ததாய் இருக்குமாயின், அவன் தன் சித்தாந்தத்தை, மற்றவர்கள் உள்ளத்தில் எளிதில் பாய்ச்சி விடுவான்; விரும்பினுல், ஒரு தனி மதத்தையே கூட ஸ்தாபித்து விடுவான். அறிவாளிக்குச் சிறந்த உவகை அளிப்பது, அவனது கருத்துக்களைப் பிறர் எவ்வவு தூரம் ஏற்றுப் போற்றுகிறுர்கள் என்பதைப் பொறுத்துள்ளது. இவ்வுண்மையின் தத்து

வம், சமய கர்த்தாக்களிடையே நன்கு விளங்குகிறது. 'மதம்' என்பது யாது? அது, மனிதனுக்குப் போதிப்பதென்ன? அறத்தைப் பற்றியும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறித்தும் மதம் போதிக்கிறது. ஒரு தீர புருஷன், தனக்கு தோன்றியிருக்கும் சில அடிப்படையான உண்மைகளைக் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொண்டு அதனால் ஏற்படுத்தும் பாகுபாடே யொழிய, மதமென்பது வேறல்ல. கால்வின் (Calvin), குவேக்கர் (Quaker), ஸ்வேதன்பர்க் (Swedenborg) ஏனையோரின் சமயங்களும் இப்படியேதான் பிறந்தன. புதிய புதிய கருத்துக்களை நாம் ஆராய்ந் தறியும்போது, அவ்வுண்மை உதித்தவுடன் நமது மனம் என்றுமில்லாத களிப்பெய்துகிறது. ஒரு சீடன், தான் புதிதாய்க் கற்றுக்கொண்டு வருகிற பரிபாஷையில், மற்றெல்லா மொழிகளைக் காட்டிலும் சாரமிருப்பதாக எண்ணிக் கொண்டு ஆச்சர்யப்படுகிறான். ஆனால் அவன், அந்த மொழிக்கே மூல காரணமான குருவைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அந்த மூல புருஷனைச் சிந்திக்கச் சிந்திக்க, சீடனது அறிவின் சக்தி வளர்ந்து கொண்டே போகும்.

சமநிலை பெறாத மனிதனுக்கு, வகுப்பே வேதமாகி விடுகிறது. அதுவே, அவன் அடையத்தக்க பேறு எனத் தவறாக நினைத்துவிடுகிறான். அடிவானத்தின் முடிவைப் பார்த்து, 'இதுதான் அண்டத்தின் எல்லை' எனத் தவறாய் நினைப்பது போன்று, சிலர் தமக்கு எய்திய சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும், "இவையே எங்களது முடிவான உண்மை; சக்தியின் வரம்பு" என்று அறியாமையால் எல்லைகட்டி விடுகின்றனர். இத்தகைய மனிதர், பிற சமயத்தினரைப் பார்த்து, "உங்களுக்குச் சத்தியத்தைப்பற்றி என்ன தெரியும்? அதைக் காணக்

கூட உங்களுக்கு அருகதை இல்லையே ; எமது உண்மையே, பேருண்மை'' என்பர் ! வேறுசிலர், "எமது கோட்பாடு களிலிருந்து, நாங்கள் அறிந்தாராய்ந்து சேமித்து வைத் திருந்த சில உண்மைகளை நீங்கள் திருடிக்கொண்டு போய்விட்டீர்கள்'' என்பர். எது எப்படியாயினும், 'உண்மை ஒளியானது, எல்லா வரம்புகளையும் தாண்டி வந்து, எத்தனை தாளிட்டுப் பூட்டி வைத்திருந்தாலும், அந்த அறைக்குள்ளும் புகுந்துவிடும் என்பதை அவர்கள் அறிந்துணர்வதில்லை ! எங்கும் நிறைந்து விளங்கும் எல்லையற்ற பரம்பொருள்ச் சோதியானது, கோடி பிம்பங் களினின்று வெளிவருவது ; அது, கோடி நிறத்தது ; மண் ணும் விண்ணும் தகைந்தது. அது நித்திய இளமையுடன், பேரானந்தப் பரிபூரணமாய் விளங்கிக்கொண்டே நிலவுவது !

## தேச சஞ்சாரம்

உண்மையான பயிற்சி தம்மிடம் சிறிதளவாவது இருந்து வருவதை, அடியோடு போக்கிக் கொள்வதற்காகவே படித்த அமெரிக்கர், அன்னிய நாடுகளைப் போய்ப் பார்த் துவர மூடத்தனமாய் அவாவுகின்றனர். இத்தாலி, இங்கிலாந்து, மிஸரம் (Egypt) முதலிய நாடுகளெல்லாம் அவர்களுக்கு உயிர்க்குயிரான காட்சிப் பொருள்கள், குல தெய்வங்கள் ! ஆனால், இத்தாலி, இங்கிலாந்து, கிரீஸ் முதலிய நாடுகளைப் பெரிய திருத்தலங்களாகும்படி செய்த வர்களோ, அந்நாட்டைவிட்டு வெளியே அசையாமல், அங்கேயே அச்சாணிபோல் நிலைத்து நின்றவர்கள். ஆத லால், நமது ஆன்மவீறு வளர்ந்தோங்கும் வேளைகளில், நம் கடமையை அமைதியுடன் அமர்ந்திருந்து பார்க்க வேண்டிய இடந்தான், நாம் இருக்கவேண்டிய உண்மை இருக்கை என்று நமக்கே புலப்படும். ஆத்மா, ஊர்

சுற்றியன்று; ஞானி, தன் இல்லத்திலிருந்தே தனியின்பம் காண்பான். அவன், பிறதேசங்களுக்குப் போகவேண்டிய கடமை தனக்கு ஏற்படும்போதுகூட, வெளியூர் செல்ல விழைவதில்லை. அவன் திருமுகத்தை நோக்கில், 'இவன் அறத்தையும், ஞானத்தையும் பரப்பவந்த பரிவிராஜகன்; இத்தூய தேச சஞ்சாரி நகரங்களையும் ஆங்காங்குள்ள மக்களையும் அரசன்போல் பார்க்க வருகிறான்' என்ற நினைவுதான் நமக்கு உதிக்கும்.

கல்வி பயிலவும், கலையாராய்ச்சி செய்யவும் ஒருவன் அயல்நாடுகளுக்குச் செல்வதில், நமக்கு எவ்வித மூட ஆக்ஷேபணையுமில்லை. ஆனால், அம்மனிதன், எங்குசுற்றிய போதிலும், தனக்குள்ளேயே நிலைத்தவனாக நிலவ வேண்டும்; தன்அறிவைக் காட்டிலும் வேறு பெரிய பொருள் ஒன்றைத் திரட்டி விடலாம் என்ற நோக்கத்தோடு அவன் அன்னிய நாடுகளுக்குச் செல்பவனாய் இருக்கக் கூடாது; அப்படிச் சென்றால், அவன் தனது ஆத்மதிடத்தையும், சுதர்மத்தையுமே கைவிட்டவனாகி றான். வயதில் இளைஞனாயிருந்தும், எண்ணச் சேர்க்கையால் அவன் முதியவனாகி விடுகிறான். தேபெத்தையும் (Thebes', பால்மீராவையும் (Palmyra) பார்த்துப் பார்த்து அலுப்புத்தட்டி, அவனது அறிவுள்ளம் கிழண்டு போய் விடுகிறது! பிரயாணம் என்பது, மூடர்கள் விழையும் சுவர்க்கம். (இடமாற்றத்தில் ஒன்றுமே புதுமையில்லை) என்று, முதல் யாத்திரையே ஒருவனுக்குத் தெளிவு படுத்திவிடும். எங்கு சென்றாலும், அவன் அனுபவிக்க வேண்டிய துன்பமும், துயரும், கவலைச்சுமையும், அவனை நிழல்போல் தொடர்ந்தே வரும்.

## அன்னிய மோகம்

இந்த யாத்திரைப் பயித்தியம், ஒரு தனி இன்பமன்று; அது, அறிவின் நேரத்தைக் கொலைசெய்ய வந்த, ஒரு

வியாதியின் சின்னமாகும். இயற்கையில், மனிதனது சித்தம், சிதறியோடி அலையும் தன்மையது. மனக்குரங்கை அடக்குவது எளிதன்று. அது, சித்தத்தின் சஞ்சலத்தை வளர்த்து, நாம் கல்விகற்கும் விதத்தையே மாற்றி விடுகிறது. நாம் தேசயாத்திரை செய்யமுடியாதபோது நம் அறிவு சுழல்கிறது. 'ஒன்றைப் பார்த்து, அதைப் போலவே நாமும் செய்யவேண்டும்' என்பது, எதைக் காட்டுகிறது? அது நமது மனத்தின் ஸ்திரமின்மையைத் தெளிவுபடுத்துகிறது அல்லவா? சுயமாக எதையும் நாம் சிந்தித்துச் செய்வதில்லை. வீடு கட்டும்போதுகூட, நாம் அயல் நாட்டாரைப் பார்த்துக் கட்டுகிறோம். நம் வீட்டிலுள்ள அலமாரிகளில், அன்னியநாட்டுச் சாமான்களைக் காட்சிப் பொருளாக நிரப்பிவைக்க விரும்புகிறோம். நமது சிந்தனை, அபிப்பிராயம், சுவை, அறிவு, கலாசாரம்—எதை எடுத்துக் கொண்டாலும் சரி, இறந்தகாலத்தைச் சான்று காட்டுவதிலும், அயல் நாட்டின்போக்கை அபிநயிப்பதிலுமே நாம் நாட்டம் செலுத்துகிறோம். அன்னிய மோகம், நமது சித்தம், செயல் அனைத்தையும் பிடித்தலைக்கிறது. கலைகள் செழித்தோங்கின நாடுகளிலெல்லாம் மனிதனது வலிமைமிகுந்த உள்ளமே, அக்கலைகளை வடித்தெடுத்து வைத்திருக்கிறது. ஒரு சிற்பி, ஓர் உருவத்தைப் படைப்பதற்கு முன்னாலேயே, தன் மனக்கண்ணால் அந்த வஸ்துவின் சாயலை அமைத்துக்கொண்டு விடுகிறான். உருவத்தையும், அதை சிருஷ்டிக்கின்ற உபாயங்களையும் முதலில் தீர்மானிப்பது, அவனது வித்தை வெற்றியுறுதற்கு ஒருவிதச் சாதனமாகும். கிரேக்கர்களின் நேரியச் சிற்பத்தையும், கோத்திய ஜாதியாரின் கட்டிட அமைப்புகளையும் (Doric or Gothic modles) நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? நமக்கு அறிவாற்றலில்லையா? நமது அறிவு சூனியமாகி விட்டதா? பேரழகு, உள்ளத்தின் பெருமிதம்

கற்பனைத்திறன், சிருஷ்டிக்கும் ஆற்றல், எல்லாம் பிறரிடம் இருப்பதைப் போலவே, நம்மிடமும் இருக்கின்றன. அமெரிக்கச் சிற்பி, தான் கட்டப்புகும் வீட்டை, தன் நாட்டின் சீதோஷ்ணநிலை நிலத்தின் பரப்பு, அக்கம்பக்கத்தில் வசிக்கும் மக்களின் சௌகரியம், அரசாங்கத்தின் தன்மை, சட்டதிட்டங்களின் போக்கு, இவற்றை யோசித்து, அவற்றிற்குத் தக்கவாறு கட்டுவானாயின், தனக்கேற்ற வீட்டை அமைப்பான் என்பதில் சந்தேகமில்லை. மேலும், அத்தகைய வீடு,கண்ணுக்கு அழகாகவும், வசிக்கச் சௌகரியமாகவு மிருக்கும்.

## பிறரை அபிநயிக்காதே

அன்பா ! நீ, யாரையும் பார்த்து ஒருபோதும் அபிநயிக்காதே : உன் செயல்கள் அனைத்திலும், உன் உள்ளத்தில் இயல்பாக எழும் மனோதருமத்தை வெளிப்படுத்து. உனக்கு ஆண்டவன் அரிய சக்தியை அருளியிருக்கிறான். அதை நீ, உன் ஆயுள் முழுதும், பயின்றுவா ; கைவிடாதே. அதிலிருந்து ஏற்படும் முழுத் திறமையை, நீ எந்த நிமிஷத்திலும் உலகோருக்கு காட்டி மகிழும் தருணம் வந்துவிடும். பிறனிடமிருந்து ஒரு தொழிலை, நீ முழுதும் கற்றுக் கொள்வ தென்பது அரிது ; அந்த வித்தையை எத்தனை நாள் பயின்றாலும், அதில் நீ அரை குறையாகத்தான் இருப்பாய் ; முழுத் திறமையும் பெறுவது, உன் ஆற்றலைப் பொறுத்துள்ளது ; உன் தன்னம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. ஒரு தொழிலாளி, மற்றொரு தொழிலாளிக்குத் தன் வித்தையைக் கற்றுக் கொடுப்ப தென்பது, அறிவீனம் ; அவனைப் படைத்த கடவுள்தான் முற்றிலும் கற்றுத்தர முடியும். ஒரு மனிதன் எந்தத் துறையில் நிபுணனாவான், அல்லது எத் தொழிலில் புலமை பெறுவான் என்பதை, நமது படைப்புக் கடவுளே

காட்டும் வரையில், உலகில் யாராலும் துணிந்து சொல்ல முடியாது. ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியரைத் தயார் செய்யக் கூடிய உபாத்தியாயன் எங்கேனும் இருக்கிருனே? பிராங்க்ளின், நியூட்டன், வாஷிங்டன், பேகன் ஏனையோருக்கு அறிவூட்டத் தக்க குரு, எங்காவது இருப்பானே? ஒவ்வொரு மகா புருஷனும், தன்னறிவில் ஊறிய தன்னந் தனியனே யாவான்; இயற்புலமையால் அவதரித்த ஞான மணியே யாவான். ரோமாபுரியின் வீரப்புகழ்பெற்ற யுத்த வீரன், ஸிப்பியோ (Scipio) என்பவன், அன்னிபாலன் என்ற இணையற்ற மற்றொரு போர்வீரனைப் பொருது, வாகை மிலைந்தவன். இவன், எத்தனையோ குறுதிசயங்களைப் பிறரிட மிருந்து கற்றிருக்கக் கூடும்; ஆனால், அவனது குருதியில் தோய்ந்திருந்த ஸீப்பியோ (வீரத்) தன்மையை மாத்திரம் அவன் எங்கிருந்தும் கடன் வாங்கியிருக்க முடியாது! ஷேக்ஸ்பியரைப் படித்தவன், ஷேக்ஸ்பியராகி விட முடியுமா? முடியாது. ஆதலால் அன்பா, உனக்கு இயல்பாய் ஆண்டவனல் அருளப் பெற்ற வித்தையைப் பயில்; முழு மனத்தையும் அதிலே செலுத்து. 'விதி வலிது, விதி தடுக்கிறது' என்று வீணே அஞ்சாதே; அவ் விதியைத் தன்னம்பிக்கையும் நெஞ்சுக்கு நேர்மையான திடவலிவுங் கொண்டு போராடு. நிச்சயமாகத் திருவருள், உனக்குத் துணை நின்று, உன்னை வெற்றித்துறை சேர்க்கும்; உனக்கு எல்லாச் சித்திகளும் கிடைக்கும். நீ உன் செயலில் தைரியம் காட்டு; பீதி யடையாதே. மோஸஸ் (Moses). தாந்தே (Dante) போன்ற அருட் புலவர்களின் திருவாக்குகளை நிகர்த்த, அல்லது அவற்றிலும் மேலான வேறு புதிய மகாவாக்கியம், உன்னிடம் ஒரு நொடியில் எப்போதாவது வெளிப்பட்டு விடலாம். எங்கும் நிறைந்ததாய், எல்லாமானதாய், ஆயிரம் நாவுடையதாய் இயங்கும் ஆன்மா, ஒரு முறை தோன்றியமாதிரி, மறுமுறை காட்சி யளிப்பதில்லை.

ஆனால், நீ இந்த உலகைக் காக்க அவதரித்துள்ள அருட் பெரியார்களின் திருவாக்குகளை நன்றாகக் கேட்டு ஆராய்ந் தறிந்து, பதில் சொல். உன்னுடைய இயல்பான திறமை யிலேயே நீ நிலைத்து நின்று, உனது மனசாட்சி பணிக்கும் வண்ணமே நீ செயலாற்றி வருவாயானால், கால வெள்ளத் தில் மறைந்து புதைந்து போன யுகங்களை, நீ மீண்டும் புதிதாகச் சிருஷ்டித்தவனாகி விடுகிறாய்.

## ஜன சமூகம்

நமது மதக் கோட்பாடுகளும், கல்வியும், கலையும் அயல் நாடுகளை நோக்கி யிருப்பது போலவே, நமது ஜன சமு தாய ஏற்பாடுகளும், அன்னிய தேசங்களை தான் மாதிரி யாக ஏற்று நடிக்கின்றன. ஜன சமூகம் முன்னைவிட இப்போது நாகரிக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று சிலர் வியந்து கொள்ளுகின்றனர். ஆனால், உலகில் ஒரு மனிதனாவது நவநாகரிகத்தால் உயர்வுற்றிருப்பதாகத் தெரியவில்லை.

ஜன சமூகத்தில் விருத்தி என்பது சிறிதேனும் ஏற் படவில்லை. ஒரு புறம் அது முன்னேறினால், மறுபுறம் பின் செல்லுகிறது. அதில் இடைவிடாத மாறுதல்கள் பல ஏற்படுகின்றன: ஒரு சமயம் ஜன சமுதாயம், அநாகரிகத் திலிருந்து நாகரிகம் அடைகிறது; மறு சமயம் அந்த நாகரிகத்திலிருந்து மாறி விடுகிறது: கிறிஸ்து மதத்தை ஏற்றுக் கொள்ளுகிறது; செல்வத்தைச் சேமித்து வைக் கிறது; பூத நூல்களை உண்டாக்குகிறது. ஆனால், இந்த மாறுதல்களினால் மாந்தரின் குணத்தில் மட்டும் வளர்ச்சி காணப்படவில்லை, ஒரு நன்மையை எய்துவதற்குப் பதில், நாம் ஏற்கனவே கைவரப்பெற்ற நன்மையை நழுவவிட வேண்டியதிருக்கிறது. ஜன சமூகம், ஒரு சமயம் புத்தம்

புதிய கலைகளைச் சிருஷ்டிக்கிறது; ஆனால் மறு சமயம் அதற்கு ஈடாகப் பழைய உணர்வுகளைத் தாரை வார்த்து விடுகிறது.

### நவநாகரிகம்

போலி நாகரிகத்தாலும். சுக போகங்களாலும் தற்கால நவ நாகரிக மனிதன், உடல் வலிவிழுந்தான்; நடக்கத் திறனின்றி, நாலு கால் வண்டி செய்து விரைகிறான். ஆனாலும், அந்தோ! காலின் வலிவை அவன் இழந்து விட்டான்: கையில் பிரம்பூன்றி நடக்கிறான்; அவன் தசையில் வன்மை நீங்கி விட்டது. நல்ல அழகான 'சுவிஸ்' கடியாரம் கையில் வைத்திருக்கிறான்; ஆனால், சூரியனைப் பார்த்து, நேரம் அளந்து சொல்லும் இயலறிவை, அவன் இழந்துவிட்டான். அவனிடம் நேரம் பார்க்க, கிரெனிச் பஞ்சாங்கம் (Greenwich Almanac) இருக்கிறது. தேவையானபோது அதில் பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தினால், வான வெளியில் மிளிரும் உடுக்குலங்களைத் தெரிந்து கொள்ள அவன் முயலவில்லை. எதைக் கண்டாலும் நாகரிக மனிதன், நாட் குறிப்பெழுதி வைத்துக் கொள்ளுகிறான்; அதனால் அவன் ஞாபக சக்தி, பாழாய்ப் போய்விட்டது; அடியோடு அது மறைந் தொழிந்தது. புத்தக நிலையங்களில் உள்ள நூல்களெல்லாம், அவன் சுய அறிவையும், சிந்திக்கும் ஆற்றலையும் அழித்து விடுகின்றன. இன்ஷியூரன்ஸ் (ஆயுள் பாதுகாப்பு) செய்யும் ஸ்தாபனங்கள் அதிகரிக்க அதிகரிக்க, மனிதனது ஆயுளுக்கு நாள் தோறும் அபாயங்களும் வளர்ந்து கொண்டே போகின்றன! இயந்திரங்களால் மனிதனுக்குத் தொந்தரவு மிகவில்லையா? நாகரிக விருத்தியால் வீரியம் போய்விடவில்லையா? சாத்திர கோத்திரச் சடங்குகளால் கட்டப்பட்டிருக்கும் கிறிஸ்து மார்க்க மானது, மனிதனுக்கு

இயற்கையில் அமைந்துள்ள புராதன சுதர்மத்தின் வளர்ச்சியைக் குறைத்து விடவில்லையா? இவையெல்லாம் பெரும் கேள்விகளாய் இருக்கின்றன; காமக் குரோதாதிகளையும், சுக துக்காதிகளையும் வென்று, மனதைச் சலியாததாக்கி, தருமம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்துகின்ற கிரேக்க சித்தாந்திகளாகிய ஒவ்வொரு ஸ்தோயிக்கனும் (Stoic), கண்ணியமுள்ள ஸ்தோயிக்கனே ஆவான். ஆனால் கிறிஸ்தவ லோகத்தில் உள்ள கிருஸ்தவன், எங்கிலையில், எங்கே இருக்கிறான் என்பதை ஸ்தோயிக்கனுடன் சீர்தூக்கிப் பாருங்கள்:

மனிதனது உயரத்திலும் கனத்திலும் காலப்போக்கால் எப்படி மாறுதல் ஏற்படவில்லையோ, அப்படியே, அறத்தின் அளவிலும் மாறுபாடு காணவில்லை. முற்கால மனிதனைவிடத் தற்கால மனிதன் உயரமாயிருப்பதை, நாம் எங்கேனும் பார்த்திருக்கிறோமா? இல்லை! முற்கால மகான்களுக்கும், இக்காலப் பெரியார்களுக்கும் குணத்தின் போக்கு, தன்மை, தோற்றம் அனைத்தும் ஒரே மாதிரியாகத்தான் காண்கிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பௌதிகக் கலைகள், அறக் கோடுபாடுகள், தத்துவஞானம் இவையனைத்தும் ஒருங்கே சேர்ந்தும் உங, உச, நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த கிரேக்க ஞானி புளுட்டார்க்கின் வீரவிருந்தில் (Plutarch's Heroes) வரும் வீரர்களைக் காட்டிலும் பெரிய வீரர்களை நம் காலத்தில் உண்டாக்க முடியவில்லை. காலம் மாறியும், மனித ஜாதி வளர்ச்சியடையவில்லை. அதேனிய தேசாபிமானியும் தீரனுமான போசியோன் (Phocion), கிரேக்க மகாத்மா ஸொக்ரதன் (Socrates), அதேனியத் தத்துவஞானியான அனக்ஸகோரன் (Anaxagoras), கிரேக் ரசிகனும் கிரேக்க தருமதத்துவ சித்தனுமான தியாகெனன் (Diogenes) முதலிய மகான்கள், பெரிய தர்ம வீரர்களே எனினும்,

அவர்களுக்குப் பின் வந்த வழித்தோன்றல்கள் என்று குறிப்பிடத் தக்கவர் ஒருவரேனும் இதுகாறும் காணப் படவில்லை. உண்மையில் அவ் வீர புருஷர்களின் சந்ததியைச் சேர்ந்தவன் யாரெனில், அவர்களுடைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அபிநயிக்காமல், தன்னம்பிக்கையுடன் தனக்குத் தானே குருவாக இருந்து கொண்டு, ஒரு மதத்தைத் தானே ஸ்தாபிக்கக்கூடிய பேராற்றல் உடையவனே! ஒவ்வொரு காலத்தில் தோன்றும் நவீன இயந்திரங்களும், கலைகளும், அந்தந்தக் காலத்தின் தேவைகளை ஒருவாறு பூர்த்தி செய்கின்றனவே யொழிய, அவை மனித சக்தியைப் பூரணமாய் வளர்க்க இயலவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன்னுல் நூதனமாய்க் கண்டுபிடிக்கப் பட்ட இயந்திரத்தை, பிற்கால மக்கள் உபயோகிக்காமல் தள்ளிவிடுவதைப் பார்க்கிறோம். ஆனால் மகா புருஷனே, நிலையற்றதை நீக்கி, நிலையான நித்தியத்தைத் தேடுகிறான்; வெளியே காணும் கோசங்களை யெல்லாம் நீக்கிவிட்டு, உண்மை மனிதனைத்தான் கண்டு பிடிக்கிறான். போர்க் கருவிகளைப் பெருக்கி அவற்றைக் கொண்டு கடும் போர் புரியும் ரீதியை விஞ்ஞானத்தின் விருத்தியெனக் கருதியுள்ளோம். ஆனால், கூடாரங்கூட இன்றி, வெறுந் தரையில் தனது சேனைகளைப் படுத்துறங்கச் செய்தே நெப்போலியன் ஐரோப்பாவை வென்றான்! அவன் தனது சிப்பாய்களின் ஆற்றலையே ஆதாரமாகக் கொண்டு, பெரும் சேனையை நடத்தினான்: "போர் வீரர்களே! நமது ஆயுதங்கள், சேனைகளின் ஆகாராதிகள், உதவித்துருப்புகள், வண்டி முதலியவைகளைத் தூரத் தள்ளிவிடுங்கள். ரோம் வீரர் செய்ததுபோல நீங்களே தானியத்தை வாங்கிக் கொண்டு, அதை அரைத்து மாவாக்கி ரொட்டி செய்துகொண்டு தின்றால்தான், ஒரு சிறந்த படையை உண்

டாக்குவது எளிதாகும்" என்று லாஸ காஸஸ் (Las Casas) என்பவனிடம் சொல்லியிருக்கிருன், நெப்போலியன்.

ஜன சமூகம் அலை போன்று மேலும் கீழும் புரண்டு புரண்டு தவழ்கிறது. நீரலை, எழும் விழும்; தோன்றும் மறையும். ஆனால், அதனுள்ளிருக்கும் நீர் மறைந்து போகிறதில்லை. இன்றைக்கு 'ஒரு வகுப்பார்' என்று சொல்லப்படும் மனிதர் அனைவரும், அடுத்த ஆண்டிலே இறந்துபோய் விடுவதைக் காண்கிறோம். அவர்களது அனுபவமும், அவர்களுடன் மாண்டுபோய் விடுகிறது.

## உண்மைப் பேறு

அன்பா, நீ உன் செல்வத்தை நம்பிக்கொண்டிருந்தாலும், அல்லது அச் செல்வத்தைக் காப்பாற்றுகிற அரசாங் கங்களை நம்பிக் கொண்டிருந்தாலும், அது உன் தன் னம்பிக்கைக்குக் குறைவேயாகும். ஆத்மாவை விடுத்து அஃதற்றதைத் தேடியலைவதே உலக மாந்தர் இயல் பாகி விட்டபடியால், செல்வமே மனிதனுக்குப் பெறத் தக்க பெறும் பேறு என்றும், சத்சங்கம், கல்வி, அர சியல் கழகங்கள் அனைத்தும் செல்வத்தின் மெய்க்காப் பாளரென்றும் பாவிக்க தொடங்கி விட்டனர், உலகோர். ஆகையால், இந்த ஸ்தானங்களின் ஊழல்களை யாரே னும் வெளிப்படையாகத் தாக்க நேர்ந்தால், அவர்கள் தமது புருஷார்த்தங்களே தாக்கப்படுவதாகக் கருதி, எதிர்ப்போரை கடிந்து தடுக்கிருர்கள். ஒரு மனிதனிடம் உள்ள செல்வமே அவன் மதிப்புக்கு அளவுகோல் என்றும், அவனுடைய தன்மை மதிப்பிற்குறியதன்று என்றும் உலகோர் அறியாமல் நினைக்கிருர்கள். ஆனால், நல்ல அறிவாளியானவன், தன்னிடம் ஆஸ்தி யிருப் பினும் அதைக்கண்டு பெருமை கொள்ளாமல், நானு

கிறான். ஏன்? அவனுக்குத் தனது சொந்த நம்பிக்கையின் மீது அவ்வளவு மதிப்பு! தனது சங்க நிதி அவனுக்கு வார்சுரிமையாகவாவது, தானத்தாலாவது, அல்லது வேறு தவறுதலான வழியிலாவது கிடைத்திருக்குமாயின், அஃது அவனுக்குப் பெரும் அருவருப்பையே தரும்; களிப்புறுத்தாது. 'செல்வம், தன் உடைமையன்று; தன்னைச் சேர்ந்ததன்று; தன் சுய முயற்சியால் எய்தாது, பிறரிடமிருந்து வந்ததாதலின், அது தன்னைச் சேர்ந்ததன்று; அதன் வேர், தன்னுளில்லை; கள்ளனோ அன்றி அரசியல் புரட்சியோ அதை அபகரித்து விடாத காரணம் பற்றி, அது தன்னிடம் நிலைத்திருக்கிறது' என்று தன்னம்பிக்கையாளன் தெளிவாக உணர்கிறான். மனிதனால், உண்மையில், சுயமாகத் தேடப்படும் அழியாச் செல்வம், அவனுடைய அந்தக் கரண தத்துவங்கள்தான். அவையே அவனுடைய உண்மையான ஆஸ்தி. அரசனாலும், ஐம்பூதங்களாலும், அல்லது வேறு எந்தச் சக்தியாலும் அவை அபகரிக்க முடியாதவை. முகம்மதிய சித்தாந்தி கலீபா அலி, "உன் அதிர்ஷ்டம் உன்னைத் தேடிக்கொண்டு வலிய வரும்போது, நீ அதைப் பதறிப் போய்த் தேடியலையாதே" என்கிறான். அழியும் பொருள்களின் மீது நாம் இச்சை வைப்பதால்தான், 'அவை அழிந்தால் நாம் என்ன செய்வது' என்னும் அச்சம் நமக்கு உண்டாகி விடுகிறது. மனிதன், ஆயிரம் கட்சிகளை உண்டாக்கிக் கொள்ளுகிறான். ஆனால், நண்பர்களே! கடவுளை உங்கள் மனக் கோயிலில் புகுந்து வசிக்கச் செய்யும் வழி, கட்சிப் பிரிவினையன்று. எந்த மனிதன், என்றைக்குத் தனக்கு அன்னியமான பக்க பலங்களை ஒடுக்கிவிட்டு, தன்னம்பிக்கையில் ஊன்றித் தன்னந் தனியனாக நிற்கிறானோ அன்றே, 'அவன் பலவான்; அவனுக்கு எதையும் வெல்லும் ஆற்றலுண்டு'

என்று நான் துணிந்துரைப்பேன். ஒரு நகரத்தை விட, ஒரு மனிதன் வலியவன். ஆதலால், பிற மனிதரிடமிருந்து நீ உதவியை எதிர்பாராதே. அப்படி எதிர்பார்க்காதிருந்தால், எல்லையற்ற இடுக்கண் நேரினும் அதைத்தாண்டி, உன்னைச் சுற்றிச் சுழலும் அனைத்திற்கும் நீயே ஆதார புருஷனாகி விடுகிறாய். மனிதனது சக்திக்கு இருக்கை, அவனது உள்ளமே; ஆதலால், உன்னிடமுள்ள பேராற்றலையும் சுகத்தையும் அறிந்து தேடிப் பயன் படுத்திக் கொள்ளத் தெரியாது, நீ வேறிடங்களில் சுகத்தையும் நலத்தையும் வீணே தேடி யலையாதே, அலுக்காதே; அதனால்தான் உனக்கு வீரியமில்லாமல் போய் விடுகிறது. இவ் வுண்மையை, நீ அறிந்துணர்ந்து, உன் சுய அறிவு ஒன்றுதான் உனக்கு முற்றிலும் ஆதார மென்று நம்பி விடுவாயானால், உன் கோணலெல்லாம் நிமிர்ந்து நேராகிவிடும்; குறையெல்லாம் சீராகிவிடும். நேரே நிற்பவன், தன் கால் கைகளைச் சுவாதினப்படுத்திக் கொள்ளுகிறான். தலை கீழாக நிற்பவனை விட, நேராக நிற்பவன் திடமாக நிற்பானல்லவா?

ஆகையால், அன்பா! 'செல்வம்' என்று கூறப்படும் பொருள்களை நீ நன்கு பயன் படுத்து; உலகில் பெரும்பாலோர், அச் செல்வத்தைச் சரிவரப் பயன்படுத்துவதில்லை. அதன் சக்கரம் சுற்றச் சுற்றச் சூதாடுவது போல், ஒரு தடவை அனைத்தையும் ஜெயித்து விடுகிறார்கள்; மறு தடவை, உள்ளதையும் அடியோடு தோற்று விடுகிறார்கள். இத்தகைய லாபங்களை அற மற்றவை என்று தள்ளிவிட்டு, ஆண்டவனுடைய நிதிக்காவலர்களான காரணம், காரியம் என்பவைகளோடு நீ நெருங்கிப் பழகு; உள்ளத்தால் உழைத்து, உன் உள்ளத்தினுள்ளே சேர்க்க வேண்டிய விழுமிய பொருளை நீ சேர்த்து விடுவாயானால், உன் அதிர்ஷ்டத்தையே நீ எளிதில்

வென்றவனாகிறாய்; அவ்வதிர்ஷ்டம் மாறிவிடுமோ என்னும் பயம், உனக்கு ஏற்படாது. அரசியல் வெற்றி, குடிக்கூலி ஏற்றம், நோய்வாய்ப்பட்ட உன் நண்பனது ஆரோக்யம், வேற்றூர் சென்றிருந்த உன் சிநேகிதன் நல்வரவு, அல்லது இவைபோன்ற வேறு பல நற் செயல்களைக் கேட்கும்போது, உனக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகிறதல்லவா? ஏதோ நல்ல காலம் உனக்கு வந்துகொண்டிருக்கிறதென்றும் நீ நினைக்கிறாய்; அவ்விதம் நினைக்காதே. உன் உள்ளத்தைத் தவிர உனக்கு வேறொன்றும் அமைதியை அளிக்காது என்பதை நம்பு. தன்னம்பிக்கையும் ஆத்ம வெற்றியுமே உனக்கு அளவற்ற சாந்தியையும் இன்பத்தையும் தரும்.

முற்றிற்று.